*கவனிக்க .- 2015.06.19 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1921 - 2015 ජූනි මස 26 වැනි සිකුරාදා - 2015.06.26**

*1921 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 916 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 926 |
| துணைவிதிகள் | 928 |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூலை மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## காலி மாநகர சபை

காலி மாநகர சபையில் வெற்றிடமாக காணப்படும் கீழ்க்காணும் பதவிகளுக்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள காலி மாவட்டத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பதவிகள் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சேவையின் தன்மையும் வகுப்பும் | மாதாந்த சம்பள அளவுத் திட்டம் | ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவைப்படும் குறைந்தபட்ச கல்வித் தகைமைகளும், மேலதிகத் தகைமைகளும் அனுபவங்களும் |
|---|---|---|---|---|---|
| 1. | மரம்வெட்டுபவர் (ஆண் விண்ணப்ப தாரர்களுக்கு மாத்திரம்) | 01 | ஆரம்ப கலைஞர்கள் அல்லாத (III) | PL 1-2006 A ரூபா 11,730-120×10-130×10-145×10-160×12-ரூபா 17,600 (பொ. நி. சு. 6/2006 இன்படி) | கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 2. | நூலக உதவியாளர் | 01 | | | |
| 3. | வர்ணம் தீட்டும் உதவியாளர் | 01 | | | |
| 4. | வேலைத்துறை ஊழியர் | 17 | ஆரம்ப கலைஞர்கள் அல்லாத (III) | PL 1-2006 A ரூபா 11,730-120×10-130×10-145×10-160×12-ரூபா 17,600 (பொ. நி. சு. 6/2006 இன்படி) | 8 ஆம் தரம் (9 ஆம் வகுப்பு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 5. | சுகாதார ஊழியர் | 01 | | | |
| 6. | தகன அறை இயக்குநர் (ஆண் விண்ணப்பதாரர் களுக்கு மாத்திரம்) | 01 | ஆரம்ப பகுதி நேர கலைஞர்கள் (III) | PL 2-2006 A ரூபா 12,210-130×10-145×10-160×10-170×12-ரூபா 18,600 (பொ. நி. சு. 6/2006 இன்படி) | கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். உரிய பதவிக்குத் தேவையான தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் முடிவு செய்யப்பட்டுள்ள தேசிய தொழிற் திறமைகளில் (N. V. Q.) குறைந்தபட்சம் இரண்டாவது மட்டத்தினையாவது பெற்றிருத்தல். உரிய துறையில் அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும். |
| 7. | தச்சன் (ஆண் விண்ணப்பதார் களுக்கு மாத்திரம்) | 03 | ஆரம்ப பகுதி நேர கலைஞர்கள் (III) | | |
| 8. | கொல்லன் (ஆண் விண்ணப்பதார் களுக்கு மாத்திரம்) | 01 | ஆரம்ப பகுதி நேர கலைஞர்கள் (III) | | |
| 9. | மின்நுட்பவியலாளர் (ஆண் விண்ணப்ப தாரர்களுக்கு மாத்திரம்) | 01 | ஆரம்ப பகுதி நேர கலைஞர்கள் (III) | | |
| 10. | சாரதி | 08 | ஆரம்ப பகுதி நேர கலைஞர் (III) | PL 3-2006 A ரூபா 12,470-130×10-145×10-160×10-170×12-ரூபா 18,860 (பொ. நி. சு. 6/2006 இன் படி) | கல்விப் பொதுத் தராதரப் பத்திர பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட பாரமான வாகனங்களின் அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பதுடன் தேர்ச்சி பெற்ற சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும். சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றதிலிருந்து 03 வருட அனுபவங்களைப் பெற்றிருத்தல் வேண்டும். |

*2.* **வயதெல்லை :-**

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்;

(ii) தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதன்று.

*3.* **பொதுத் தகைமைகள் :-**

(i) விண்ணப்பதாரர் வம்சாவழியில் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) இலக்கம் 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள சாரதி பதவிக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் (கோரப்படும்) இறுதித் திகதிக்கு காலி மாவட்டத்தின் அதிகாரப் பிரிவில் கிட்டிய 5 வருடத்தினுள் 3 வருடங்கள் தொடர்ச்சியாக நிரந்தர வதிவிடத்தை கொண்டிருத்தல் வேண்டும் ;

(iii) ஏனைய பதவிகளுக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு கிட்டிய 3 வருடங்கள் காலி மாவட்டத்தில் வதிவிடத்தை கொண்டிருத்தல் வேண்டும் ;

(iv) விண்ணப்பதாரர் நற்பண்புடையவராகவும், உடல், உள ரீதியாக ஆரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்பட்டால் 3 மாத காலத்திற்குள் அரசின் மருத்துவ சோதனைக்கு உள்ளாக வேண்டியதுடன், அப்பரிசோதனையில் உடல் ஆரோக்கியம் அற்றவரென அறியப்படின், நியமனம் செல்லுபடியற்றதாக்கப்படும் ;

(v) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டிக்கப்படாதவராயிருத்தல் வேண்டும் ;

(vi) விண்ணப்பதாரர்களுக்கு உரிய பதவிகளுக்காக குறிப்பிடப்பட்ட குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*4.* **பொது நிபந்தனைகள் :-**

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அல்லது ஏற்றுக்கொள்ளப்படும் கால எல்லையில் அல்லது ஆட்சேர்ப்பு செய்தல் கால தாமதமாதல் அல்லது வேறுபடுத்தல் அல்லது இந்நிபந்தனைகள் செல்லுபடியற்றதாகுதல் அல்லது திருத்தம் செய்யும் அதிகாரம் காலி மாநகர சபையின் ஆணையாளருக்குரியதாகும்.

(ii) காலி மாநகர சபை அதிகாரப் பிரிவிற்குள் வசிப்பிடத்தைக் கொண்டிருத்தல் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.

5. **சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும் ;

(ii) விதவைகள், தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத்துக்கு பங்களிப்புச் செலுத்தல் வேண்டும் ;

(iii) இப்பதவி 03 வருட கால நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டதாகும்.

*6.* இவ்வாட்சேர்ப்புச் செய்யப்படும் நிபந்தனைகளுக்கும் சட்டங்களுக்கும் மேலதிகமாக இலங்கைச் சனநாயக குடியரசின் அரசியல் யாப்புக்கும், தாபனக் கோவைக்கும் நிதிப் பிரமாணங்களுக்கும் அமைய தென் மாகாண கௌரவ ஆளுநர் மூலம் 2013.04.16 ஆந் திகதிஅனுமதிக்கப்பட்ட இலக்கம் 239 கொண்ட தென் மாகாண அரசாங்க சேவையில் நிறுவனச் சேவையின் கனிஷ்ட ஊழியர்கள் சேவையில் ஆரம்ப பகுதி நேர கலைஞர்கள் மற்றும் கலைஞர்கள் அல்லாத சேவையாளர்களுக்கு ஏற்புடையவாறு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான ஒழுங்கமைப்பு உத்தரவுகளுக்கு ஏற்ப, தென் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2012.01.02 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட இலக்கம் 238 கொண்ட தென் மாகாண அரசாங்க சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் நிறுவனத்திற்குரிய சாரதிகளுக்காக சாரதிச் சேவை யாப்புக்கமையவும், அது சம்பந்தமாக காலாகாலத்தில் விநியோகிக்கப்படும் சட்டங்களுக்கும் திருத்தங்களுக்கும் ஏற்ற விதத்தில் சேவை செய்வதற்கு கட்டுப்படல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறை :**

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் முறையான நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

8. **நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படும் முறை.-**

(i) சாரதிப் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் போது புள்ளிகள் வழங்கப்படும் முறை வாய்மொழிப் பரீட்சைக்காக-

| | | | |
|---|---|---|---|
| க. பொ. த. (சா. த.) சித்தியடைந்திருத்தல் | (8×1) | - | 08 |
| க. பொ. த. (சா. த.) திறமையாகச் சித்தியடைந்திருத்தல் | (8×2) | - | 16 (ஆகக் கூடியது) |
| க. பொ. த. (உ. த.) சித்தியடைந்திருத்தல் | | - | 04 |
| தொழிற்துறைக்குத் தேவையான அறிவு | | - | 10 |
| உடல் திடகாத்திரம் | | - | 05 |
| தொழிற்துறைக்குத் தேவையான பயிற்சி அல்லது சேவை | | - | 15 |
| அனுபவம் ஒன்றைப் பெற்றிருத்தல் | | - | |
| மொத்தம் | | - | 50 |

சித்தியடைவதற்காக 40% (20 புள்ளிகள்) அல்லது அதிலும் கூடிய புள்ளிகளைப் பெறல் வேண்டும்.
தொழில்சார் நேர்முகப் பரீட்சைக்காக - 50
சித்தியடைவதற்காக 40% (20 புள்ளிகள்) அல்லது அதிலும் கூடிய புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

ஏனைய பதவிகளுக்காக புள்ளிகள் வழங்கப்படும் முறை

| தொடர் இல. | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறை | ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு | தெரிவுசெய்வதற்காக கவனத்திற் கொள்ளப்படும் குறைந்த புள்ளிகளின் அளவு |
|---|---|---|---|
| 1 | கல்வித் தகைமைகள் | 30 | |
| 2 | மேலதிக, தொழில்சார் தகைமைகள் (கோரப்பட்டிருப்பின் மாத்திரம்) | 10 | |
| 3 | அனுபவங்கள் | 10 | 50% |
| 4 | சபை அதிகாரப் பிரிவிற்குள் வதிவிடம் (ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம்) | 45 | |
| 5 | நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமைகள் | 05 | |
| | மொத்தம் | 100 | |

9. **விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை.-**
விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை அனுப்புதல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவிடத்தை உறுதிப்படுத்திய சான்றிதழ் (வதிவிடத்தின் கிராம உத்தியோகத்தர் மூலம் விநியோகிக்கப்பட்ட உரிய பிரதேசச் செயலாளரின் மேலொப்பத்துடன் 6 மாதங்களினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம சேவையினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ்) ;
(4) கடும் குற்றங்களுக்கு நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படாதவராகவும், அப்படியானவர்கள் அவ்வாறான குற்றங்களுக்கு மீண்டும் பரிசீலனைக்கு உட்படுத்தப்படாததுமான உறுதிப்படுத்தும் பொலிஸ் சான்றிதழ் ;
(5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் 02 ;
(6) தொழில்சார் அல்லது அனுபங்கள் பற்றிய சான்றிதழ் (சேவை அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் இருப்பின்.)

இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தை 2015.07.24 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "மாநகர ஆணையாளர்", மாநகர சபை, காலி" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். (விண்ணப்பப் படிவங்களை A4 அளவிலான தாளில் தயார் செய்து முன் வைத்தல் வேண்டும்.) பூர்த்தி செய்யப்படாத, தெளிவற்ற மற்றும் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களை எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை முன்வைத்தல் வேண்டும்.

ரணில் விக்கிரமசேகர,
மாநகர ஆணையாளர்,
காலி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
காலி,
2015, ஆனி 8.

| அலுவலக உபயோகத்திற்கு | |
|---|---|
| | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காலி மாநகர சபை**

.......................................................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. மாவட்டம் :----.
4. பிறந்த திகதி :----.
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
6. தொலைபேசி இல. :----.
7. பால் (ஆண்/பெண்) :----.
8. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :----.
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
9. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :----.
10. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின், வம்சாவழியினாலா? பதிவு மூலமா? என்பது பற்றி:----.
11. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சைகள் பற்றிய விபரம்) :----.
    (i) கல்வி கற்ற பாடசாலை :----.
    (ii) சித்தியடைந்த ஆண்டு/தரம்
    (iii) க. பொ. த. (சா. த) பரீட்சை :
    பரீட்சை எண் :----.
    பரீட்சை நடைபெற்ற ஆண்டும் மாதமும் :----.
    சித்தியடைந்த பாடங்கள் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

12. தொழில்சார் மற்றும் சேவை அனுபவங்கள் பற்றிய தகைமைகள் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்) :----.
13. நீர் கடும் குற்றங்கள் சம்பந்தமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :----.
    அவ்வாறாயின் தகவல்கள்:----.

இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவரின், நான் தகுதியற்றவன் ஆவேன் எனவும், பதவி கிடைத்ததன் பின்னர் அவ்வாறான விடயங்கள் தெரியவரின், எவ்வித நட்டஈடும் செலுத்தாது சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**(இப்பகுதி அரசசேவையில் உள்ளோர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.)**
**திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இத்திணைக்களத்தில் சேவை செய்யும் திரு./திருமதி/செல்வி .................................................................... தற்போது .............................. பதவி வகிக்கிறார் எனவும், அவரின் வேலைகள் மற்றும் நடத்தைகள் திருப்திகரமானவை எனவும், குற்றச் செயல்கள் எதுவும் இல்லை எனவும், அவற்றுக்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட தேவையில்லை எனவும், உறுதிப்படுத்துகின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின், சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.

---------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
உத்தியோகபூர்வ இலச்சினை :----.

6-636

---

**பெந்தோட்டை பிரதேச சபை**

தென் மாகாண அரசாங்க சேவையில் பெந்தோட்டை பிரதேச சபையின் கீழ் உள்ள பதவி வெற்றிடங்களுக்கு தென் மாகாண சபைக்குள் நிரந்தரமாக வசிக்கும் ஆண்/பெண் இருபாலாரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| இல. | பதவி வகை | தரம் | பதவி எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் | சேர்ப்பதற்கான தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | வேலை/துறைசார் தொழிலாளர் (ஆரம்ப தொழில் நுட்பம் அற்ற) | III | 03 | ரூபா 11,730-120×10-130×10-145×10-160×12-ரூபா 17,600 (PL 1-2006 A) | 8 ஆம் தரத்தல் (9 ஆம் ஆண்டு) சித்தி யடைந்து இருத்தல். |
| 02 | சுகாதார ஊழியர் (ஆரம்ப தொழில் நுட்பம் அற்ற) | III | 02 | ரூபா 11,730-120×10-130×10-145×10-160×12-ரூபா 17,600 (PL 1-2006 A) | 8 ஆம் தரத்தல் (9 ஆம் ஆண்டு) சித்தி யடைந்து இருத்தல். |
| 03 | வாகன ஓட்டுநர் (ஆரம்ப தொழில் நுட்பம் உள்ள) | III | 02 | ரூபா 12,470-130×10-145×10-160×10-170×12-ரூபா 18,860 (PL 1-2006 A) | 1. க. பொ. த. (சா/த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் 6 பாடங்களில் சித்தியடைந் திருத்தல்<br>2. மோட்டார் வண்டி போக்குவரத்து ஆணையாரினால் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் மற்றும் திறமை பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் குறைந்தது 3 வருட அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். |

**2. சேர்த்துக் கொள்வதற்கான பொது நிபந்தனைகள்:**

(1) விண்ணப்பதாரி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு கூடாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் கருமமாற்றுகின்றவர்களுக்கு இந்த வயதெல்லை கணக்கிலெடுக்கப்படமாட்டாது அவர்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்;
(2) விண்ணப்பதாரி பரம்பரையாக அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
(3) விண்ணப்பதாரி குறைந்தபட்சம் 3 வருடமாவது தென் மாகாணத்தில் வசிப்பவராகவிருத்தல் வேண்டும்;
(4) சிறந்த நன்னடத்தையுடையவராகவும், சிறந்த உள மற்றும் உடலாரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்;
(5) விண்ணப்பதாரி நீதிமன்றத்தில் எவ்வித குற்றங்களுக்கும் உள்ளாகாதவராக இருத்தல் வேண்டும் ;
(6) குறிப்பிட்ட துறையில் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்;
(7) விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட பதவிகளுக்கான தகுதிகளை விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*3.* **பதவியில் அமர்த்துவதற்கான சேவை நிபந்தனைகள்:**

(1) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்தை கொண்டதுமாகும்;
(2) விதவை, அநாதை ஓய்வூதியத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்;
(3) பெந்தோட்டை பிரதேச சபையில் தற்போது பயிலுநர், அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் வேலையில் உள்ளவர் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படும்;
(4) இந்நியமனம் 3 வருட கால தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்;
(5) இவ் ஆட்சேர்ப்புக்கான நிபந்தனைகளும், ஒப்பந்தங்களும் தவிர இலங்கை குடியரசின் அலுவலக கோவை ஒப்பந்தங்களும் அரச திணைக்கள கட்டளைகளுக்கும், தென் மாகாண சபை அல்லது பெந்தோட்டை பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் ஒப்பந்தங்கள், கட்டளைகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

*4.* **சேர்த்துக்கொள்ளும் முறை :**

(1) விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்படுவதோடு சேர்த்துக்கொள்ளும் விதிமுறைகளுக்கு அமைய கீழே குறிப்பிட்டுள்ளவாறு புள்ளிகளின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

| புள்ளி வழங்கப்படும் துறைகள் | உச்ச புள்ளியின் அளவு | தெரிவு செய்வதற்கு தேவைப்படும் ஆகக் குறைந்த புள்ளியின் அளவு 50% |
|---|---|---|
| 1. கல்வித் தகைமைகள் | 30 | |
| 2. மேலதிக தகைமைகள் | 10 | |
| 3. அனுபவம் | 10 | |
| 4. பிரதேச எல்லைக்குள்ளான வதிவு (1 வருடத்திற்கு 15 புள்ளிவீதம்) | 45 | |
| 5. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 | |
| **மொத்தம்** | **100** | |

(2) அரச வர்த்தமானியில் அல்லது பிரசித்த அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின் நேர்முகப் பரீட்சையின் மூலமும் தொழில் தகைமை பரிசீலனை மூலமும் சேர்த்துக்கொள்ளப்படும்.

5. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.-**

விண்ணப்பங்கள் இந்த அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய 12"×8" அளவு தாளில் தயாரித்து 2015.07.30 ஆந் திகதியோ அதற்கு முன்போ "செயலாளர், பெந்தோட்டை பிரதேச சபை, பெந்தோட்டை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் இடும் உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடல் வேண்டும். பூரணமற்றவையாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. விண்ணப்பங்களை கோரிய பின்னர் அல்லது கோரப்படும் போது இந்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதை தாமதப்படுத்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இந்த அறிவித்தலை செல்லுப்படியற்றதாக்குதல் அல்லது திருத்தம் செய்தல் போன்ற அதிகாரங்கள் பெந்தோட்டை பிரதேச சபைச் செயலாளரைச் சாரும்.

ஆர். எச். என். எஸ். தேசப்பிரிய,
செயலாளர்,
பெந்தோட்டை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பெந்தோட்டை,
2015, ஆனி 9.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**பெந்தோட்டை பிரதேச சபை**

......................................................................... பதவிக்காக விண்ணப்பித்தல்

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   1.2 முதலெழுத்துக்கள் குறிப்பிடுகின்ற பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.

4. பிரதேச செயலாளர் பிரிவு :----.
5. பிறந்த திகதி :----.
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
6. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு வயது :----.
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
7. பால் (ஆண்/பெண்) :----.
8. திருமணமானவரா? ஆகாதவரா? :----.
9. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
10. தொலைபேசி இல. :----.
11. நீர் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின், பரம்பரை மூலமா அல்லது பதிவு மூலமாகவா? :----.
12. கல்வித் தகைமைகள் பற்றிய விளக்கம் :----.
13. தொழிற் தகைமைகள் :----.
14. நீர் தற்போது இப்பிரதேச சபையில் வேலை செய்பவராயின்-
1. தற்போது செய்யும் தொழில் :----.
2. அந்நியமனத்தின் தன்மை :----.
3. அந்நியமனத்தினை பெற்ற திகதி :----.
15. நீர் எப்போதேனும் தவறுகளுக்குட்பட்டு நீதிமன்றம் மூலம் தண்டனைகளுக்குட்பட்டுள்ளீரா?:----.
16. விண்ணப்பதாரர் உறுதியுரை

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள ஏதாவது விடயங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நான் இப்பதவிக்கு பொருத்தமானவரல்ல எனவும் எதுவித நட்டஈடுமின்றி பதவி நீக்கம் செய்வதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**17. அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் தற்போது சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்நிறுவனத்தில் .................................................................... பதவி வகிக்கும் திரு./திருமதி/செல்வி .................................. என்பவரின் விண்ணப்பத்தினை அங்கீகரித்து அனுப்புகிறேன். அவர் எவ்வித ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் உட்படவில்லை எனவும், இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதனையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

---------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

6-743

---

**கிரிபாவ பிரதேச சபை**

வடமேல் மாகாண அரசாங்க சேவையில் வெற்றிடங்களை நிரப்புதல்

கிரிபாவ பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக உரிய தகைமையுடைய வடமேல் மாகாணத்தினுள் நிரந்தரமாக குடியிருப்பாளர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் வதியும் நிரந்தரக் குடியிருப்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

விண்ணப்பதாரிகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து "செயலாளர், கிரிபாவ பிரதேச சபை, தம்புத்த" என்ற முகவரிக்கு 2015.07.17 ஆந் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல்.

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | ஆகக்கூடிய தகைமை |
|---|---|---|---|---|
| 01 | மின் தொழில்நுட்பவியலாளர் III ஆம் தரம் (ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெற்ற) | 01 | அ. நி. சு. 06/2006 IV (PL 1-2006 A) வண்ணம் ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,600 | (1 ஆம் குறிப்பினை பார்க்கவும்) |

| தொடர் இலக்கம் | பதவிப்பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | ஆகக்கூடிய தகைமை |
|---|---|---|---|---|
| 02 | தொழில் துறை தொழிலாளர் III ஆம் தரம் (ஆரம்ப தரத்தில் தேர்ச்சி பெறாத) | 01 | அ. நி. சு. 06/2006 IV (PL 1-2006 A) வண்ணம் ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | (2 ஆம் குறிப்பினை பார்க்கவும்) |

**குறிப்பு - 01**
மின் தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக பூர்த்தி செய்திருக்க வேண்டிய கல்வித் தகைமைகள்.

**வெளி விண்ணப்பதாரிகள்**
கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து)

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**
அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல்.

**தொழில்நுட்ப திறமை**
அரசினால் அனுமதிக்கப்பட்ட தொழில்நுட்ப வித்தியாலயத்தில் அல்லது தொழில் பயிற்சி நிறுவனத்தில் அல்லது முன்நிலை நிறுவனம் ஒன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் மின் தொழில்நுட்பவியல் பற்றிய பயிற்சிச் சான்றிதழ்.

**அனுபவம்**
தொழிலுக்கு உரிய துறையில் அரச நிறுவனத்தில் அரச கூட்டுத்தாபனம்/சபை/அதிகார சபை அல்லது வேறு அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சேவை செய்திருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

**குறிப்பு - 02**
தொழில்/துறைசார்ந்த தொழிலாளர் பதவிக்காக பூர்த்தி செய்திருக்கவேண்டிய கல்வித் தகைமைகள்.

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**
கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது இரண்டு பாடங்களாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து)

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**
அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் 8 ஆம் தரம் (9 ஆம் ஆண்டு) சித்தியடைந்திருத்தல்.

2. **ஆட்சேர்ப்பு முறை.-** விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமைகள் பரிசீலிக்கப்பட்டபின் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை.-**

* இந்த பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உடையது.
* விதவைகள், அநாதைகள்/விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு உட்படுதல் வேண்டும்.
* தேர்ந்தெடுக்கப்படும் சேவையாளர் 3 வருட காலத்திற்கு நன்னடத்தை காலத்திற்குட்படுவர். அந்த காலத்தினுள் வேலை, வருகை மற்றும் நடத்தை என்பன மகிழ்ச்சிகரமாக இருந்தால் நன்னடத்தை காலத்தின் முடிவில் நியமனம் உறுதி செய்யப்படும்.

4. **வேறு பொது நிபந்தனைகள்.-**

* விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது);
* விண்ணப்பதாரி பரம்பரையாகவோ பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
* நல்லொழுக்கமுடையவராகவும் ஆரோக்கியமாகவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
தேர்ந்தெடுக்கப்படுவாராயின் ஒரு மாதத்தினுள் அரச மருத்துவர் ஒருவரினால் நடாத்தப்படுகின்ற வைத்திய பரிசீலனைக்கு உட்படுதலுடன், அந்த பரிசீலனையின் போது உடல் ரீதியில் தகைமையற்றவர் என்று தெரிய வந்தால் நியமனம் இரத்துச் செய்யப்படும்;

* தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்;
* விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு 3 வருடங்களுக்கு குறையாத காலம் கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். (பதிவினை வாக்கு பட்டியல் மூலம் அல்லது பிரதேச செயலாளரினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.);
* தற்போது கிரிபாவ பிரதேச சபையில் நிரந்தர, அமய, தற்காலிக, கொடுப்பனவு, ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (நற்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்);
* அரசினால் அல்லது மாகாண அரச சேவையில் இருந்து விலக்கப்பட்டவர்களும் அரச நிருவாக சுற்றுநிருப இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராகவும் இருத்தலாகாது;
* அரசினால் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் பொறுப்பேற்கும் கடைசித் திகதிக்கு 5 வருட காலத்தினுள் குற்றத்திற்கு (எச்சரிக்கைக்கு) தண்டனை பெறாதவரும், இந்த காலத்தினுள் வழங்கப்பட்ட சம்பள உயர்வுகள் உரிய காலத்தினுள் பெற்ற மகிழ்ச்சிகரமாக சேவை காலத்தினை பெற்றவராக இருத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவர் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு மேலும் பங்களித்தல் வேண்டும்;
* இந்த ஆட்சேர்ப்பு மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தபான விதிக்கோவை, நிதிச் சட்டம், அரச திணைக்கள கட்டளைகளுக்கும், வடமேல் மாகாண சபை அல்லது கிரிபாவ பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் கட்டளை மற்றும் நிபந்தனைகளுக்கும் அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு உடன்படுதல் வேண்டும்.

5. **விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முறை.-**

இந்த அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு அமைய ஒழுங்குப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் 2015.07.17 ஆந் திகதிக்கு முன் அல்லது அத்திகதிக்கு கிடைக்கக்கூடியதாக “செயலாளர், கிரிபாவ பிரதேச சபை” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பதவியினை குறிப்பிடுதல் வேண்டும். தற்போது அரச, மாகாண அரச சேவை விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை நிருவாக தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் ஏ4 அளவிலான கடதாசியில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.) பூரண மற்றும் உரிய திகதிக்கு பின்பு கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் நிழற்படப் பிரதிகளை இணைத்து அனுப்பவேண்டியதுடன் நேர்முகப் பரீட்சையின்போது மூலப் பிரதியினை சமர்ப்பித்தல் வேண்டும் :-

1. பிறப்புச் சான்றிதழ்;
2. கல்விச் சான்றிதழ்;
3. வதிவு பற்றிய கிராம அலுவலரின் சான்றிதழ்;
4. அண்மையில் பெற்றுக்கொண்ட நல்லொழுக்கம் பற்றிய சான்றிதழ்;
5. தொழில் அனுபவம் பற்றிய சான்றிதழ்;
6. சேவைச் சான்றிதழ் (தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்).

7. இந்த விண்ணப்பப்படிவம் கோரப்பட்ட பின் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பு காலத்தினை தாமதப்படுத்தல் அல்லது வேறுபடுத்தல் மற்றும் இந்த அறிவித்தலினை இரத்துச் செய்தல் போன்றவற்றுக்கான எல்லா அதிகாரமும் கிரிபாவ பிரதேச சபை செயலாளருக்குரிய தாகும். சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பெயர்ப்புகளில் ஏதேனும் வேறுபாடு காணப்படுமாயின் சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

டீ. ஏ. திசாநாயக்க,
செயலாளர்,
கிரிபாவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கிரிபாவ,
2015, யூன் 19.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கிரிபாவ பிரதேச சபை**

........................................................................ பதவிக்காக ஆட்சேர்ப்பு

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :----.
   முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. நிரந்தர மாவட்டம் :----.
3. பிரதேச செயலாளர் பிரிவு :----.
4. நிரந்தர முகவரி :----.
5. பால் (ஆண்/பெண்) :----.
6. பிறந்த திகதி :----.
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
7. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு வயது :----.
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
9. திருமணமானவரா/திருமணமாகாதவரா என்பது பற்றி :----.
10. நீங்கள் இலங்கை பிரசையா ? அவ்வாறாயின் பரம்பரையாகவா? பதிவு முறையிலா? :----.
11. கல்வித் தகைமை - (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :----.
12. தொழிற் தேர்ச்சியும் அனுபவமும் :----.
13. நீங்கள் தற்போது இந்த தற்காலிக சேவையில் ஈடுபடுவதாயின் சேவைக் காலமும் அது பற்றிய விபரமும் :----.
    அந்த நியமனத்தின் தன்மை (நிரந்தர/அமய/தற்காலிக/மாதிரி/கொடுப்பனவு அடிப்படையில்)

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்று இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்குவதற்கு கீழ் படிகின்றேன் என்றும் எனக்குத் தெரியும்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

திரு./திருமதி/செல்வி ........................................................................ இந்த நிறுவனத்தில் .................................... ஆக சேவையில் உள்ளார். இந்த பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படின் அவர் தற்போது வகிக்கின்ற பதவியில் இருந்து விடுவிக்கலாம்/விடுவிக்க முடியாது. அவர் எவ்வித தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை என்று சான்றுப்படுத்துவதுடன் அவரினால் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை சிபாரிசு செய்கின்றேன்/சிபாரிசு செய்யவில்லை.

---------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(பதவி முத்திரையினை இடவும்)
திகதி :----.

6-745

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## திக்குவெல்ல பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (1) (ஆ) பிரிவின் கீழான அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 (1) (ஆ) ஆவது பிரிவின் நியதிகளின்படி தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்ட திக்குவெல்ல பிரதேச சபையின் மூலம் இங்கு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதை பொதுவான உபயோகத்திற்காக திக்குவெல்ல பிரதேச சபைக்கு உரிமையாக்குவதற்கு 2015.01.16, 2015.02.12 ஆந் திகதிகளில் நடைபெற்ற சபைக்கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.*

*பிரதேசப் பொது மக்களினாலாவது அல்லது சம்பந்தப்பட்ட பாதைக்குரிய இடங்களுக்கு உரிமையாளர்களாக உரிமைகோரும் தரப்பினர்களினாலாவது ஏதேனும் எதிர்ப்பு தெரிவிப்பதேயானால் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசரமான திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தங்களது எதிர்ப்பைச் சாட்சிகளுடன் எழுத்துமூலமாக திக்குவெல்லை பிரதேச சபைக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*சொல்லப்பட்ட கால எல்லைக்குள், இவ்வறிவித்தலின்படி செயல்படாவிடின், எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை எனக் கருதி இவ்வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசரிக்கப்பட்டுள்ளதன் படி கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையை, திக்குவெல்லை பிரதேச சபைக்கு உரிமையான பாதையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிர்வாகம் செய்யப்படும் என்பதைப் பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.*

எம். எஸ். ரத்னவீர,
செயலாளர்,
திக்குவெல்ல பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,*
*திக்குவெல்லை,*
*2015, யூன் 8.*

### அட்டவணை

| தொடர் இல. | வீதியின் பெயர் | வீதியின் ஆரம்பம் | வீதியின் வலது பக்கம் | வீதியின் இடது பக்கம் | வீதியின் நீளம் (மீற்றர்) | வீதியின் அகலம் (மீற்றர்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | சமகி மாவத்தை | தியகஹகே வத்தை | 1. மெதருப்பை | 1. மெதருப்பை | 134.68 | 2.44 |
| | | | 2. மெதருப்பை | 2. தியகஹகே வத்தை | | |
| | | | 3. மெதருப்பை | 3. மிரிஸ்வல மண்டிய | | |
| | | | 4. மெதருப்பை | 4. மிரிஸ்வல மண்டிய | | |
| | | | 5. தியகஹகே வத்தை | 5. பதுரகஹகேல்ல | | |
| | | | 6. இஹலவத்தை | 6. உடஹவத்தை | | |
| | | | 7. தியகஹகே வத்தை | | | |
| | | | 8. உடஹவத்தை | | | |

| தொடர் இல. | வீதியின் பெயர் | வீதியின் ஆரம்பம் | வீதியின் வலது பக்கம் | வீதியின் இடது பக்கம் | வீதியின் நீளம் (மீற்றர்) | வீதியின் அகலம் (மீற்றர்) |
|---|---|---|---|---|---|---|
| 2. | போகஹ கொட்டுவ மாவத்தை | சந்தலுவ மாவத்தை | 1. எச். எல். ரவிசான் அவர்களின் காணி<br>2. காமினி கனிகார அவர்களின் காணி<br>3. எம். பீ. பிரேமரத்ன அவர்களின் காணி<br>4. ரெஜினா கவிரத்ன அவர்களின் காணி<br>5. ரஞ்சித் கவிரத்ன அவர்களின் காணி | 1. போகஹ கொரட்டுவ<br>2. விஜயதாஸ அவர்களின் காணி<br>3. சயான் விக்ரமரத்ன அவர்களின் காணி | 150 | 5 |
| 3. | மிஹிது மாவத்தை | நாகுலுகமுவ வீதி | 1. சரத் அவர்களின் காணி<br>2. சரத் அவர்களின் காணி<br>3. கே. எச். குணவதி அவர்களின் காணி | 1. கே. எச். விமலசேன அவர்களின் காணி<br>2. கே. எச். பியசேன அவர்களின் காணி<br>3. நிமல் குணதுங்க அவர்களின் காணி | 341 | 2.7-3.5 |
| 4. | 4 ஆவது தெரு | மெண்டிஸ் மாவத்தை | 1. குணதாச ஹெட்டி ஆரச்சி அவர்களின் காணி<br>2. ரஞ்சித் வீரசிங்ஹ அவர்களின் காணி<br>3. பியல் பந்துல அவர்களின் காணி<br>4. லியனகே பியரத்ன அவர்களின் காணி<br>5. எச். ஆர். சுசந்த அவர்களின் காணி<br>6. ஈ. டபிள்யூ. சுதத் தம்மிக அவர்களின் காணி<br>7. ஏ. பி. பியதாஸ அவர்களின் காணி | 1. சுகாதார வைத்திய நிலையம்<br>2. ஹேவா அவர்களின் காணி<br>3. டபிள்யூ. எச். பியதாஸ அவர்களின் காணி<br>4. குணதாஸ ஹெட்டிஆரச்சி அவர்களின் காணி<br>5. கே. டி. ஜகத் அவர்களின் காணி<br>5. டபிள்யூ. சுமதிபால அவர்களின் காணி | 251.30 | 4 |
| 5. | பண்டாரவத்தை வீதி | மெண்டிஸ் வீதி | 1. ஜயசேன நிகமுனி அவர்களின் காணி<br>2. டீ. தயாபால அவர்களின் காணி | 1. எச். டீ. குணவீர அவர்களின் காணி<br>2. காமினி ஜயசேகர அவர்களின் காணி<br>3. எச். ஆர். துஷார வசந்த அவர்களின் காணி | 58.17 | 4.4 |

# துணை விதிகள்

**குருநாகல் மாநகர சபை**

*குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் சாப்பாட்டுக் கடை, சிற்றுண்டிச் சாலை, தேநீர் அல்லது கோப்பிக்கடைகளை கொண்டு நடாத்திச் செல்வதினை முறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் நிருவகித்தல் பற்றிய இடைநிலைச் சட்டம்*

*(252 ஆம் அத்தியாயமான) 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 267 ஆம் பிரிவின் முதலாவது உப பிரிவுடன்சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் (22) ஆம் உப பிரிவில் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி குருநாகல் மாநகரசபையினால் அமைக்கப்பட்ட மற்றும் 2014.09.30 ஆந் திகதி நடந்த உரிய மாநகர சபையின் 4(1) ஆன பிரேரணையினால் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குருநாகல் மாநகர சபையின் குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் சாப்பாட்டுக் கடை, சிற்றுண்டிச்சாலை, தேநீர் அல்லது கோப்பிகடைகளைகொண்டு நடாத்திச் செல்வதினை முறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் நிருவகித்தல் பற்றிய துணைவிதி 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான) கோட்பாட்டுச் சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்கூறப்பட்ட மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 268 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவுப் படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டது பற்றி இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*சட்டத்தரணி ஜே. பி. தயாசிறி பத்மகுமார ஜயசேகர,*
*உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்,*
*வடமேல் மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*வடமேல் மாகாணம்,*
*குருநாகல்,*
*2015, யூன் 05.*

**அட்டவணை**

**குருநாகல் மாநகர சபை பிரதேசத்தினுள் சாப்பாட்டுக் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக்கடைகள் பற்றிய துணை விதிகள்**

*துணை விதியின் பெயர்.*

*1. இப்பகுதியின் துணை விதிகள் குருநாகல் மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் சாப்பாட்டுக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக்கடைகளை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும்.*

*நோக்கம்.*

*2. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் படி மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் மக்கள் சுகாதாரமும் உடல்நலத்தினை கொண்டு நடாத்தும் நோக்காகக் கொண்டு இந்த துணை விதி அமைக்கப்பட்டுள்ளது.*

*துணை விதியினை அமைப்பதற்காக சட்டரீதியான.*

*3. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 (1) ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 272 (22) ஆம் உப பிரிவின் கீழ் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இந்த துணை விதி அமைக்கப்பட்டுள்ளது.*

*4.* இத்துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, எந்தவொரு சாப்பாட்டுக்கடை, சிற்றுண்டிச்சாலை மற்றும் தேநீர் அல்லது கோப்பிக்கடையொன்றை நடாத்துவதற்கு நகர ஆணையாளரினால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது. செய்யவேண்டிய அலுவல்கள்.

(1) இடம் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) இடத்தின் அனைத்து அறைகளின் சுவர்களும் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இரு பக்கங்களுக்கும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும். எனினும், சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப்பலகையினால் அல்லது ஏதேனும் உலோகத் தகடு வர்க்கத்தினால் அல்லது மரப்பலகையும் ஏதேனும் உலோக தகடு வர்க்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் இப்பிரமாணத்திற்கு அமைவானதெனக் கருதுதல் வேண்டும்.

(3) இடத்திலுள்ள அனைத்து அறைகளுக்கும் உட்கூரைகள் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய உட்கூரைகள் நிலத்திலிருந்து குறைந்தபட்சம் 2.5 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(4) அனைத்து அறைகளுக்கும் திறந்து வைக்கக்கூடிய ஜன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு அறைகளினதும் ஜன்னல்களைக் திறக்கும் போது அத்தகைய ஜன்னல்களின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவின் பதினைந்தில் ஒரு பங்குக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஆயினும், ஏதேனும் அறை எயர் கொண்டிஷன் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இப்பிரமாணம் ஏற்புடையதாகாது.

(5) கூரை ஏதேனும் நிலையான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) தாழ்வாரத்தின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 2 மீற்றர் உயரத்தில் இருப்பதுடன், தாழ்வாரம் ஆகக்குறைந்தது 1.5 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(7) அனைத்து அறைகளினதும் தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(8) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளைச் சேகரிப்பதற்காக கழிவுப் பாத்திரங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, சமையலறையினுள் வைக்கப்படும் கழிவு பாத்திரங்கள் இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள், விலங்குகள் உட்புகாதவாறு மூடிவைக்கக்கூடிய மூடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(9) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளை அப்புறப்படுத்தல் 11 ஆவது துணைவிதியின் பணிப்புகளுக்கமைய செயலாற்றும் விதத்தில் அவசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) இடத்தின் சமையலறையில் பாவிக்கப்படும் அனைத்து மேசைகளும்-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்,

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(11) இடத்தில் வாடிக்கையாளரின் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து மேசைகளும்-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு

ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடை வெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(12) பாவனைக்கு எடுக்கின்ற நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் மாத்திரமன்றி குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் இத்தரச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரைப் பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(13) இடத்தின் கருமங்களுக்காக பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடைவதைக் தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(14) வாடிக்கையாளர்களால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவுவதற்கு தனிவேறான பகுதியொன்று இடத்தில் இருத்தல் வேண்டும்.

(15) வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் பாவனைக்காகக் குறைந்தது பத்துப் பேருக்கு ஒன்றென்ற வீதம் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(16) அனைத்து மலசலகூடங்களும் அவற்றின் சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் அல்லது ஏதேனும் துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் நிர்மாணிக்கப்பட்டு தரை சீமொந்தினால் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அதே போன்று மேலும் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்ட சுவராயின் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெரு கூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, துருப்பிடிக்காத உலோக தகடுகளால் நிர்மாணிக்கப்பட்ட சுவராயின் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(17) இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பாவனைக்காக குளியல் அறைகள் போதியளவு எண்ணிக்கை இருத்தல் வேண்டுமென்பதோடு, (15) ஆவது பந்தியில் மலசலகூடங்களுக்கு ஏற்புடைய பணிப்புக்களை அத்தகைய குளியல் அறைகளின் தரைகளுக்கும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(18) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்கு துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது மாபிள் களியினால் நிர்மாணித்து மெருகூட்டப்பட்டோ அல்லது செங்கல்லினால் அல்லது சிமெந்துக்கல்லினால் கட்டப்பட்ட மாபிள் ஓடு பதிக்கப்பட்ட பேசின் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(19) இடத்தில் எந்தவொரு பகுதியிலும் பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீரை தடையின்றி பாய்ந்து செல்வதற்குப் பொருத்தமான வடிகான் முறைமையொன்று இருத்தல் வேண்டும்.

(20) குருநாகல் மாநகர சபையினால் கழிவுநீர் முறைமை மேற்கொள்ளப்பட்டிருப்பின் இடத்தினுள் வெளியாகும் கழிவு நீர் குருநாகல் மாநகர சபையின் பணிப்புக்கமைய அத்தகைய கழிவுநீர் முறைமையில் பாய்ந்து சேரும் ஏற்பாடுகளைச் செய்ய முடியுமென்பதோடு, அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் அத்தகைய கழிவு நீரை, உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்குகளுக்குப் பாய்ந்து செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(21) உள்ளே சாதாரண தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டு மென்பதோடு, பாதுகாப்பிற்கான வேலைத் திட்டம் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இடத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பின் மேலதிகமாக மின்சார தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(22) இடத்தில் தேநீர், கோப்பி அல்லது பால் தயாரிக்கும் பிரிவு இடைவெளியற்றதும் துருப்பிடிக்காததுமான உலோகத் தகடுகளினாலோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட அல்லது வேறு ஊடறுக்கமுடியாத பொருளால் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென 4 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்த பட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

6. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, கழிவு நீர் பாய்ந்தோடும் வடிகான்கள் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

7. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள மலசலகூடங்களும் அலம்பகங்களும் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினிகள் உபயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, துர்நாற்றம் வீசாது பார்த்துக்கொள்ளல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பதற்கும், விற்பனைக்காகக் காட்சிக்கு வைப்பதற்கும் மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு உபயோகிக்கப்படும் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் அவற்றைப் பாவிப்பதற்கு முன்னர் சுத்தமான நீரினால் கழுவுதல் வேண்டுமென்பதோடு, பாவிக்கப்பட்ட பின்னரும் கழுவிச் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளை அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

9. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அந்தந்த பிரிவுகளில் சேரும் அனைத்து கழிவுகளும் 11 ஆவது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி ஊடறுக்கமுடியாத பொருளால் ஆக்கப்பட்ட பாத்திரங்களில் இடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவுகள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவை அல்லது அவசியமாயின் அதற்கு மேற்பட்ட தடவைகளிலும் அத்தகைய இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பாத்திரங்களில் கழிவுகளைப் போடும் சந்தர்ப்பமும் அவற்றை அப்புறப்படுத்தும் சந்தர்ப்பமும் தவிர்ந்த மற்றெல்லா நேரத்திலும் அத்தகைய பாத்திரங்கள் நன்றாக மூடிவைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அப்புறப்படுத்தும் கழிவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தின் தரையிலோ அல்லது அங்கும் இங்கும் இடுதல் ஆகாது.

(அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப்பொருட்கள் -

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;

(ii) கண்ணாடிப் பொருட்கள் ;

(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;

(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;

(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;

(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;

(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களைச் இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

(ஆ) (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், குருநாகல் மாநகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி தலைவரின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

11. அனைத்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள் அணுகாத வண்ணமும், அத்தகைய இடத்தில் வைக்கப்படும் உணவுகள் அல்லது பானங்கள் தயாரிப்பதற்கு பாவிக்கப்படும் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் பானங்கள் அத்தகைய எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகளால் மாசடைவதைத் தடுப்பதற்கு அவசியமான சகல ஏற்பாடுகளையும் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

12. வாடிக்கையாளருக்கு உணவு வகைகளை வெறுங்கையினால் பரிமாறுதல் ஆகாதென்பதோடு, அத்தகைய உணவு பரிமாறுகையில் கரண்டி, முள்ளுக் கரண்டி அல்லது வேறு வகையான உபகரணத்தை உபயோகித்தல் வேண்டும்.

13. எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் தரம் குறைக்கப்பட்ட எவ்வகையான பாலை வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகாது. இத்துணைவிதியின் கருமங்களுக்காக தரம் குறைக்கப்பட்ட பால் என்பது நீர் அல்லது வேறு வெளிப் பொருள் அல்லது பொருட்கள் கலக்கப்பட்ட பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 85 வீதத்திற்குக் குறைவாக அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 35 வீதத்திற்கு குறைவான பசுப்பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 9 வீதத்திற்கோ அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 7 வீதத்திற்கு குறைவான எருமைப் பால் எனக் கருதப்படும்.

14. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் மேலங்கிகள் வழங்கப்படுதலும், அத்தகைய ஊழியர் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் மேலங்கிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

15. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

16. குருநாகல் மாநகர சபையினால் வழங்கப்படுகின்ற உப அட்டவணை இலக்கம் 1 இல் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிப்பதன் மூலம் வருடாந்த உரிமப் பத்திரத்தினை பெற்றுக்கொள்ளல் உரிமப் பத்திர பெறுநரின் அலுவலும் பொறுப்புமாகும்.

இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் இப்பிரிவின் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

17. நகர ஆணையாளரினால் உரிய அலுவலுக்காக வழங்கப்பட்ட உரிமப் பத்திரம் இருப்பின் மாத்திரம் எந்தவொருவரினாலும் குருநாகல் மாநகர சபை பிரதேசத்தினுள் சாப்பாட்டுக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக்கடைகளை கொண்டு நடாத்தலாகாது.

செய்யலாகாத அலுவல்கள்.

18. உரிமப் பத்திரம் பெற்ற இடத்தில் அப்புறப்படுத்துகின்ற குப்பைகளை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தில், நிலத்தில் அல்லது ஒவ்வொரு இடத்தில் போப்படலாகாது.

19. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தம் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

20. எந்தவோர் ஆளும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் புகை பிடித்தல் அல்லது வெற்றிலை சப்புதல் ஆகாது.

அறவிடலும் கட்டணமும்.

21. ஏதாவதொரு சோற்றுக் கடையினை கொண்டு நடாத்திச் செல்வதற்காக மாநகர சபைச் சட்டத்தின் 247(அ) 2 உப பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த உரிமப் பத்திரக் கட்டணம் அறவிடுவதற்கு சபைக்கு அதிகாரம் உண்டு.

அதிகாரத்தை வழங்கல்.

22. இந்த துணை விதியின் நடவடிக்கைகளை கண்காணிப்பு மேற்பார்வை மற்றும் நிருவாகம் செய்தல் சம்பந்தமாக மாநகர சபையிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அங்கு மாநகர முதல்வர் அல்லது மாநகர ஆணையாளரினால் சபையின் எந்தவொரு அலுவலருக்கும் அளித்தல் சட்டரீதியானதாகும்.

உரிமப் பத்திரத்தித்தின் அல்லது அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம்.

23. இப்பகுதியின் துணைவிதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் இப்பிரிவின் துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

*24.இந்தப் பகுதியில் துணை விதிகளின் நிபந்தனைகளை பரிசீலிப்பதற்கு மாநகர ஆணையாளரிற்கு அல்லது அதிகாரம் உள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு பரிசீலிப்பதற்கு அதிகாரம் கிடைக்கும் உரிய காலம் என்பது இடத்தில் உற்பத்தி நடவடிக்கை செய்யப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பம் என்று கருதப்படும்.* *பரிசீலனை செயற்பாடும் அதிகாரமும்.*

*25. நிபந்தனையின் கீழ் உரிமப் பத்திரம் பெற்ற இடத்தினை பரிசீலிப்பதற்கு மாநகர ஆணையாளருக்கு அதற்காக உதவி புரிவது உரிமப் பத்திரதாரியின் செயற்பாடாகும். அது போன்று அவ்வாறான பரிசீலனை நிறுத்துவதற்கு எவ்வித தடையும் செய்யலாகாது.*

*26. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் சாப்பாட்டுக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தேநீர் அல்லது கோப்பிக்கடைகளை கொண்டு நடாத்திச் செல்கின்ற இடம் 4 ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய விளங்குதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை மாநகர ஆணையாளர் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

*27. மாநகர ஆணையாளரால் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனவை செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.*

*28. துணை விதி 26 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அறிவித்தல் கிடைத்த எந்தவொரு உரிமப் பத்திரதாரியினாலும் உரிய அறிவித்தலில் குறிப்பாக குறிப்பிட்ட திகதிக்கு முன் அந்த அறிவித்தலில் குறிப்பிட்டவாறே செயல்படுதல் வேண்டும்.*

*29. 26 ஆவது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை நகர ஆணையாளரினால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதால் வேண்டும்.*

*30. ஏதாவதொரு முறைபாடு எழுத்து மூலம் வாய்மொழி மூலம் மாநகர சபையின் நகர முதல்வர், நகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள அலுவலர் ஒருவருக்கு சமர்ப்பிக்க முடிந்ததுடன், அந்த அலுவலரினால் சட்டரீதியான பரிசீலனை ஒன்றினை நடாத்தி தீர்வு வழங்கப்படும்.* *முறைபாடும் அதற்கான தீர்வும்.*

*31. குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் நகர ஆணையாளருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.* *துணை விதிகளை மீறல்.*

*32. இந்த துணை விதிகளில் உள்ளடக்கப்பட்ட சட்டதிட்டங்களில் ஒன்று அல்லது சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் மீறுதல் குற்றமாகும்.*

*33. இந்த துணை விதிகளில் உட்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு சட்டதிட்டங்களை மீறுதல் பற்றிய குற்றம் சம்பந்தமாக உரிய நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் உரிய குற்றம் சம்பந்தமாக 252 ஆம் அதிகார மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 267 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும். அது போன்று உரிய ஏதாவதொரு குற்றம் சம்பந்தமாக உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் மேற்கூறப்பட்ட துணை விதியில் குறிப்பிடப்பட்ட வண்ணம் தண்டத்திற்குட்பட்ட எவர் ஒருவரினாலும் உரிய மீறலினை தொடர்ந்து செய்து கொண்டு மேற்கூறப்பட்ட 267 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும்.* *தண்டமும் தண்டனை.*

*34. வாக்கியம் சம்பந்தமாக அர்த்தம் தேவைப்படின், அது பற்றி இந்த பகுதியில் இடைநிலைச் சட்டங்களில்–* *பொருள்கோடலும் வரைவிலக்கணமும்.*

*“நகர முதல்வர்” மற்றும் “பிரதி நகர முதல்வர்” என்பது முறையாக உள்ளூராட்சி சபை வாக்கெடுப்பின் கட்டளைச் சட்டத்தின் படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர சபையின் நகர முதல்வர் அல்லது பிரதி நகர முதல்வர் என்று பொருள்படும்.*

"மாநகர சபை" என்பது ஏதாவதொரு மாநகரத்திற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்ற அல்லது அமைக்கப்பட்டது என்று கருதுகின்ற மாநகர சபையாகும்.

"மாநகர ஆணையாளர்" என்பது மாநகர சபையின் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்படுகின்றது என்று கருதுகின்ற மாநகர சபையின் மாநகர ஆணையாளர் என்று கருதப்படுவதுடன், பிரதி அல்லது உதவி ஆணையாளராக செயற்படுவதற்காக நியமிக்கப்பட்டவர் மாநகர ஆணையாளரின் அதிகாரம் செயற்பாடு நடைமுறைப்படுத்துவதற்காக இந்த கட்டளைச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலருக்கு அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்ட அளவிற்கு அதற்குள்ளாகும்.

"சிற்றுண்டிச்சாலை அல்லது சாப்பாட்டுக்கடை" என்பது, விற்பனைக்காக சோறு மற்றும் கறிகளை சமைக்கும் அல்லது வைக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் இடங்கள் எனக் கருதப்படுவதோடு, உணவு வேளைக்காக உணவுக்குப் பொருத்தமான வேறு ஏதேனும் ஆக்கப்பட்ட உணவு வகைகள் அல்லது ஏதேனும் சிற்றுண்டி வகைகளை விற்பனையின் பொருட்டு தயாரிக்கப்பட்ட அல்லது வைக்கப்பட்ட அல்லது காட்சிக்கு வைக்கப்படும் இடமும் உள்ளடக்குதல் வேண்டும்.

"தேநீர் அல்லது கோப்பி கடை" என்பது வெதுப்பக தயாரிப்புகள் அல்லது வேறு சிற்றுண்டிகளுடன் தேநீர் அல்லது கோப்பி விற்பனை செய்வதற்காக நடாத்தப்பட்டுவரும் இடம் எனக் கருதுதல் வேண்டும்.

"உரிமப் பத்திரதாரி" என்பது இந்த துணை விதிகளின் நிபந்தனையின் கீழ் உரிமப் பத்திரத்தினை பெற்றுக் கொண்டுள்ளவர் என்று பொருள்படுவதுடன், உரிய உரிமப் பத்திரத்தினை பெற்ற நிலையத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் உரிய காலத்தில் உரிய இடத்தில் அலுவல்களில் நிருவாக பொறுப்பாளராக இருக்கின்றவர்.

"உரிமப் பத்திரம் பெற்ற நிலையம்" என்பது இங்கு எந்த ஒரு துணை விதியின் நிபந்தனையின் கீழ் வழங்கப்பட்ட ஏதாவதொரு இடத்தின் உபயோகத்திற்கு உரிய இடம்.

"அதிகாரமுடைய உத்தியோகத்தர்" என்பது உரிய செயலுக்காக நகர முதல்வரினால் "எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட" குருநாகல் மாநகர சபையின் அலுவலர் என்று பொருள்படும்.

"பரிசீலிப்பதற்கு அதிகாரம் கிடைக்கும் உரிய காலம்" என்பது உரிய இடத்தில் வியாபார நடவடிக்கை அல்லது உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்கின்ற எந்த நேரமும் என்று பொருள்படும்.

**அட்டவணை**

**குருநாகல் மாநகர சபை**

***வியாபார உரிமப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் 20....... வருடம்***

1. கைத்தொழில்/வியாபாரம் உரித்துடையவரின் பெயர் :-----------.
2. சொந்த முகவரி :-----------.
3. தேசிய ஆளடையாளட்டை :- | | | | | | | | | | |
4. தொலைபேசி இலக்கம் :- கையடக்கம் :-----------. வீடு :-----------.
5. கைத்தொழில்/வியாபாரத்தின் பெயர் :-----------.
6. கைத்தொழில்/வியாபாரத்தின் தன்மை :-----------.

   கைத்தொழில்/வியாபாரம் செய்யும் இடம்:-

   (அ) முகவரி :---------.

   (ஆ) வீதியின்/பாதையின் பெயர் :-----------.

   (இ) வரிப்பண இலக்கம் :-----------.

   (ஈ) தொலைபேசி இலக்கம் :-----------.
7. கைத்தொழில்/வியாபாரத்தினை கொண்டு நடாத்துகின்ற நிலையம் உரித்துடைய கிராம அலுவலர் பிரிவின் இலக்கம் :--------.

   பிரிவின் பெயர் :-----------.

8. வியாபார பெயர் பதிவினை பெற்றிருப்பின் அதன் இலக்கம் :-----------.

9. கைத்தொழில்/வியாபாரத்தினை கொண்டு நடாத்திச் செல்கின்ற முகாமையாளரின்/பிரதிநிதியின் பெயர் :-----------.

10. தேசிய ஆளடையாளட்டை இல. :- | | | | | | | | | | |

11. தொலைபேசி இலக்கம் :- கையடக்கம் ---------- வீடு ------------

---

மாநகர ஆணையாளர்,
குருநாகல்.

மேற்கூறப்பட்ட தகவல்கள் அடங்கிய கைத்தொழில்/வியாபாரத்தினை கொண்டு நடாத்துகின்ற நிலையத்திற்காக 20.... ஆண்டிற்காக கைத்தொழில்/வியாபார உரிமப் பத்திரத்தினை எனக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இது பற்றி காணப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

---

அலுவலக உபயோகத்திற்காக

வருமான பரிசோதகர்,

பின்பக்கத்தில் குறிப்பிட்ட விண்ணப்பப் பத்திரத்திற்கு உரிய வியாபார உரிமப் பத்திரம் வழங்குவதற்காக உங்களது கண்காணிப்பும் சிபாரிசும் உடனடியாக என்னிடத்தில் பெற்று தருமாறு தயவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

----,
மாநகர கணக்காளர்.

திகதி :----.

---

மாநகர கணக்காளர்,

உரிமப்பத்திரத்தினை பெற்றுக்கொடுக்க சிபாரி செய்கின்றேன்/செய்யவில்லை.

----,
வருமான பரிசோதகர்.

திகதி :----.

---

பிரதான சுகாதார வைத்திய உத்தியோகத்தர்/மாநகர பொறியியலாளர்

பின்பக்கத்தில் குறிப்பிட்ட விண்ணப்பப் பத்திரத்திற்கு உரிய வியாபார உரிமப் பத்திரம் வழங்குவதற்காக உங்களது கண்காணிப்பும் சிபாரிசும் உடனடியாக என்னிடத்தில் பெற்று தருமாறு தயவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

----,
மாநகர கணக்காளர்.

திகதி :----.

---

பிரதான சுகாதார வைத்திய உத்தியோகத்தர்

துணை விதியும் மற்றைய சட்டதிட்டங்களுக்கு அமைய தகைமைகளை அடைந்துள்ளார். உரிமப் பத்திரம் வழங்குவதற்கு சிபாரிசு செய்வதற்காக அறிவிக்கின்றேன்.

----,
பொது சுகாதார பரிசோதகர்.

திகதி :----.

---

மாநகர பொறியியலாளர்,

உபயோகத்தினை வேறுபடுத்தப்பட்டுள்ளது/இல்லை. இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது/இல்லை. உரிமப் பத்திரம் வழங்குவதற்கு சிபாரிசு செய்கின்றேன்/ இல்லை.

----,
தொழில்நுட்ப உத்தியோகத்தர்.

திகதி :----.

---

மாநகர கணக்காளர்,

மேற்கூறப்பட்ட விண்ணபப்பப்படிவத்திற்கமைய உரிய இடத்திற்காக உரிமப் பத்திரம் வழங்குவதனை சிபாரிசு செய்கின்றேன். சிபாரிசு செய்யவில்லை. (சிபாரிசு செய்யாதுவிடின் அதற்குரிய காரணத்தினை குறிப்பிடவும்)

----,
பிரதான சுகாதார வைத்திய
அலுவலர்/ நகர பொறியியலாளர்.
(இறப்பர் முத்திரையினை இடவும்)

திகதி :----.

---

வியாபார உரிமப்பத்திர விடய பொறுப்பு உத்தியோகத்தர்

1. கைத்தொழில்/வியாபாரத்தினை கொண்டு நடாத்துகின்ற இடத்தின் வருடத்தின் பெறுமதி ரூபா ................. ஆகும்.

2. கைத்தொழில்/ வியாபாரத்தினை கொண்டு நடாத்துகின்ற இடத்திற்காக மீதி வரிப்பணம் அறவிடப்பட்டுள்ளது/ அறவிடப்படவில்லை.

3. கைத்தொழில்/வியாபாரத்தினை நடாத்தும் இடத்தின்,
   (அ) வீதியின்/பாதையின் பெயர் :----.
   (ஆ) வரிப்பண இலக்கம் :----.

----,
வரிப்பண விடய பொறுப்புடைய அலுவலர்.

திகதி :----.

---

நகர கணக்காளர்,

1. அறவிடப்பட வேண்டிய உரிமப் பத்திர கட்டணம் ரூபா ................. ஆகும்.

2. உரிமப் பத்திரம் வழங்குவதற்கு அனுமதிக்காக சிபாரிசு செய்கின்றேன்.

----,
வியாபார உரிமப்பத்திர விடய
பொறுப்புடைய அலுவலர்.

திகதி :----.

---

நகர ஆணையாளர்,

விண்ணப்பப் படிவம் பற்றி மேற்கூறப்பட்ட சிபாரிசுடன் இணங்குகின்றேன். உரிமப் பத்திரம் வழங்குவதற்கு அனுமதிக்காக சிபாரிசு செய்கின்றேன்.

----,
மாநகர கணக்காளர்.
(இறப்பர் முத்திரையினை இடவும்)

திகதி :----.

---

நகர கணக்காளர்,

அனுமதிக்கின்றேன்.

----,
மாநகர ஆணையாளர்.
(இறப்பர் முத்திரையினை இடவும்)

திகதி :----.

---

மாநகர கணக்காளர்,

அறவிடப்பட்ட உரிமப்பத்திரக் கட்டணம் ரூபா............
பற்றுச்சீட்டு இலக்கம் :----------. திகதி :---------.
ஒழுங்கமைக்கப்பட்ட உரிமப் பத்திரத்தின் இலக்கம் :---------. திகதி :---------.

உரிமப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிறுவனத்தினை பதிவுப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது/கணனிப்படுத்தப்பட்டுள்ளது.

உரிமப் பத்திரத்தினை நகர ஆணையாளரின் கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

----,
வியாபார உரிமப்பத்திர விடய
பொறுப்புடைய அலுவலர்.

திகதி :----.

---

மாநகர ஆணையாளர்,

இந்த உரிமப் பத்திரத்தில் விதிக்கப்பட்டுள்ள வியாபார உரிமப் பத்திரக் கட்டணம் அறவிடும் வர்த்தமானிக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது.

உரிமப்பத்திரம் கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

----,
மாநகர கணக்காளர்.

திகதி :----.

---

மாநகர கணக்காளர்,

உரிமப்பத்திரம் கையொப்பமிடப்பட்டது.

----,
மாநகர ஆணையாளர்/நகர ஆணையாளருக்காக.
(இறப்பர் முத்திரையினை இடவும்)

திகதி :----.

* உரியதல்லாதவற்றை வெட்டிவிடவும்.

6-645/1

**குருநாகல் மாநகர சபை**

*குருநாகல் மாநகர சபையின் சுடுகாட்டினை நிருவகித்தல் முறைப்படுத்தல், மற்றும் கட்டணம் அறவிடுவதற்கான துணைவிதி*

*(252 ஆம் அத்தியாயமான) 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 267 ஆம் பிரிவில் முதலாவது உப பிரிவுடன்சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் (13) ஆம் உப பிரிவில் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி குருநாகல் மாநகரசபையினால் அமைக்கப்பட்ட மற்றும் 2014.09.30 ஆந் திகதி நடந்த உரிய மாநகர சபையின் 4(1) ஆன பிரேரணையினால் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குருநாகல் மாநகர சபையின் குருநாகல் மாநகர சபை அதிகாரப்பிரிவினுள் குருநாகல் மாநகர சபையின் சுடுகாட்டினை நிருவகித்தல் முறைப்படுத்தல், மற்றும் கட்டணம் அறவிடுவதற்கான இடைநிலைச் சட்டம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நிகழ்வு) கோட்பாட்டுச் சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய மேற்கூறப்பட்ட மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 268 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவுப் படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டது பற்றி இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*சட்டத்தரணி ஜே. பி. தயாசிறி பத்மகுமார ஜயசேகர,*
*உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்,*
*வடமேல் மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*வடமேல் மாகாணம்,*
*குருநாகல்,*
*2015, யூன் 05.*

**அட்டவணை**

**குருநாகல் மாநகர சபையின் சுடுகாட்டினை நிருவகித்தல் முறைப்படுத்தல், மற்றும் கட்டணம் அறவிடுவதற்கான துணை விதிகள்**

*துணைவிதியின் பெயர்.*

*1. இந்த துணை விதி மாநகர சபையின் சுடுகாட்டினை நிருவகித்தல் முறைப்படுத்தல், மற்றும் கட்டணம் அறவிடுவதற்கான துணைவிதி என்று அறிமுகப்படுத்தப்படும்.*

*நோக்கம்.*

*2. மாநகர சபையின் சுடுகாட்டினை முறையாக பொது மக்களுக்கு வசதிகளை வழங்கி கொண்டு நடாத்திச் செல்லல் இந்த துணை விதியின் நோக்கமாகும்.*

*துணைவிதியினை தொகுப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடு.*

*3. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 (1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 272 ஆம் பிரிவின் (13) ஆம் உப பிரிவின் கீழ் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இந்த துணைவிதி அமைக்கப்பட்டுள்ளது.*

*செய்யப்படவேண்டிய செயற்பாடுகள்.*

*4. 5 ஆவது துணைவிதியில் காணப்படும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதை எதிர்பார்க்கும் (இங்கு இதன் பிறகு விண்ணப்பதாரி என்று அறிமுகமாகின்ற) எவரொருவர், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையுடன் இங்கு இரண்டாவது அட்டவணைக்கு ஒத்ததாக அமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தலைவர் அல்லது அதிகாரமுள்ள அலுவலரிடத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(அ) இறந்தவருக்கும் மற்றும் விண்ணப்பதாரிக்குமிடையில் உறவினை உறுதிப்படுத்துவதற்காக-*

(i) *விண்ணப்பதாரியின் விண்ணப்பப்படிவம், அல்லது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி உரிமப்பத்திரம்;*

(ii) *இறந்தவரின் பிறப்புச் சான்றிதழ், அல்லது;*

(iii) *இறந்தவர் வசித்த பிரிவில் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.*

*(ஆ) இறந்தவரின் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்ற வழக்குச் சட்டதிட்டத்தின் கீழ் பரிசீலனை நடாத்தப்பட்டிருப்பின், அந்த பரிசீலனை நடாத்தப்பட்ட நீதவான் அல்லது அவசர மரண அதிகாரியினால் பிறப்பு மற்றும் மரணம் பதிவு செய்யும் கட்டளைச்சட்டத்தின் 41 (உ) பந்தியின் கீழ் சடலத்தை எரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது இறந்துபிறந்த சடலமாயின் பிறப்பு மற்றும் மரணம் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் 43 (ஆ) பந்தியின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும்*

(இ) இறந்தவரின் மரணத்தினை உறுதிப்படுத்தும் கீழ் காணப்படும் ஆவணங்கள்/சான்றிதழ்கள் :

(1) பிறப்பும் மரணமும் பதிவுசெய்யப்படுகின்ற பதிவாளரின்

1. மரணத்தினை பதிவு செய்யும் ஆவணம் ப. செ. பீ 2
2. மரணச் சான்றிதழ் ப. செ. பீ 67
3. மரண அறிவித்தலின் சான்றிதழ் (4) (1) (அ) ப. செ. பீ 16
4. மரணம் பதிவு செய்யும் சான்றிதழ் ப. செ. பீ 20
5. பிரதேச கிராம அலுவலரின் அறிக்கை புத்தகம் ப. செ. பீ 24
6. அரச வைத்தியரின் மரண அறிவிப்பு ப. செ. பீ 33
7. மரண பரிசோதகரின் சான்றிதழ் 39 (1), 41 (1) (உ) பிரிவு ப. செ. பீ 10
8. நீதிவானினால் எழுத்துமூலம் வழங்கப்படும் சான்றிதழ்
9. வெளிநாட்டில் இறந்தால் பெற்றுக்கொடுக்கப்படும் சான்றிதழ்
10. 28 வாரங்களுக்கு குறைந்த பிள்ளைப் பேறு பற்றி தாய்/பாதுகாவலர்/தனிப்பட்ட அல்லது அரச வைத்தியர்களினால் வழங்கப்படுகின்ற எழுத்துமூலமான அறிக்கை.

5.(அ) மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள அலுவலர் ஒருவரினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் இல்லாது மாநகர சபைக்கு உரிய எந்த சுடுகாட்டிலும் உடலினை எரிக்கலாகாது. செய்யலாகாத செயற்பாடுகள்.

(ஆ) இறந்தவரின் மரணம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் கோவைச் சட்டத்தின் கீழ் நீதிவான் ஒருவர் அல்லது திடீர் மரண விசாரணையாளர் ஒருவரினால் பரிசீலனை நடாத்தப்படும். அந்த பரிசீலனையின் பின்பு உடலினை எரிப்பதற்கு உரிய நீதிவான் அல்லது திடீர் மரண விசாரணையாளரினால் அனுமதி வழங்கப்பட்டிருப்பின் மாத்திரம் உரிய உடலினை எரிப்பதற்கு பொறுப்பேற்றல் அல்லது எரிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல் மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள அலுவலரின் கடமையாகும்.

(இ) இறந்தவரின் மரணச் சான்றிதழ் 7 ஆம் பந்தியில் "மரணத்திற்கான காரணமும் அடக்கம் அல்லது எரித்த இடம்" என்று மாநகர சபையின் உரிய சுடுகாட்டினை பெயர் குறிப்பிட்டு இருப்பின் மாத்திரம் உரிய உடலினை எரிப்பதற்கு பொறுப்பேற்றல் அல்லது எரிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கல் மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள அலுவலரின் கடமையாகும். என்றாலும் அவசர தவிர்க்க முடியாத காரணத்தினால் கட்டணம் ஒன்றினை கீழ் காணப்படும் சந்தர்ப்பங்களில் ஆணையாளருக்கு தீர்மானிக்க முடியும்.

6. வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு அல்லது அதற்கு முன் உடலினை சுடுகாட்டு பொறுப்பாளருக்கு பொறுப்படைத்தல் வேண்டும். உரிய நேரத்திற்கு உடலினை பொறுப்படைப்பதற்கு தாமதம் காரணமாக விண்ணப்பதாரிக்கு அல்லது இறந்தவரின் உரிமையாளருக்கு ஏற்படுமாயின் யாருக்காவது ஏற்படுகின்ற தொல்லை அல்லது நட்டம் சம்பந்தமாக மாநகர சபை, சுகாதார வைத்திய அலுவலர் அல்லது அதிகாரமுடைய அலுவலர் பொறுப்பு கூற உடன்பட்டவரல்லர்.

7.(அ) ஏதாவதொரு சுடுகாட்டில், எரிக்கும் அறைக்கு சடலத்தை உட்படுத்தி அதன் பாதுகாப்பு கதவை மூடிய பின் எரிக்கும் அறையின் அண்மையில் சுடுகாட்டு பொறுப்பாளர் அல்லது அவரின் உதவியாளர்களை தவிர வேறு எவரும் உட்பிரவேசிப்பதற்கு அனுமதித்தலாகாது.

(ஆ) தலைவரின் அதிகாரமுள்ள அலுவலரின் அல்லது சுடுகாடு பொறுப்பாளரின் அனுமதியின்றி சுடுகாட்டு சூழலில் உட்பிரவேசித்தலாகாது.

(இ) (ஆ) பந்தியில் எது குறிப்பிடப்பட்டிருப்பினும்-

(i) சடலம் ஒன்றை எரிப்பதற்கு ஏதாவதொருவர் அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பின், சடலம் எரிப்பதற்காக பொறுப்படைப்பதற்கு அவர் அல்லது அவரின் அதிகாரமுள்ள ஒருவருடன் உரிய சந்தர்ப்பத்திற்கு கலந்துக்கொள்ளும் வேறு ஏதாவதொருவர் அல்லது பலர், மற்றும்

(ii) எரிக்கப்பட்ட சடலத்தின் சாம்பல் பொறுப்பேற்பதற்கு உரிய திகதி அல்லது அந்த திகதிக்கு முன், அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டவர் அல்லது அவரின் அதிகாரமுள்ள முகவருடன் வருகைதரும் வேறு எவர் ஒருவருக்கு அல்லது பலர்,

சுடுகாட்டு சூழலுக்கு பிரவேசிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ள ஒருவராக கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

8. ஏதாவதொரு சுடுகாட்டு சூழலில்–

(அ) சட்டத்தை மீறி நடத்தல்;

(ஆ) சுடுகாட்டு சூழலினுள் உள்ள பிரதேச சபைக்கு உரிய சொத்துக்களுக்கு நட்டம் ஏற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு முற்படுதல்.

(இ) சுடுகாடு பொறுப்பாளரின் அல்லது அவரின் உதவியாளரின் கடமைக்கு தடைசெய்தல்.

உள்ளூராட்சி நிறுவனத்தின் செயற்பாடுகள்.

9. (அ) சடலம் ஒன்றினை எரிப்பதற்கு அறவிடப்படுகின்ற கட்டணம் மாநகர சபையின் பிரேரணையினை ஏற்றுக்கொள்ளல் மூலம் குறிக்கப்பட முடியும். அவ்வாறான பிரேரணை மூலம் உரிய கட்டணத்தினை காலத்திற்கு காலம் வேறுபடுத்தலாம்.

(ஆ) மேற்கூறப்பட்ட (அ) பந்தியின்கீழ் விதிக்கப்படுகின்ற அல்லது காலத்திற்கு காலம் வேறுபடுத்தும் கட்டணம் பற்றி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன் சுடுகாட்டினை ஒதுக்கிக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் இடத்தில் மற்றும் சுடுகாட்டில் முன் பக்கம் பார்வைக்கு தெரியும் வகையில் காட்சிப்படுத்தல் வேண்டும்.

(இ) சடலம் ஒன்றினை எரிப்பதற்கு அறவிடப்படுகின்ற கட்டணம் இங்கு முதலாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அறவிட முடியும்.

10. சடலம் ஒன்றை எரிப்பதற்கு அனுமதிப்பத்திரம் கோரி முன்வைக்கும் விண்ணப்பப்படிவத்திற்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பின், அந்த விண்ணப்பப் படிவம் கிடைக்கும் வழிமுறைப்படி இங்கு மூன்றாவது படிவப்படி அமைக்கப்பட்ட ஆவணத்தில் உட்படுத்தல் மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள அலுவலரின் அலுவலாகும். இந்த ஆவணம் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் மாநகர சபை அலுவலகத்தினால் நடாத்திச் செல்லல் வேண்டும்.

11. முன்வைக்கப்படும் விண்ணப்பத்திற்கு அமைய சடலம் ஒன்றை எரிப்பதற்கு தீர்மானிக்கப்படுமாயின், 9 ஆம் துணை விதிப்படி விதிக்கப்பட்ட உரிய கட்டணத்தை அறவிட்ட பின், மாநகர ஆணையாளரின் அல்லது அதிகாரமுள்ள அலுவலரினால் அதற்காக அனுமதிப்பத்திரம் விண்ணப்பதாரியிடத்தில் வழங்கப்படல் வேண்டும். அந்த அனுமதிப் பத்திரத்திற்கமைய எரிப்பதற்கு உரிய சடலத்தை எரிக்கும் பொறுப்பாளரிடத்தில் கொண்டு வந்து பொறுப்படைக்க வேண்டிய திகதி மற்றும் நேரம் உரிய அனுமதிப்பத்திரத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

12. ஏதாவதொரு காரணத்திற்காக சடலம் ஒன்றை எரிப்பதற்கு பொறுப்பேற்காவிடின், மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள அலுவலரினால் அதற்குரிய காரணத்துடன் அது பற்றி உடனடியாக விண்ணப்பதாரியிடத்தில் எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

13. வார எல்லா நாட்களிலும் முற்பகல் 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 7.00 மணி வரையான காலத்தினுள் சடலத்தை பொறுப்பேற்க முடியும். சடலம் எரிக்கும் நேரம் மாநகர சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்பட முடியும்.

14. எல்லா சுடுகாட்டிலும் எரிக்கப்பட்ட ஒவ்வொரு சடலம் சம்பந்தமாக நான்காவது அட்டவணைக்கு சுருக்கமாக அமைக்கப்பட்ட அட்டவணை ஒன்று சுடுகாட்டு பொறுப்பாளர்/சுடுகாடு பொறுப்பாளர் சுடுகாட்டு இயந்திரத்தினை நடாத்துநரினால் நடாத்திச் செல்ல வேண்டும்.

15. (அ) சடலத்தினை எரிப்பதற்கு உரிய நிலையில் சுடுகாட்டினை கொண்டு நடாத்தல் மாநகர ஆணையாளரின் செயற்பாடாகும்.

(ஆ) ஏதாவதொரு சுடுகாட்டினை புனரமைக்கும் செயற்பாட்டிற்காக உரிய சுடுகாடு மூடப்படுமாயின் அது பற்றிய அறிவித்தலினை மூன்று மொழிகளிலும் சடலத்தினை எரிப்பதற்கான விண்ணப்பப்படிவம் வழங்கும் அலுவலகத்தில் அல்லது சுடுகாட்டிற்கு பிரசேிக்கும் இடத்தில் நன்கு தெரியும் வகையில் காட்சிப்படுத்தல் மாநகர ஆணையாளரின் செயற்பாடாகும்.

அறவீடும் கட்டணமும்.

16. 251 அ (1) ஆம் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது இந்த கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட துணை விதி, அல்லது கட்டளையின் கீழ் ஏதாவதொரு வரி, வாடகை, பணம், கட்டணம் அல்லது வேறு செலுத்துகை மாநகர சபைக்கு அறவிடுதற்கு இருக்கும் சந்தர்ப்பத்தில், அங்கு சட்டதிட்டங்களுக்கு அல்லது துணை விதிக்கு கட்டளைக்கு எதிராக எதுவாயினும் அந்த வாடகை, பணம், கட்டணம் அல்லது வேறு செலுத்துகை அறவிடப்பட்டு மாநகர சபை நிதியத்திற்கு வரவு வைப்பதற்கு எல்லா நடவடிக்கையும் மேற்கொள்ளல் மாநகர ஆணையாளரின் செயற்பாடாகும்.

17. இந்த துணைவிதிக்குரிய நடவடிக்கைகளை கொண்டு நடாத்தலும் மேற்பார்வை செய்தலும் நிருவகித்தல் சம்பந்தமாக மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் மாநகர முதல்வரின் அல்லது மாநகர ஆணையாளரினால் சுடுகாட்டின் அல்லது இடுகாட்டின் பொறுப்பாளரிடத்தில் எழுத்துமூலம் கையளித்தல் சட்டமாகும். அதிகாரத்தை வழங்கல்.

18. (அ) எல்லா சடலமும் எரிக்கப்பட்டு எழுபத்திரண்டு மணித்தியாலத்தினுள் விண்ணப்பதாரி அல்லது அவரின் அதிகாரமுள்ள பிரதிநிதியினால் அந்த சடலத்தின் சாம்பலினை பொறுப்பேற்றல் வேண்டும். பரிசீலனை நடைமுறையும் அதிகாரமும்.

(ஆ) என்றாலும் விண்ணப்பதாரியின் எழுத்துமூல கோரிக்கை மூலம் நகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள அலுவலரினால் சடலத்தின் சாம்பலினை சுடுகாட்டு பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்துக்கால எல்லையினை நீடிக்க செய்யலாம்.

(இ) (ஆ) பந்தியின் கீழ் சாம்பல் சுடுகாட்டு பொறுப்பாளரின் பொறுப்பில் வைத்திருப்பதற்கு நீடிக்கும் காலம் எரிக்கப்பட்ட தினத்திலிருந்து 14 மேற்படலாகாது.

(ஈ) அவ்வாறு சாம்பலினை அப்புறப்படுத்திக் கொள்வதற்கு இடமளிக்கப்பட்ட காலம் முடிவடைந்த பின் அப்புறப்படுத்திக் கொள்ளாத சாம்பலினை அப்புறப்படுத்துவதற்கு மாநகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள அலுவலரிற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

19. இந்த துணை விதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களில் ஒன்று அல்லது சிலவற்றை அல்லது எல்லாவற்றையுமோ மீறுதல் குற்றமாகும். துணைவிதியினை மீறுதல்.

20. இந்த துணைவிதிகளில் உள்ள எந்தவொரு சட்டத்திட்டங்களை மீறுவது பற்றிய குற்றம் சம்பந்தமான உரிய நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியான பின் உரிய குற்றம் சம்பந்தமாக (252 ஆம் அத்தியாயம்) மாநகர சபை கட்டளைச் சட்டத்தில் 267 ஆம் பிரிவில் (3) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாதல் வேண்டும். அது போன்று உரிய குற்றம் சம்பந்தமாக உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் மேற்கூறப்பட்ட துணை விதியில் குறிப்பிடப்பட்டவாறு அபராதத்திற்கு உட்படுத்தப்பட்ட எவர் ஒருவரினாலும் உரிய மீறலில் தொடர்ந்தும் செய்து கொண்டு செல்லும் போது மேற்கூறப்பட்ட 267 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கு உள்ளாதல் வேண்டும். அபராதமும் தண்டனையும்.

21. வாக்கியம் சம்பந்தமாக அர்த்தம் தேவைப்படின், அது பற்றி இந்த பகுதியில் துணைவிதிகளில், பொருள் கோடலும் வரைவிலக்கணமும்.

''மாநகர முதல்வர்'' மற்றும் ''பிரதி நகர முதல்வர்'' என்பது, முறையாக உள்ளூராட்சி சபை வாக்கெடுப்பின் கட்டளைச் சட்டத்தின் படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர சபையின் மாநகர முதல்வர் அல்லது பிரதி மாநகர முதல்வர் என்று பொருள்படும்.

''மாநகர ஆணையாளர்'' என்பது, மாநகர சபையின் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்படுகின்றது என்று கருதுகின்ற மாநகர சபையின் நகர ஆணையாளர் என்று கருதப்படுவதுடன், பிரதி அல்லது உதவி ஆணையாளராக செயற்படுவதற்காக நியமிக்கப்பட்டவர் ஆணையாளரின் அதிகாரம் செயற்பாடு நடைமுறைப்படுத்துவதற்காக இந்த கட்டளைச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலருக்கு அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்ட அளவிற்குள்ளாகும்.

''மாநகர சபை'' என்பது, ஏதாவதொரு மாநகரத்திற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்ற அல்லது அமைக்கப்பட்டது என்று கருதுகின்ற மாநகர சபையாகும்.

''அதிகாரமுள்ள அலுவலர்'' என்பது, உரிய அலுவலுக்காக மாநகர ஆணையாளரினால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மாநகர சபையின் இடுகாடு அல்லது சுடுகாடு பொறுப்பாளர் என்று கருதப்படும்.

''எரிக்கும் அறை'' என்பது, எரிப்பதற்காக சடலத்தை வைக்கும் அறை மற்றும் அந்த அறைக்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ள புறம்பான அறையாகும்.

''சுடுகாட்டு சூழல்'' என்பது, பூரண சுடுகாடும் மற்றும் அதற்குரிய நிலப்பரப்பும்

''சுடுகாட்டு நடத்துனர்'' என்பது, உரிய காலத்தில் குருநாகல் மாநகர சபையின் சுடுகாட்டையும் அதன் நடவடிக்கைக்கு பொறுப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ள ஒரு சேவையாளர்.

''சாம்பல்'' என்பது, ஏதாவதொரு சடலத்தை எரிப்பதனால், சடலத்தின் மற்றும் சடலத்தை வைக்கப்பட்டிருந்த பெட்டியில் எரிந்து மீதியாகிய ஒரு பொருள்.

''சடலம்'' என்பது, இறந்த எவர் ஒருவரின் பூரண சடலம் அல்லது உயிரற்ற சடலம் அல்லது ஏதாவதொரு சடலத்தின் ஒரு பகுதி என்று கருத்துப்படுவதுடன் உயிரற்ற மனித கரு இதற்கு உட்படுதல் வேண்டும்.

''சுடுகாட்டு பொறுப்பாளர்'' என்பது, உரிய காலத்தில் குருநாகல் மாநகர சபையின் சுடுகாட்டையும் அதன் நடவடிக்கைக்கு பொறுப்பிற்காக நியமிக்கப்பட்டுள்ள ஒரு சேவையாளர்.

**முதலாவது அட்டவணை**

*9 ஆம் துணை விதி*

**சுடுகாட்டை உபயோகிப்பதற்கான அறவிடப்படும் கட்டணம்**

ரூபா ச.

| | | |
|---|---|---|
| 01 | அதிகாரப் பிரிவில் வசிக்கும் வயதுமுதிந்தவர் ஒருவரின் சடலத்தை எரிப்பதற்காக | ........... |
| 02 | அதிகாரப் பிரிவில் வசிக்கும் வயது முதிந்தவர் அற்ற ஒருவரின் சடலத்தை எரிப்பதற்காக | ........... |
| 03 | அதிகாரப் பிரிவின் வெளியில் வசிக்கும் வயதுமுதிந்தவர் ஒருவரின் சடலத்தை எரிப்பதற்காக | ........... |
| 04 | அதிகாரப் பிரிவின் வெளியில் வசிக்கும் வயது முதிந்தவர் அற்ற ஒருவரின் சடலத்தை எரிப்பதற்காக | ........... |
| 05 | அதிகாரப் பிரிவில் வசிக்கும் சமூர்தியாளரின் குடும்பத்தில் முதியவர் ஒருவரின் சடலத்தை எரிப்பதற்காக | ........... |
| 06 | அதிகாரப் பிரிவில் வசிக்கும் சமூர்தியாளரின் குடும்பத்தில் முதியவரற்ற ஒருவரின் சடலத்தை எரிப்பதற்காக | ........... |

இங்கு வயது முதிந்தவர் அற்ற ஒருவர் என்பது 12 வயதுக்கு குறைந்த சிறுவர் என்று கருதப்படும்.

**இரண்டாவது அட்டவணை**

*4 ஆம் துணை விதி*

(இரண்டு பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டும்) (முன்பக்கம்)

**குருநாகல் மாநகர சபையின் சுடுகாட்டின் சடலம் எரிப்பதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்தல்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-----.
   முகவரி :-----.
   தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் :----.
   கிராம அலுவலர் பிரிவின் இலக்கமும் பெயரும் :-----.
2. இறந்தவரின் முழுப் பெயர் :-----.
   பால் (ஆண்/பெண்) :-----.
   குடியிருந்த இடத்தின் முகவரி :-----.
   தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் :-----.
   கிராம அலுவலர் பிரிவின் இலக்கமும் பெயரும் :-----.

3. இறந்தவர் விண்ணப்பதாரிக்கு உள்ள உறவு :-----.
(உறுதிப்படுத்துவதற்கு 4ஆவது இடைநிலைச் சட்டத்தின் (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழை இணைக்கவும்)
4. மரணச் சான்றிதழின் பதிவு இலக்கமும் திகதியும் :-----.
(மரணச் சான்றிதழின் பிரதி ஒன்றை இணைக்கவும்)
5. மரண பதிவு செயலாளரின் பெயர் :-----.
மற்றும் பிரிவும் :-----.
6. மரணத்திற்கான காரணம் :-----.
7. மரணம் சம்பந்தமாக மரண பரிசீலனை செய்யப்பட்டிருப்பின்,
(5 ஆவது இடைநிலைச் சட்டத்தின் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழை இணைக்கவும்)
பரிசீலனை அலுவலரின் பெயரும் பதவியும் :-----.
பரிசீலனை நடாத்தப்பட்ட திகதி :-----.
பரிசீலனை அலுவலரின் கூற்று :-----.
சடலத்தை எரிப்பதற்கு பரிசீலனை அலுவலர் அனுமதி வழங்கியுள்ளாரா? :-----.
8. சடலத்தை எரிப்பதற்கு கேட்கும் திகதியும் நேரமும் (விருப்பத்தின் தொடர்படி)

| திகதி | நேரம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| (i) 20 ..... | மணி .......... | (ii) 20 ..... | மணி .......... |
| (iii) 20 ..... | மணி .......... | (iv) 20 ..... | மணி .......... |

9. சடலத்தை எரித்த பின் சாம்பலை பொறுப்பேற்பதற்கு எதிர்பார்க்கின்றீரா? :-----.

(சாம்பலை பொறுப்பேற்க விரும்பின் அதற்காக போதியளவிலான பாத்திரத்தை சடலத்தை பொறுப்படைக்கும் போது சுடுகாட்டு பொறுப்பாளருக்கு பொறுப்படைத்தல் வேண்டும்.)

மேற்கூறப்பட்ட தகவல்கள் எல்லாம் உண்மையானதும் சரியானதும் என்று உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் பூரண பொறுப்பு என்னால் பொறுப்பேற்பது என்று மேலும் தெரிவித்துக்கெள்கின்றேன். உரிய சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : 20-----.

(பின் பக்கம்)

திரு./திருமதி/செல்வி :
............................................
............................................

**சடலம் ஒன்றை எரிப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குதலை மறுத்தல்**

உங்களால் முன்வைக்கப்பட்டுள்ள முன்பக்கத்தில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்திற்கமைய அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குதல் கீழ் காணப்படும் காரணங்களுக்காக மறுக்கப்பட்டுள்ளது என்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

(i) .............................................. .
(ii) .............................................. .
(iii) .............................................. .
(iv) .............................................. .
(v) .............................................. .

----,
தலைவர்/அதிகாரமுள்ள
அலுவலரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடவும்)

திகதி : 20-----.

சுடுகாட்டு பொறுப்பாளர்,
.................

**சடலத்தை எரிப்பதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம்**

(அ) ............................................. என்பவரின் சடலத்தை 20 ..... ஆம் ஆண்டு ........................ மாதம் ............ ஆந் திகதி முற்பகல்/பிற்பகல் ............ மணிக்கு .............. சுடுகாட்டில் எரிப்பதற்கு இத்துடன் அனுமதி வழங்குகின்றேன்.

(ஆ) முன்பக்க விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் 5 ஆம் இடைநிலைச் சட்டத்தின்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) 20 ........ திகதி, இலக்கம் ......... கான பற்றுச்சிட்டு மூலம் ரூ.................. அறவிடப்பட்டுள்ளது.

(ஈ) இந்த அனுமதிப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள தகவல் படி 10 ஆவது இடைநிலைச் சட்டத்தின்படி உரிய அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பின் சடலம் எரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

(உ) அனுமதிப்பத்திர அட்டவணையில் தொடர் இலக்கம் ................ ஆகும்.

----,
தலைவர்/அதிகாரம் பெற்ற
அலுவலரின் கையொப்பம்.
(பதவி முத்திரையை இடவும்)

திகதி :20----.

**மூன்றாம் அட்டவணை**

**மாநகர சபையின் தகன நிலையத்தில் பூதவுடலை தகனம் செய்வதற்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களின் பதிவேடு**

| தொடர் இலக்கம் | மரணமடைந்தவரின் பெயர் | தேசிய ஆ. அ. இலக்கம் | ஆண்/பெண் பால் நிலை | மரணமடைந்த தினம் | மரண அத்தாட்சிப் பத்திரத்தினை பதிவு செய்த | | விண்ணப்பதாரரின் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | இலக்கம் | திகதி | பெயர் | இறந்தவருக்குமான தொடர்பு |
| 01 | | | | | | | | |
| 02. | | | | | | | | |
| 03. | | | | | | | | |
| 04. | | | | | | | | |
| 05. | | | | | | | | |
| 06. | | | | | | | | |

(**கவனிக்கவும்** : பதிவேட்டின் இடது பக்கம் மற்றும் வலது பக்கங்கள் இரண்டையும் உபயோகித்து தகவல்களைப் பதிவு செய்வதற்காக போதியளவு இடத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.)

**மாநகர சபையின் தகன நிலையத்தில் பூதவுடலை தகனம் செய்வதற்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களின் பதிவேடு**

| விண்ணப்பதாரியின் | | நீதவான்/திடீர் மரண பரிசோதகரின் கட்டளையின் | | அனுமதிப்பத்திர இலக்கம் | பற்றுச்சீட்டு | | தகனம் செய்வதற்கான ஒதுக்கப்பட்ட | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முகவரி | தேசிய ஆ. அ. அ. இல. | தொடர்பு இலக்கம் | திகதி | | இலக்கம் | தொகை ரூ. சதம் | திகதி | நேரம் |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

(**கவனிக்கவும்** : பதிவேட்டின் இடது பக்கம் மற்றும் வலது பக்கங்கள் இரண்டையும் உபயோகித்து தகவல்களைப் பதிவு செய்வதற்காக போதியளவு இடத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.)

**நான்காவது அட்டவணை**

**மாநகர சபை தகன நிலையத்தில் தகனம் செய்யப்பட்ட பூதவுடல்கள் பற்றிய பதிவேடு**

| தொடர் இல. | மரணமடைந்தவரின் பெயர் | தேசிய ஆ. அ. அ. இல. | ஆண்/பெண் பால் நிலை | அனுமதிபத்திரங்கள் பதிவேட்டின் தொடர் இல. | மரணமடைந்த திகதி | மரணச் சான்றிதழ் பதிவு செய்த | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | இலக்கம் | திகதி |
| 01. | | | | | | | |
| 02. | | | | | | | |
| 03. | | | | | | | |
| 04. | | | | | | | |
| 05. | | | | | | | |
| 06. | | | | | | | |
| 07 | | | | | | | |
| 08 | | | | | | | |

(**கவனிக்கவும்** : பதிவேட்டின் இடது பக்கம் மற்றும் வலது பக்கங்கள் இரண்டையும் உபயோகித்து தகவல்களைப் பதிவு செய்வதற்காக போதியளவு இடத்தை தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.)

**மாநகர சபை தகன நிலையத்தில் தகனம் செய்யப்பட்ட பூதவுடல்கள் பற்றிய பதிவேடு**

| விண்ணப்பதாரியின் | | அனுமதிப்பத்திர இல. | பற்றுச்சீட்டு | | தகனம் செய்யப்பட்ட | | அஸ்தி எடுத்துசென்ற திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| பெயர் | தேசிய ஆ. அ. அ. இல. | | இலக்கம் | தொகை ரூ. சதம் | திகதி | நேரம் | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

(**கவனிக்கவும்** : பதிவேட்டின் இடது பக்கம் மற்றும் வலது பக்கங்கள் இரண்டையும் உபயோகித்து தகவல்களைப் பதிவு செய்வதற்காக போதியளவு இடத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும்.)

*6-645/2*

---

**குருநாகல் மாநகர சபை**

குருநாகல் மாநகர சபையின் வாகனங்களை நிறுத்துதலும் வரிசைப்படுத்தலும் பற்றிய இடைநிலைச் சட்டம்

*(252 ஆம் அத்தியாயமான) 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 267 ஆம் பிரிவில் முதலாவது உப பிரிவுடன்சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் (06) ஆம் உப பிரிவில் (எ) பந்தியில் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி குருநாகல் மாநகரசபையினால் அமைக்கப்பட்ட மற்றும் 2014.09.30 ஆந் திகதி நடந்த உரிய மாநகர சபையின் 4(1) ஆன பிரேரணையினால் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குருநாகல் மாநகர சபையின் குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் வாகனங்களை நிறுத்துதலும் வரிசைப்படுத்தலும் பற்றிய இடைநிலைச் சட்டம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நிகழ்வு) கோட்பாட்டுச் சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய மேற்கூறப்பட்ட மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 268 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவுப் படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*சட்டத்தரணி ஜே. பி. தயாசிறி பத்மகுமார ஜயசேகர,*
*உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்,*
*வடமேல் மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*வடமேல் மாகாணம்,*
*குருநாகல்,*
*2015, யூன் 05.*

**அட்டவணை**

**குருநாகல் மாநகர சபையின் வாகனங்களை நிறுத்துதலும் வரிசைப்படுத்தலும் பற்றிய துணைவிதி**

*துணைவிதியின் பெயர்.*

1. இந்த துணை விதி குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தின் பாதைகளில் வாகனம் நிறுத்துதலும் அந்த பாதைகளில் வாகனங்களை வரிசைப்படுத்துதலை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், மற்றும் நிருவகித்தல் பற்றிய துணை விதி என்று அறிமுகப்படுத்தப்படும்.

*நோக்கம்.*

2. மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தின் பாதைகளில் வாகனம் நிறுத்துதலும் அந்த பாதைகளில் வாகனங்களை வரிசைப்படுத்துதலை முறையாக கொண்டு நடாத்தலும் பிரயாணிகளின் பாதுகாப்பும் வாகன விபத்துக்களை தடுத்தலுக்காக.

*துணைவிதியினை தொகுப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடு.*

3. மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 267 (1) பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய 272(15) உப பிரிவின் கீழ் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இந்த துணை விதி அமைக்கப்பட்டுள்ளது.

*செய்யவேண்டிய செயற்பாடு.*

4. (அ) குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவில் ஏதாவதொரு வீதியில் அல்லது பாதையில் எந்த பகுதியிலாவது,-

(i) வாகனம் நிறுத்துதலைத் தடை செய்தல்;
(ii) கட்டுப்படுத்தல்;
(iii) ஒரு பக்கம் மாத்திரம் வாகனம் நிறுத்துவதற்கு இடமளித்தல்;
(iv) பொருட்களை இறக்குவதற்கு அல்லது ஏற்றுவதற்குத் தடை செய்தல் அல்லது கட்டுப்படுத்தல்;
(v) பிரயாணிகளை இறக்குதல் அல்லது ஏற்றுதலினை தடை செய்தல்;
(vi) பேரூந்து நிறுத்தும் இடத்தினை பெயர் குறிப்பிடல்;
(vii) ஒரு பக்கம் மாத்திரம் வாகனம் போக்குவரத்து செய்கின்ற வீதி அல்லது பாதைகளை பெயர் குறிப்பிட்டு போக்குவரத்து செய்ய இயன்ற பக்கத்தினை தீர்மானித்தல்

மாநகர சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) மாநகர சபையினால் (அ) பிரிவின் கீழ் உள்ள ஏதாவதொரு கட்டுப்படுத்தல் செய்த பின் அந்த கட்டுப்பாடு பற்றி பாதை சைகை உரிய இடங்களில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் நகர ஆணையாளரின் செயற்பாடாதல் வேண்டும். உரிய கட்டுப்பாடு பற்றி பாதை சைகை, மோட்டார் வாகனச் சட்டத்தின் 164 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய உரிய சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் அமைக்கப்பட்ட 1987 ஆம் ஆண்டின் மாச்சு மாதம் 13 ஆந் திகதிய 444/18 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானியின் I : (I) ஆம் பந்தி அதிவிஷேட வர்த்தமானியில் அறிவித்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள கட்டளைகளின் படி செயற்படவேண்டியதுடன் அந்த கட்டளைகள் காலத்திற்கு காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்படுதல் வேண்டும்.

5. மாநகர சபை பிரதேசத்தினுள் அல்லது மாநகர சபை பிரதேசத்தினூடாக செல்கின்ற ஏதாவதொரு வீதி அல்லது பாதையில் போக்குவரத்து செய்கின்ற எந்த வாகனமும் சாரதியினால் 1 ஆம் துணை விதியில் (ஆ) பந்தியில் குறிப்பிட்டவாறு பொறுத்தப்பட்டுள்ள பாதை வீதி சமிக்ஞை அல்லது சமிஞ்ஞைகளினால் காட்டப்பட்டுள்ளவாறு பின்பற்றல் வேண்டும்.

6. எல்லா வாகன தரிப்பிடங்களிலும் நிறுத்துவதற்கு வருகை தருகின்ற வாகனம் உட்பிரவேசிக்கும் கதவு மற்றும் வெளியேறும் கதவு இலகுவாக வாசிப்பதற்கு இயன்ற வகையில் மும்மொழிகளிலும் அறிவித்தல் பொறுத்தப்பட வேண்டியதுடன், உரிய இடத்திற்குள் வாகனம் நிறுத்தி வைப்பதற்கு வருகைத் தரும் போதும் வெளியில் செல்லும் போதும் போக்குவரத்து செய்யவேண்டிய பக்கத்தினை இலகுவாக அறிந்துகொள்வதற்கு இயன்றவாறு 20 சென்றிமீற்றர் அகலத்திலான வெள்ளை நிறத்திலான கோடுடனான அம்புக் குறியிட்டு காட்டப்படல் வேண்டும்.

7. எல்லா வாகன தரிப்பிடங்களையும் தார் இட்டு அல்லது கொன்கிறீட் இட்டு இருக்க வேண்டியதுடன் உரிய வாகன தரிப்பிடங்களையும் உபயோகிப்பவர்களின் உபயோகத்திற்காக ஆண், பெண் என்று வெவ்வேறாக ஒதுக்கப்பட்ட மலசல கூடம், கட்டமைத்திருத்தல் வேண்டும். அது போன்று உரிய இடத்தில் தேங்குகின்ற நீர் வசதியாக வழிந்தோடக்கூடிய வகையில் கால்வாய்களை அமைத்திருத்தல் வேண்டும்.

8. எல்லா வாகன தரிப்பிடங்களிலும் ஒன்று சேருகின்ற குப்பைகளை ஒவ்வொரு நாளும் வெளியேற்றுவதற்கும் உரிய இடத்தில் கொண்டு நடாத்துகின்ற மலசலகூடங்களை தினமும் கிருமிகொல்லியினை இட்டு சுத்தம் செய்வதற்கு பொறுப்பு கூறல் நகர ஆணையாளரின் செயற்பாடாகும்.

9. எல்லா வாகன தரிப்பிடங்களிலும் வாகனம் நிறுத்தி வைப்பதற்காக இடவசதிகளை ஒழுங்குசெய்யும் போது வாகன தரிப்பிடத்தினுள் வருகை தருகின்ற மற்றும் வெளியேறுகின்ற வாகனங்களுக்கு போக்குவரத்து செய்வதற்காக போதியளவு போக்குவரத்து மிதி கடவுகளை ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

10. ஏதாவதொரு வாகனம், வாகன தரிப்பிடங்களினுள் போக்குவரத்துச் செய்யும் போதும் நிறுத்தும் போதும், அதனுள் நிறுத்தப்பட்டுள்ள மற்றைய வாகனங்களுக்கு தடைகள் ஏற்படாத வண்ணம் ஒவ்வொரு வாகனமும் நிறுத்துவதற்கு

தரிப்பிடத்தில் போதியளவு இடவசதி இருத்தல் வேண்டியதுடன், ஒவ்வொரு வாகனத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள எல்லையினை காட்டுகின்ற 10 சென்ரி மீற்றர் அகலத்திலான வெள்ளை நிறத்திலான கோடுகளால் குறியிட்டு காட்டப்படல் வேண்டும்.

11. ஏதாவதொரு வாகன தரிப்பிடத்தினுள் வாகனம் நிறுத்தி வைப்பதற்காக மாநகர சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற வண்ணம் கட்டணம் அறவிடலாம். அவ்வாறு ஏதாவதொரு வாகனத் திப்பிடத்தில் நிறுத்தப்படுகின்ற ஏதாவதொரு வகையிலான வாகனம் நிறுத்தி வைக்கப்பதற்கு பதிலாக அறவிடுவதற்கு மாநகர சபை தீர்மானிக்கப்பட்ட கட்டணத்தினை வாகன தரிப்பிடத்திற்கு நுழைவு வாயிலில் முன்பக்கம் தெரியும் வகையில் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மாநகர ஆணையாளரின் செயற்பாடாகும்.

12. (அ) ஏதாவதொரு வாகன தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கின்ற வாகனங்களில் இருந்து கட்டணம் அறவிடலுக்காக இதனகத்து "வாகன தரிப்பிட பொறுப்பாளர்" என்று அறிமுகப்படுத்தப்படும்.

(i) மாநகர சபையில் சேவையில் உள்ள எந்த சேவையாளரும் ; அல்லது

(ii) மாநகர சபையினால் பிரசித்த கேள்வி கோரல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையான கேள்வி கோரல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையான கேள்விதாரர் அல்லது உரிய கேள்விதாரரினால் பெயர் குறிப்பிட்ட அவரின் பிரதிநிதிஒருவரை
இதற்காக ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

(ஆ) என்றாலும், ஏதாவதொரு வாகன தரிப்பிடத்தில் நிறுத்துவதற்காக அறவிடப்படும் கட்டணம் 11 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்ட வகையில் மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்ட கட்டணத்தின் அளவினை மீறலாகாது. ஒவ்வொரு வாகனத்தினையும் நிறுத்தி வைப்பதற்காக அறவிடப்பட்ட கட்டண அளவு இந்த பகுதியில் முதலாவது உப அட்டவணையில் தெளிவாக அமைத்துக் கொண்ட பற்றுச்சீட்டில் குறிப்பிட்டு வாகனத்தின் சாரதியிடம் வழங்கப்படல் வேண்டும்.

13. எல்லா வாகன தரிப்பிட பொறுப்பாளர்களும் அந்த அலுவலில் ஈடுபடும் காலத்தினுள் மாநகர சபையினால் தீர்மானிக்கப்படுகின்றதும் வாகன தரிப்பிட பொறுப்பாளரை வசதியாக அறிந்துகொள்ளும் வகையில் ஆடையை அணியச் செய்வது மாநகர ஆணையாளரின் செயற்பாடாகும்.

14. (அ) துணைவிதி 12 இல் (ஆ) பந்தியின் கீழ் நிறுத்தி வைப்பதற்கு இடமளிக்க தீர்மானிக்கப்பட்ட ஏதாவதொரு வகையில் வாகனம் நிறுத்தி வைப்பதற்கு வாகன தரிப்பிடத்தினுள் உள்ளாகும் சந்தர்ப்பத்தில் வாகனத்தின் சாரதியிடத்தில் இந்த பகுதியில் இரண்டாவது அட்டவணையிலுள்ளவாறு உட்பிரவேசிக்கும் போது அனுமதிப்பத்திரம் ஒன்றினை வழங்குவது வாகன தரிப்பிட பொறுப்பாளரின் செயற்பாடாகும்.

(ஆ) உட்பிரவேசிக்கும் அனுமதிப்பத்திரத்தினுடனான எல்லா வாகனமும் வாகன தரிப்பிடத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்:-

(i) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட அட்டையினை வாகன தரிப்பிட பொறுப்பாளருக்கு மீளலித்தல்;

(ii) துணைவிதி 11 இல் குறிப்பிடப்பட்டவாறு மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்ட அளவிற்கு பொருந்தும் வாகனம் நிறுத்தும் கட்டணம் வாகன தரிப்பிட பொறுப்பாளருக்கு செலுத்துதல்; மற்றும் பொருந்தும்

(iii) செலுத்தப்பட்ட கட்டணத்திற்கு பொருந்தும் 12 ஆவது துணைவிதியில் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்ட பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளல்;

இது வாகனத்தின் சாரதியின் பொறுப்பாகும்.

15. நகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள அலுவலர் ஒருவர் அல்லது வாகன தரிப்பிட பொறுப்பாளர் அல்லது பொலிஸ் அலுவலர் ஒருவரினால் ஏதாவதொரு வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கும் வாகனத்தின் உரிமையாளரிடம் இல்லாவிட்டால் சாரதியிடத்தில் வாகனத்தற்காக வழங்கப்பட்ட உட்பிரவேசப் பத்திரத்தினை பரிசீலிப்பதற்காக கோரும் போது அதனை பரிசீலிப்பதற்காக பெற்றுக் கொடுத்தல் வாகனத்தின் உரிமையாளரின் அல்லது சாரதியின் செயற்பாடாகும்.

16. மாநகர சபை பிரதேசத்தினுள் அமைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள :

(அ) அரச வாகனங்களுக்கு;
(ஆ) மாகாண சபையின் வாகனங்களுக்கு;
(இ) மாகாணத்தினுள் அமைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு உள்ளூராட்சி சபை வாகனங்களுக்கு.

இந்தத் துணை விதியின் சட்டதிட்டங்கள் உரித்துடையதாதலாகாது. என்றாலும் ஏதாவதொரு அரச கூட்டுத்தாபனம் அல்லது அதிகார சபையின் வாகனத்திற்கு உரிய சட்டதிட்டத்தின் இந்த பகுதியில் துணை விதிகளில் குறிப்பிடப்பட்டவாறு உரித்தானதாகும்.

17. ஏதாவதொரு வாகன தரிப்பிடத்திற்கு உட்பிரவேசிப்பதற்கு அனுமதிப்பத்திரம் இன்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு வாகனம் உரிய வாகன தரிப்பிடத்திலிருந்து ஒதுக்கிக் கொள்வது நகர ஆணையாளர் அல்லது அதிகாரம் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் அல்லது வாகன தரிப்பிட பொறுப்பாளர் செயற்படுதல் சட்டரீதியாதல் வேண்டும்.

18. துணை விதி 5 இல் எது குறிப்பிடப்பட்டிருந்ததோ 4 ஆம் துணை விதியின் சட்டத்திட்டங்களுக்கு கீழ் மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்டு பொருத்தப்பட்ட ஏதாவதொரு பாதை சமிஞ்சையின் மூலம் குறிக்கப்பட்ட எல்லைகள்:- செய்யக் கூடாத அலுவல்கள்.

(அ) உரிய வீதியில் அல்லது பாதையின் ஏதாவதொரு பகுதியில் அல்லது மாநகரசபை பிரதேசத்தினுள் வேறு எந்தவொரு வீதியில் அல்லது பாதையின் அண்மையில் உள்ள கட்டிடத்தில் அல்லது அதன் அண்மையில் ஏற்படுகின்ற தீ அல்லது வேறு ஏதாவதொரு இடரினை கட்டுப்படுத்தும் முகமாக உபயோகப்படுத்தும் மாநகர சபையின் தீயணைக்கும் வாகனம் அல்லது வேறு ஏதாவதொரு வாகனத்திற்காக;

(ஆ) உரிய வீதியில் அல்லது பாதையின் ஒரு பகுதியேனும் மாநகர சபை பிரதேசத்தினுள் வேறு எந்த வீதியில் அல்லது பாதையில் ஏற்படுகின்ற வாகன நெரிசலினை கட்டுப்படுத்துவதற்காக மாநகர பிரதேசத்தினுள் ஏற்படுகின்ற வேறு ஏதாவதொரு எதிர்பாராத நிலையினை தடுப்பதற்காக பொலிஸ் அலுவலர் ஒருவரினால் சந்தர்ப்பத்திற்கேற்ப செய்யப்படுகின்ற பொறுப்பின்படி செயல்படல்.

இந்த 5 ஆம் துணை விதியின் சட்டங்களை மீறுகின்றலாகாது.

19. (அ) எவர் ஒருவரினாலும் ஏதாவதொரு வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைப்பதற்கு இடமளிப்பதற்கு மாநகர சபை தீர்மானிக்கப்பட்டுள்ள வகையிலான வாகனமாயின் தவிர வேறு எந்த வகையிலான வாகனம் அல்லது மோட்டார் வாகனமற்ற எந்தவொரு வாகனமும் வாகன தரிப்பிடத்தில் நிறுத்திவைத்தல், உட்பிரவேசித்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு முற்படுதல் கூடாது.

(ஆ) வாகன தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்ற ஏதாவதொரு வாகனம் உரிய வாகன தரிப்பிடத்தில் இருந்து வெளியில் எடுப்பதற்காக உரிய வாகனத்தை செயலிழந்த போது செயல்படாதவிடத்து, உரிய வாகனத்தை இழுத்துச் செல்வதற்காக வாகன தரிப்பிடத்தினுள் வருகின்ற வேறு எந்த வாகனத்தையும் இந்த தரிப்பிடத்தினுள் நுழைவதற்கான இடவசதி இருப்பின் அவ்வாறு வருகின்ற வேறு வாகனங்களுக்கு (அ) பந்தியின் சட்டதிட்டங்களுக்கு உட்படுதலாகாது. என்றாலும் உரிய வாகனத்தை இழுத்து செல்லும்போது வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மற்றைய வாகனங்களுக்கு எந்தவொரு இடையூறு, தீங்கு ஏற்படாதவாறு இழுத்துச் செல்லல் வேண்டும்.

20. எவர் ஒருவரினாலும் ஏதாவதொரு வாகன தரிப்பிடத்தினுள்-

(அ) வாகனத்தினை கழுவுதல் அவ்வாறு செய்வதற்கு முற்படுதல்;

(ஆ) ஏதாவதொரு வாகனத்தினை அப்புறப்படுத்திக் கொள்வறதற்காக உரிய வாகனத்தினை செயல் படுத்துவதற்கு தேவையான புனரமைப்பு அல்லது சக்கரத்தினை மாற்றுதல் அல்லது வேறு அலுவலுக் காகவோ புனரமைத்தல்;

(இ) (ஆ) பந்தியில் ஏதாவதொரு புனரமைப்பின் போது சந்தர்ப்பத்திற்கேற்ற காரணங்கள் பற்றி கவனத்தில் கொள்ளும் போது தவிர தேவையற்ற அல்லது இடையூறான அல்லது ஏதாவதொரு சப்தம் ஏற்படுத்தல்;

(ஈ) உரிய வாகன தரிப்பிடத்தின் பொறுப்பாளரின் அனுமதியின்றி வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து அந்த வாகன தரிப்பிடத்திலே கொண்டு சென்று வேறு இடத்தில் நிறுத்தி வைத்தல்;

(உ) உரிய வாகன தரிப்பிடத்தில் போக்குவரத்து பாதைக் கோடு அல்லது உட் பிரவேசிக்கும் வெளியில் செல்லும் நுழை வாயில்களை இடையூறு செய்யும் வகையில் வாகனங்களை நிறுத்துதல்;

(ஊ) விபத்தினை தடுத்தல் அல்லது வாகனத்தினை அல்லது அங்கு தரித்திருப்போரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் அல்லது செயற்பாட்டிற்காக விடப்பட்டுள்ள வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள ஆபத்தினை உணர்த்தும் உபகரணங்களை சப்தப்படுத்தல்;

(எ) தரித்து வைக்கப்பட்டுள்ள அல்லது உரிய வாகன தரிப்பிடத்திற்கு பிரவேசிக்கின்ற அல்லது வெளியேறுகின்ற வாகனத்தின் சூழலினை சப்தப்படுத்தல்;

(ஏ) மது அருந்துதல் அல்லது வெற்றிலை எச்சில் துப்புதல் அல்லது தேவையற்ற வார்த்தைகளை உபயோகித்தல் அல்லது சண்டை சச்சரவுகளை ஏற்படுத்தல்

என்பன செய்யலாகாது.

21. ஏதாவதொரு வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கின்ற வாகனத்தின் பாதுகாப்பு பற்றிய பொறுப்பு அந்த வாகனத்தின் உரிமையாளரினதாகும். வாகன தரிப்பிடத்தினுள் ஏற்படுகின்ற நட்டம் அல்லது இடையூறு சம்பந்தமாக மாநகர சபை அல்லது நகர ஆணையாளர் அல்லது வாகன தரிப்பிட பொறுப்பாளர், பொறுப்பு கூறமாட்டார்கள்.

22. துணைவிதி 6 இல் குறிப்பிடப்பட்டவாறு ஏதாவதொரு வாகன தரிப்பிடத்தினுள் அமைந்துள்ள வாகனம் செல்ல வேண்டிய பக்கத்தினை காட்டுகின்ற குறியிடப்பட்டுள்ள பக்கத்திற்கு நேர் எதிராக எந்த வாகனமும் போக்குவரத்து செய்யலாகாது.

23. ஏதாவதொரு வாகன தரிப்பிடத்தில் செய்யப்பட்டுள்ள கட்டிடத்திற்கு அல்லது அதனுள் காணப்படும் உபகரணங்களுக்கு கேடு விளைவித்தல் அல்லது உருச் சிதைவு ஏற்படுத்தல் எவராலும் செய்யலாகாது.

தன் விருப்பம்/ கைவிடல்/ விடுவித்தல்.

24. (அ) மாநகர சபை பிரதேசத்தினுள், ''வாகன தரிப்பிடம்'' என்று அறிமுகப்படுத்துகின்ற மோட்டார் வாகனம் நிறுத்தும் செயற்பாட்டிற்காக.

(i) மாநகர சபையிற்குரிய ஏதாவதொரு காணி அல்லது
(ii) வேறு ஏதாவதொரு அதிகார சபையுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒப்பந்தப்படி உரிய அதிகார சபைக்குரிய காணியினை ஒதுக்கிக் கொள்வதற்கு மாநகர சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) ஏதாவதொரு வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கக்கூடிய வாகன வகையும் ஒரே தடவையில் நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதனை காலத்திற்கு காலம் தீர்மானித்தல் மாநகர சபையினாலாகும்.

25. எல்லா வாகன தரிப்பிடங்களுக்கும் குறைந்தபட்சம் வாகனம் உட்பிரவேசிப்பதற்காக ஒரு நுழைவாயிலும் வெளிச் செல்வதற்காக வேறு ஒரு வாயில் என்று இரண்டு வாயில்களையும் வேறுபடுத்தி இருத்தல் வேண்டும். இன்னும் வாகனங்களை திருப்புவதற்காகவே ஒரு பகுதியினை ஒதுக்கப்பட்டிருப்பின் ஒரே தடவையில் இரண்டு வாகனங்கள் போக்குவரத்து செய்யக்கூடிய வகையில் இரு போக்குவரத்து பாதைகளையும் வாயிலில் இட வசதிகளை அமைத்துள்ள சந்தர்ப்பத்தில் வாகனம் உள் நுழைதல் மற்றும் வெளியேறுதலுக்காக ஒரு வாயில் மாத்திரம் இருப்பதற்கு வழிவகுத்தல் வேண்டும்.

உரிமப் பத்திரத்தில் அல்லது அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம்.

26. இந்த துணை விதியின் கீழ் வழங்கப்பட்ட எல்லா உரிமப் பத்திரமும் முன்பே இரத்து செய்யாது போனால் அன்றி அந்த உரிமப் பத்திரம் வழங்கப்பட்டது எந்த வருடத்திற்கானதோ அந்த வருடத்தில் திசெம்பர் மாதம் முப்பத்தியோராம் திகதி முடிவடைதல் வேண்டும்.

துணைவிதியினை மீறல்.

27. இந்த துணை விதியில் உட்படுத்தப்பட்டுள்ள சட்டத்திட்டங்களில் ஒன்றையேனும் அல்லது சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் மீறுதல் குற்றமாகும்.

தண்டமும் தண்டனையும்.

28. இந்தத் துணை விதியில் உட்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்டங்களை மீறுதல் பற்றிய உரிய நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் உரிய குற்றம் சம்பந்தமாக (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்திற்கு உள்ளாதல் வேண்டும். அது போன்று அங்கு ஏதாவதொரு குற்றம் சம்பந்தமாக உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் மேற்கூறப்பட்ட துணை விதியில் குறிப்பிடப்பட்டவாறு தண்டத்திற்குட்பட்ட எவர் ஒருவரினாலும் உரிய மீறல் தொடர்ந்தும் செய்து கொண்டு செல்லும் போது மேற்கூறப்பட்ட 267 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக தண்டத்திற்கு உள்ளாதல் வேண்டும்.

பொருள் கோடலும் வரைவிலக்கணமும்.

29. வாக்கியம் சம்பந்தமாக அர்த்தம் தேவைப்படின், அது பற்றி இந்த பகுதியில் துணைவிதிகளில்–

''பாதை'' என்பது, மாநகர சபைக்குரிய ஏதாவதொரு ஒழுங்கை, பாதை, தெரு, வீதி, நடை பாதை, படித் தொடர், பாலம், தொங்கு பாலம் என்று கருத்துப்படுவதுடன், மாநகர சபைக்குரிய ஏதாவதொரு ஒழுங்கை, பாதை,

தெரு, வீதி, நடைபாதை, படி தொடர்பில் பொருத்தப்பட்டுள்ள அல்லது நாட்டப்பட்டுள்ள ஏதாவதொரு தூர நோக்கி, மைல்கல், எல்லை கல், விளக்கு தூண், பாலம், எந்த வகையிலானதொரு போக்கு, நீரோடை, மதில், வளைவு, அகழி, கால்வாய், குழாய், சங்கிலி பாலம், வேலி, சமிக்ஞைப் பலகை, பாதை பெயர் பலகை அல்லது பாதைக்குட்பட்ட நடைபாதை அதற்குற்படும்.

"வாகனம்" என்பது, மோட்டார் வாகனச் சட்டத்தின் ஏதாவதொரு மோட்டார் வாகனத்திற்காக வழங்கப்பட்ட பொருள்கோடலுக்கு பொருந்துகின்ற ஏதாவதொரு மோட்டார் வாகனம் என்று பொருள்படும்.

"மாநகர முதல்வர்" மற்றும் "பிரதி நகர முதல்வர்" என்பது, முறையாக உள்ளூராட்சி சபை தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர சபையின் நகர முதல்வர் அல்லது பிரதி நகர முதல்வர் என்று பொருள்படும்.

"மாநகர சபை" என்பது, ஏதாவதொரு மாநகரத்திற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்ற அல்லது அமைக்கப்பட்டது என்று கருதுகின்ற மாநகர சபையாகும்.

"மாநகர ஆணையாளர்" என்பது மாநகர சபையின் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்படுகின்றது என்று கருதுகின்ற மாநகர சபையின் நகர ஆணையாளர் என்று கருதப்படுவதுடன், பிரதி அல்லது உதவி ஆணையாளராக செயற்படுவதற்காக நியமிக்கப்பட்டவர் ஆணையாளரின் அதிகாரம், செயற்பாடு நடைமுறைப்படுத்துவதற்காக இந்த கட்டளைச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலருக்கு அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்ட அளவிற்கு அதற்குள்ளாகும்.

### *முதலாவது அட்டவணை*

*12 ஆவது துணைவிதியில் (ஆ) பந்தி*

.....................................ீசபை
.............. வாகன தரிப்பிடம்
வாகனம் நிறுத்தி வைப்பதற்கான கட்டணம்
பற்றுச்சீட்டு இலக்கம் ................

| | |
|---|---|
| வாகனத்தின் இலக்கம் | : -----------. |
| திகதி | : -----------. |
| வருகை தந்த நேரம் | : மு. ப./பி. ப. --------. |
| வெளியேறிய நேரம் | : மு. ப./பி. ப. --------. |
| அறவிடப்பட்ட கட்டணம் | : ரூபா -----------. |

### இரண்டாவது அட்டவணை

**14 ஆவது துணைவிதியில் (அ) பந்தி**

அட்டையின் முன்பக்கம்

..................................... ீசபை
..................................... வாகன தரிப்பிடம்
உட்பிரவேசிக்கும் அட்டை

அட்டையின் பின் பக்கம்

இந்த அட்டையினை மற்றவர்களுக்கு வழங்கப்படலாகாது

வாகன தரிப்பிடத்திலிருந்து வெளியேறும் போது மீளளித்தல் வேண்டும்.

6-645/3

**குருநாகல் மாநகர சபை**

*குருநாகல் மாநகர சபை பிரதேசத்தினுள் பிரசார அறிவித்தல் பற்றிய இடைநிலைச் சட்டம்*

*(252 ஆம் அத்தியாயமான) 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 267 ஆம் பிரிவில் முதலாவது உப பிரிவுடன்சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய உரிய கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் (06) ஆம் உப பிரிவில் (ஏ) பந்தியில் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி குருநாகல் மாநகரசபையினால் அமைக்கப்பட்ட மற்றும் 2014.09.30 ஆந் திகதி நடந்த உரிய மாநகர சபையின் 4(1) ஆன பிரேரணையினால் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குருநாகல் மாநகர சபையின் குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் பிரசார அறிவித்தல் பற்றிய இடைநிலைச் சட்டம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நிகழ்வு) கோட்பாட்டுச் சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய மேற்கூறப்பட்ட மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 268 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவுப் படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*சட்டத்தரணி ஜே. பி. தயாசிறி பத்மகுமார ஜயசேகர,*
*உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்,*
*வடமேல் மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*வடமேல் மாகாணம்,*
*குருநாகல்,*
*2015, யுன் 05.*

**அட்டவணை**

**குருநாகல் மாநகர சபை பிரதேசத்தினுள் பிரசார அறிவித்தல் பற்றிய துணைவிதி**

*துணைவிதியின் பெயர்.*

*1. இந்த துணை விதி குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவில் பிரசார அறிவித்தல் பற்றிய துணை விதி என்று அறிமுகப்படுத்தப்படும்.*

*நோக்கம்.*

*2. குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் காட்சிப்படுத்தப்படும் எல்லா பிரசார அறிவித்தல் பொது மக்களுக்கும் சூழலுக்கும் அனுகூலமான வகையில் சட்டதிட்டங்களுக்கு அமைய முறையாக கொண்டு நடாத்தலும் நிருவகித்தலும் நோக்கமாகும்.*

*துணைவிதியினை விதி அமைப்பதற்காக சட்டரீதியான ஏற்பாடுகள்.*

*3. மாநகர சபையின் கட்டளைச் சட்டத்தின் 267 (1) பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய 272(6) (அ) உப பிரிவின் கீழ் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இந்த துணை விதி அமைக்கப்பட்டுள்ளது.*

*செய்யவேண்டிய செயற்பாடுகள.*

*4. மாநகர சபையினுள் பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்காக இடமளிக்கப்படுகின்ற பிரதேசம் எது என்று மாநகர சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படலாம். பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்காக இடமளிக்கப்படுகின்ற பிரதேசம் பற்றி காலத்திற்கு காலம் மாநகர சபையினால் எடுக்கப்படுகின்ற தீர்மானம் பற்றி அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மாநகர ஆணையாளரின் செயற்பாடாவதுடன், உரிய அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த திகதி தொடக்கம் அங்கு குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு குறிப்பிட்ட திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.*

*5. இந்த துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட எல்லா உரிமப் பத்திரமும் முன்பே இரத்து செய்யப்படாதிருந்தால் அன்றி அந்த உரிமப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்காக மாத்திரம் செல்லுபடியாதல் வேண்டும்.*

*6. ஏதாவதொரு பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்காக உரிமப் பத்திரம் தேவைப்படும் எவர் ஒருவரினாலும், குறைந்தபட்சம் உரிய பிரச்சார அறிவித்தலினை காட்சிப்படுத்துவதற்கு கருதுகின்ற திகதிக்கு வேலை நாட்கள் 2 இற்கு முன்பே இங்கு காணப்படும் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட படிவத்திற்கமைய அமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை நகர ஆணையாளரிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.*

*(அ) உரிமப் பத்திரம் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கின்ற எல்லா விண்ணப்பப் படிவத்துடனும் மில்லி மீற்றர் 210 × மில்லி மீற்றர் 297 அளவிலான கடதாசியினை 1 : 1000 அளவிற்கமைய அமைத்து அறிவித்தல் மாதிரி ஒன்றினையும் பிரசார அறிவித்தல் செய்வதற்கு கருதுகின்ற இடத்தின் அல்லது இடங்களின் மில்லி மீற்றர் 210 × மில்லிமீற்றர் 297 தாளில், 1 : 1000 அளவிடையில் வரையப்பட்ட/நில வரைபடம் வரைபடங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தலுடன் பிரசார அறிவித்தலில் உரிய நீளம் மற்றும் அகலம் அங்கு குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.*

7. சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த விண்ணப்பப் படிவத்திற்காகவும் இந்த பகுதியில் துணை விதியின் கீழ் உரிமப் பத்திரம் வழங்குவதற்கு தேவையான நிப்நதனைகளை பூர்த்தி செய்யப்பட்டுள்ளபோது அது பற்றி நகர ஆணையாளரின் அல்லது அதிகாரமுள்ள அலுவலர் ஒருவரினால் விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

(அ) இந்த துணை விதியில் எது குறிப்பிட்டிருந்த போதிலும் ஏதாவதொரு சமய செயற்பாடுகளுக்காக அல்லது நிதி அறவிடாது நடாத்தப்படுகின்ற ஏதாவதொரு கலாசார நடவடிக்கை சம்பந்தமான பிரசார அறிவித்தல் உரிமப் பத்திரக் கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும். என்றாலும் அவ்வாறான பிரசார அறிவித்தலுக்காக இந்த பகுதியில் துணை விதிகளில் உள்ள மற்றைய சட்டதிட்டங்கள் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

8. காட்சிப்படுத்தப்படுகின்ற எல்லா அறிவித்தலுக்காகவும் வழங்கப்பட்ட உரிமப் பத்திரத்தில் இலக்கத்தினை அந்த அறிவித்தலில் அல்லது அந்த அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு முன் ஒவ்வொரு அறிவித்தலிலும் இடது பக்க கீழ் மூலையில் குறிப்பிடப்படல் உரிமப் பத்திரதாரியின் செயலாகும்.

9. இந்த துணை விதியின் கீழ் உரிமப் பத்திரம் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட பிரசார அறிவித்தலினை காட்சிப்படுத்தப்படுகின்ற இறுதி திகதியின் பின் நாற்பத்தி எட்டு மணி நேரத்திற்கு முன்பே உரிய பிரசார அறிவித்தலினையும் அதற்காக உபயோகிக்கப்பட்ட மற்றைய எல்லா பொருட்களையும் அந்த இடத்தில் அல்லது இடங்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் உரிமப் பத்திரதாரியின் பொறுப்பாகும்.

10. ஏதாவதொரு வியாபார நிலையத்தின் பெயர், இலக்கம் மற்றும்/அல்லது முகவரியுடன் வேறு எந்தவொரு வியாபார பொருளின் அல்லது சேவையின் பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மற்றும் ஏதாவதொரு வீட்டில் எந்த விதத்திலோ வியாபார பொருளின் அல்லது சேவையின் பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில், அந்த பிரசார அறிவித்தல் அல்லது பிரசார அறிவித்தல்கள் இந்த துணை விதிகளில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். இந்த துணை விதியின் சட்டதிட்டங்கள் சம்பந்தமாக உரிமப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியவராக உரிய வியாபார நிலையத்தின் அல்லது வீட்டின் உரிமையாளர், முகாமையாளர் அல்லது அந்த சந்தர்ப்பத்தில் அங்கு நிறுவகப் பொறுப்பாளராக எவரொருவர் என்று கருதப்படும்.

(i) மாநகர சபையின் முதல்வர் குழுவின் தலைவராதல் வேண்டும்;
(ii) மாநகர சபையின் ஆணையாளர் குழுவின் செயலாளராதல் வேண்டும்;
(iii) எந்த வருடமும் திசெம்பர் மாதம் சபைக் கூட்டத்தில் முன்னைய வருடத்திற்காக வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற மாநகர சபையின் உறுப்பினர்கள் நால்வர்;
(iv) மாநகர சபையின் பிரதான பொறியியலாளர் அல்லது உரிய காலத்தில் நகர பொறியியலாளர் திணைக்களத்தில் பிரதான பதவியில் சேவையாற்றும் அலுவலர்;
(v) குருநாகல் மாநகர சபையில் தீயணைக்கும் பிரிவில் நிலைய பொறுப்பதிகாரி/பிரதான தீயணைப்பாளர்;
(vi) மாநகர சபையின் உள்ளூராட்சி அலுவலர் ஒருவர்;
(vii) 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அழிவு முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், மாவட்ட இடர் முகாமைத்துவ குழுவின் மாவட்ட ஒருங்கிணைந்த உத்தியோகத்தர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் வேறு ஒரு பிரதிநிதி;
(viii) மாநகர சபை பிரதேசம் உட்படுகின்ற பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற வேறு ஒரு பிரதிநதி;
(ix) மாநகர சபையின் சுகாதார வைத்திய அலுவலர்.

(அ) மாநகர பிரதேசத்தில் சமயத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்ந்தெடுக்கப்படுகின்ற மதகுரு ஒருவர் என்ற வகையில்;
(ஆ) குறைந்தபட்சம் மாநகர சபை பிரதேசத்தில் செயற்படும் தொண்டர் அமைப்புக்கள் இரண்டில் பிரதிநிதிகள் இருவர்;
(இ) குறைந்தபட்சம் மாநகர சபை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நகர அபிவிருத்தி ஆலோசனை கமிட்டியின் பிரதிநிதிகள் மூவர்;
(ஈ) மாநகர சபை பிரதேசத்தில் அரச பாடசாலை உள்ளடக்கப்படுகின்ற வலைய பணிப்பாளர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் வேறு ஒரு பிரதிநிதி.

11.(அ) நகர ஆணையாளரினால் உரிய அலுவலுக்காக இங்கு முதலாவது உப அட்டவணையில் காணப்படும் படிவத்திற்கு அமைய அமைத்து வழங்கப்பட்ட செல்லுபடியாகும் உரிமப் பத்திரம் ஒன்று இருப்பதானால் மாத்திரம் எவர் ஒருவருக்கு மாநகர சபை பிரதேசத்தினுள் பிரசித்த இடமொன்றிலிருந்து பார்த்த போது தெரியும் வண்ணம் எந்த வகையிலாவது பிரசார அறிவித்தலினை காட்சிப்படுத்தல் அல்லது காட்சிப்படுத்துவதற்கு திட்டமிடவோ கூடாது. செய்யலாகாத அலுவல்கள்.

(ஆ) காட்சிப்படுத்துவதற்காக செல்லுபடியாகும் உரிமப் பத்திரம் பெற்றிருந்தாலும் எந்தவொரு பிரசார அறிவித்தல், பிரசித்த இடத்தில் இருந்து பார்க்கும் போது தெரியும் வகையில் உரிய உரிமப் பத்திரத்தில் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள இடத்தில்

அல்லது இடங்களில் தவிர வேறு எந்த இடற்களிலும் காடசிப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதற்கு உடன்படல் கூடாது.

12. இந்த துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை அவ்வாறே விண்ணப்பதாரியினால் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் அன்றி நகர ஆணையாளரினால் எந்த முறையிலாவது பிரசார அறிவித்தலினை காட்சிப்படுத்துவதற்காக உரிமப் பத்திரம் வழங்கப்படலாகாது.

(அ) இந்த துணை விதியில் குறிப்பிடப்பட்ட வகையில் மாநகர சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்பட்ட வலையத்திற்குரிய இடத்தல் காட்சிப்படுத்துவதற்கான கோரிக்கையாதல் வேண்டும்;

(ஆ) அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு கோருகின்ற இடத்திற்காக வேறு ஒருவருக்கு முன்பே வழங்கப்பட்ட உரிமப் பத்திரம் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருத்தல் வேண்டும். என்றாலும் முன்பு வழங்கப்பட்டதும் செல்லுபடியாகும் உரிமப் பத்திரத்தின் கீழ் காட்சிப்படுத்தப்படுகின்ற ஏதாவதொரு அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலுக்கு தடை ஏற்படாத வகையில் அதற்கு அண்மையில் அறிவித்தல் பலகை ஒன்றினை பொருத்தி காட்சிப்படுத்துவதற்கு உரிமப் பத்திரம் வழங்குவதற்கு இந்த சட்டதிட்டம் தடையாக இருத்தலாகாது.

(இ) காட்சிப்படுத்துவதற்காக உரிமப் பத்திரம் கோருகின்ற அறிவித்தல் இழிவான அல்லது அருவருப்பான அல்லது முறையற்ற அல்லது சமயத்திற்கு அல்லது ஒரு வர்க்க மக்களுக்கு அல்லது மக்கள் பிரிவிற்கு தாக்கம் ஏற்படும் வகையில் அமைகின்ற காட்சி அல்லது சொற்கள் உட்பட்ட அறிவித்தலாக அமையலாகாது.

(ஈ) இந்த துணை விதியின் கீழ் மாநகர சபையினால் கட்டமைக்கப்பட்டுள்ள காட்சி பலகையில் காட்சிப்படுத்துவதற்கு உரிமப் பத்திரம் கோரும் சந்தர்ப்பத்தில் அந்த காட்சிப்பலகையில் அந்த பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்காக போதியளவு இடவசதி இருக்க வேண்டியதுடன் அந்த சந்தர்ப்பத்தில் முன்பே வழங்கப்பட்ட ஏதாவதொரு உரிமப் பத்திரத்தின் கீழ் காட்சிப்படுத்துகின்ற பிரசாரத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த காலம் முடிவடைந்திருத்தல் வேண்டும்.

(உ) எந்தவொரு எழுத்துமூல சட்டத்தினால் தடை செய்யப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட வகையிலான பிரசார அறிவித்தல் அல்லது காட்சிப்படுத்தலாக அமையலாகாது.

13. பிரசார அறிவித்தலின் அருகினால் போக்குவரத்து செய்கின்ற எவருக்கும் அல்லது வாகனத்திற்கு தடங்களாக அல்லது விபத்து ஏற்படும் வகையில் பிரசார அறிவித்தல் பொருத்தப்படலாகாது. அது போன்று வாகனத்தினை செலுத்துகின்ற சாரதியின் கவனம் வேறு வகையில் செல்வதாக அல்லது சாரதியின் பார்வைக்கு இடையூறு ஏற்படும் வகையில் மின் விளக்கு பொருத்துதல் அல்லது ஒளி கதிர்களை பரப்பப்படாதது பற்றி போக்குவரத்து பொலிஸ் நிலைய பொருப்பதிகாரியின் அறிக்கையினை பெற்றுக்கொண்டே இன்றி காட்சிப்படுத்தலாகாது.

14. காட்சிப்படுத்தலுக்காக செல்லுபடியாகும் உரிமப் பத்திரத்தினை பெற்றுக்கொண்டு காட்சிப்படுத்துகின்ற எந்த ஒரு அறிவித்தலுக்கும் ஏற்படுகின்ற அழிவு அல்லது உருச் சிதைவு அல்லது அகற்றுதல் சம்பந்தமாக மாநகர சபை எந்த விதத்திலும் பொறுப்பு கூறாது.

15. எந்த விதத்திலும் பிரசார அறிவித்தல் பொது இடத்தில் இருக்கின்ற அல்லது அவ்வாறான இடத்தின் அருகில் இருக்கின்ற மரத்தில், மரத்தின் கொப்பில், அல்லது வேறு எந்த பகுதியிலாவது அல்லது பொது கட்டிடங்களுக்கு சம்பந்தப்படுத்தி பொருத்துதல், ஒட்டுதல், தொங்கவிடல், கட்டிவைத்தல் மேலே பறக்கவிடல் போன்றவற்றை எவராலும் செய்யலாகாது.

உள்ளூர் அதிகார சபையின் பொறுப்புக்கள்.

16.(அ) இந்த துணைவிதியின் கீழ் மாநகர சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற எந்தவொரு பிரதேசத்திலும் மாநகர சபைக்குரிய ஏதாவதொரு காணியில் அல்லது மாநகர சபையினால் ஏற்படுத்திக் கொள்கின்ற ஒப்பந்தப்படி பெற்றுக்கொள்ளும் வேறு எவர் ஒருவரினது காணி அல்லது பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்த முடிந்த அறிவித்தல் பலகையினை அமைத்து கொண்டு நடாத்துவதற்கு மாநகர சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழ் மாநகர சபையினால் கட்டமைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு அறிவித்தல் பலகையில் பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்காக மாநகர சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணம் காட்சியாளர்களிடத்தில் இருந்து அறவிடுவதற்கு மாநகர சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(இ) (அ) பந்தியின் சட்டதிட்டங்களின் கீழ் மாநகர சபையினால் விதிக்கப்படுகின்ற வருடாந்த உரிமப் பத்திரக் கட்டணம் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்தல் நகர ஆணையாளரின் செயற்பாடாகும்.

17. (அ) பிரசார அறிவித்தலினை காட்சிப்படுத்த சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவத்திற்காக உரிமப் பத்திரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மாநகர சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற அளவில் கட்டுப்பணமாக விண்ணப்பதாரியினால் மாநகர சபையில் வைப்பிலிடும் வரையில் நகர ஆணையாளரினால் உரிய விண்ணப்பத்திற்கு உரிமப் பத்திரம் வழங்கப்படலாகாது.

(ஆ) ஏதாவதொரு பிரசார அறிவித்தலினை காட்சிப்படுத்துவதற்காக உரிமப் பத்திரம் வழங்குவதற்கு முன் மாநகர சபையில் வைப்பு செய்ய வேண்டிய தொகையின் அளவினை மாநகர சபையினால் எடுக்கப்படும் தீர்மானத்தினை வர்த்தமானியில் பிரசுரித்தல் மாநகர ஆணையாளரின் அலுவலாதல் வேண்டும்.

18. (அ) 9 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டவாறு செயற்பட்டதன் பின்பு மாநகர ஆணையாளரிடத்தில் எழுத்து மூலம் செய்யப்படும் கோரிக்கை மூலம் உரிய உரிமப் பத்திரத்தினை வழங்குவதற்கு முன்பு மாநகர சபையில் வைப்பிலிட்ட வைப்புத் தொகையினை மீளப் பெறுவதற்கு உரிமப் பத்திர உரிமையாளருக்கு முடியும்.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு எழுத்துமூல கோரிக்கை கிடைத்த பின்பு உரிய வைப்புப் பணத்தினை உரிமப் பத்திரதாரிக்கு வழங்க முன்பு-

(i) துணை விதியில் 9 இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை உரிமப் பத்திரதாரியினால் உரியவாறு பின்பற்றி உள்ளாரா என்பது பற்றி,

(ii) அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது மாநகர சபையினால் கட்டமைக்கப்பட்ட அறிவித்தல் பலகையில் என்ற சந்தர்ப்பத்தில் அந்த அறிவித்தலை அகற்றும்போது அல்லது உரிமப் பத்திரதாரியினால் பொறுப்பு கூற வேண்டிய ஏதாவதொரு அலுவல் காரணமாக உரிய காட்சிப் பலகைக்கு எவ்வித தீங்கும் ஏற்படவில்லை என்பது பற்றி,

உறுதிப்படுத்தி கொள்வது மாநகர சபை ஆணையாளரின் செயற்பாடாகும்.

(இ) உரிமப் பத்திரதாரியினால் 9 ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டவாறு செயல்பட்டிருப்பது பற்றியும் மாநகர சபையின் அறிவித்தல் பலகைக்கு எவ்வித தீங்கும் ஏற்படவில்லை என்றும் (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு உறுதிப்படுத்திக்கொள்ளும்போது நகர ஆணையாளர் திருப்தியடைவாராயின் அன்றி உரிய வைப்புத் தொகை உரிமப் பத்திரதாரிக்கு எல்லாத் தொகையையும் செலுத்தலாகாது. எந்த உரிமப் பத்திரதாரியினாலும் 9 ஆம் துணை விதியில் குறிப்பிடப்பட்டவாறு செயல்படுதல் தவிர்க்கும் சந்தர்ப்பத்தில் மாநகர சபையின் அறிவித்தல் பலகைக்கு தீங்கு ஏற்பட்டிருந்த போது, சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உரிய அலுவலை செய்தல் அல்லது அறிவித்தல் பலகையினை புனரமைத்தல் அல்லது இரண்டு செயற்பாடுகளுக்காகவும் மாநகர சபைக்கு ஏற்க வேண்டிய செலவினை வைப்புத் தொகையில் இருந்து குறைத்துக் கொள்ள வேண்டியதுடன் மீதியாகும் தொகை இருப்பின் அந்த தொகையினை மாத்திரம் உரிமப் பத்திரதாரிக்கு மீள் செலுத்த முடியும்.

(ஈ) (இ) பந்தியில் குறிப்பிட்டவாறு செயல்படும்போது மாநகர சபைக்கு அறவிடப்பட வேண்டிய தொகையினை வைப்பிலிட்ட கட்டுப்பணத்தை விட அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் மேலும் அறவிடப்பட வேண்டிய தொகையினை உரிமப் பத்திரதாரியினால் மாநகர சபைக்கு செலுத்த வேண்டும்.

19. மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் கொண்டு நடாத்தப்படுகின்ற ஏதாவதொரு வியாபார நிலையத்தில் அல்லது கைத்தொழில் நிலையத்தின் பெயரினை, முகவரி மற்றும் உரிய வியாபார நிலையத்தில் செய்யப்படுகின்ற வியாபாரத்தின் தன்மையினை அல்லது கைத்தொழில் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளில் தன்மையை அல்லது வெளிப்படுத்துகின்ற அறிவித்தல் பலகை ஒன்றில் மாத்திரம் உரிய வியாபார நிலையத்தில் அல்லது கைத்தொழில் நிலையத்தின் முன் பக்கத்தில் காட்சிப்படுத்தல், வீட்டு பெயர் பலகை மற்றும் ஏதாவதொரு சொத்து குத்தகைக்கு விடுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு அல்லது வாடகைக்கு கொடுப்பதற்கு அல்லது உரிய சொத்தின் மீது காட்சிப்படுத்தப்படும் ''குத்தகைக்கு விடப்படும்'' என்று அல்லது ''விற்பனைக்கு உண்டு'' என்று அல்லது ''வாடகைக்கு விடப்படும்'' என்று குறிப்பிடப்படும் பிரசார அறிவித்தல் ஒன்றிற்கு மாத்திரம் இந்த பகுதியில் துணைவிதிகளின் சட்டதிட்டங்கள் உரிதன்று. என்றாலும் அவ்வாறான அறிவித்தல் பதாகைகள் ஒன்றிற்கு மேற்பட்டவற்றை காட்சிப்படுத்தும் போது அவ்வாறு மேற்படும் அறிவித்தல் பதாகைக்காகவும் இந்த பகுதியின் துணை விதியில் குறிப்பிடப்பட்ட சட்டத்திட்டங்கள் அதிகாரமுடையதாகும். தன் விருப்பம்/ கைவிடல்/ விடுவித்தல்.

20. அரசு அல்லது மாகாண சபை அல்லது மாநகர சபையினால் காட்சிப்படுத்தப்படுகின்ற பிரசார அறிவித்தலுக்காக இந்த பகுதியின் துணை விதிகளின் சட்டதிட்டங்கள் உரித்தன்று.

21. பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்தும் இடம்.- அறவிடலும் கட்டணமும்.

(i) மாநகர சபையினால் இந்த துணை விதியின் கீழ் கட்டமைக்கப்பட்ட அறிவித்தல் பலகையாகும் போது அந்த அறிவித்தல் பலகையில் பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்காக இந்த துணை விதியில் 16 (ஆ) பந்தியின் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணத்தினை மாநகர சபைக்கு செலுத்தி இருத்தல் வேண்டும், அல்லாது விடின்;

(ii) கோரிக்கையாளர் அல்லாத வேறு எவர் ஒருவருக்கு அல்லது ஏதாவதொரு அதிகார சபைக்குரிய இடமாகும் போது அவர் அல்லது அதிகார சபையினால் உரிய பிரசார அறிவித்தல் அந்த இடத்தில் காட்சிப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது பற்றி உறுதிப்படுத்துகின்ற எழுத்துமூல சாட்சி சமர்ப்பித்தல் வேண்டும்;

(iii) இந்த துணைவிதியின் கீழ் வழங்கப்படுகின்ற எல்லா உரிமப் பத்திரமும் மாநகர சபையிடத்தில் செலுத்தப்பட வேண்டிய உரிமப் பத்திரக் கட்டணம், உரிய உரிமப் பத்திரத்திற்காக அறவிடப்படும் கட்டணம் 252 ஆம் அதிகாரமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தில் 247 அ (2) உப பிரிவில் 1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட வருடாந்த பெறுமதி மற்றும் அதற்கு ஒத்த 11 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஆகக்கூடிய கட்டணத்தினை மீறாத வகையில் கட்டணமாக வேண்டியதுடன் மாநகர சபையினால் உரிய கட்டணம் வருடாந்தம் விதிக்கப்படல் வேண்டும்.

அதிகாரத்தினை வழங்கல்.

23. இந்த துணை விதிகளுக்குரிய நடவடிக்கை கொண்டு நடாத்தல், மேற்பார்வை செய்தல், நிருவகித்தல் சம்பந்தமாக மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் அங்கு நகர முதல்வர் அல்லது நகர ஆணையாளரினால் சபையின் எந்தவொரு அலுவலருக்கு அளித்தல் சட்டமாகும்.

உரிமப் பத்திரத்தின் அல்லது அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடி காலம்.

24. (அ) இந்த துணை விதியின் கீழ் வழங்கப்பட்ட ஏதாவதொரு உரிமப் பத்திரம் முன்பே இரத்து செய்யப்படாத போது உரிய உரிமப் பத்திரம் வழங்கப்பட்டது எந்த வருடத்திற்கோ அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அல்லது அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்காக அனுமதி வழங்கப்பட்ட காலம் முடிவடைந்த பின் அகற்றுதல் வேண்டும்.

(ஆ) ஏதாவதொரு பிரசார அறிவித்தலுக்காக வழங்கப்பட்ட உரிமப் பத்திரத்தின் காலம் முடிவடைந்த பின் அடுத்த வருடத்திற்கும் உரிய பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அந்த வருடத்திற்காக உரிய அறிவித்தலினை காட்சிப்படுத்தலுக்காக புதிய உரிமப் பத்திரம் ஒன்றினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். என்றாலும் பிரசார அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு வழங்கப்படுகின்ற உரிமப் பத்திரத்திற்காக அடுத்த வருடத்திற்காக அறவிடுவதற்கு மாநகர சபை பிரேரிக்கப்பட்ட உரிமப் பத்திரக் கட்டணம் எதுவாயினும் உரிய பிரசார அறிவித்தலுக்காக வழங்கப்படுகின்ற புதிய உரிமப் பத்திரத்திற்காக முன்பு பிரேரிக்கப்பட்ட உரிமப் பத்திரக் கட்டணம் உரித்தாதல் வேண்டும்.

பரிசீலனை செயற்பாடும் அதிகார சபை.

25. (அ) ஏதாவதொரு பிரசார அறிவித்தல் ஒன்றினை பொருத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்ற எந்த வகையிலானதோ அறிவித்தல் பலகை, கட்டமைப்பு அல்லது பொருத்துகை சூழலுக்கு தீங்கு ஏற்படும் வகையில் அல்லது எவர் ஒருவருக்கு அல்லது பலரின் சொத்திற்கு ஆபத்து அல்லது தீங்கு ஏற்படும் வகையில் காணப்படும் சந்தர்ப்பத்தில் அதனை உரிய காலத்தினுள் உரிய நிலைக்குட்படுத்துமாறு உரிமப் பத்திரதாரிக்கு அனுப்பப்படும் அறிவித்தல் மூலம் நிபந்தனை இடுவதற்கு நகர ஆணையாளருக்கு அல்லது அவரின் அதிகாரம் உள்ள அலுவலருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின் கீழான அறிவித்தல் கிடைக்கப்பெற்ற எந்த ஒருவர் உரிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட காலத்தினுள் அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைப்படி செயல்படுதலினை மீறும் சந்தர்ப்பத்தில் நகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள அலுவலர் ஒருவரினால் உரிய பிரசார அறிவித்தலுக்காக வழங்கப்பட்ட உரிமப் பத்திரத்தினை இரத்து செய்தலும் மற்றும் அந்த பிரசார அறிவித்தலினை அகற்றுதல் சட்டரீதியாதல் வேண்டும்.

(இ) மேற்கூறப்பட்ட (ஆ) பந்தியின் சட்டதிட்டங்களின் கீழ் ஏதாவதொரு உரிமப் பத்திரத்தினை இரத்து செய்துள்ள போது உரிய பிரசார அறிவித்தலினை காட்சிப்படுத்துவதற்காக மாநகர சபையில் வைப்பிலிடப்பட்டுள்ள கட்டுப்பணத்தினை மாநகர சபைக்கு உரித்தாதல் வேண்டியதுடன் அந்த கட்டுப்பணத்தினை கோருவதற்கு வேறு எவருக்கும் உரிமை இல்லாதிருத்தல் வேண்டும்.

முறைபாடும் அதற்கான தீர்வும்.

26. ஏதாவதொரு பிரசார அறிவித்தல் ஒன்றினை அமைப்பதற்காக உபயோகப்படுத்துகின்ற எந்தவொரு கட்டமைப்பிற்கு பொருத்துகை அதற்காக உபயோகப்படுத்தப்படுகின்ற வேறு எதுவாயினும் உரிய பிரசார அறிவித்தலினால் அர்த்தம் அல்லது ஏற்படுகின்ற அர்த்தம் காரணமாக ஏதாவதொருவருக்கு ஏற்படுகின்ற அல்லது ஏற்படுவதற்குள்ள ஏதாவதொரு நட்டம் சம்பந்தமாக உரிமப் பத்திரதாரி பொறுப்பிற்கு உள்ளாதல் வேண்டும்.

27. ஏதாவதொரு பிரசார அறிவித்தல் ஒன்றினை காட்சிப்படுத்துவதற்காக இந்த துணை விதியின் கீழ் வழங்கப்பட்ட உரிமப் பத்திரத்தினால் உரிய பிரசார அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அர்த்தம் அறிவிப்பினை சமர்ப்பிப்பதற்காக கொடுக்கப்பட்ட சட்டரீதியான இணக்கம் உட்படுத்தப்பட்டதாக கவனத்தில் கொள்ளாததுடன் அவ்வாறு புரிந்து கொள்ளாதிருத்தல் வேண்டும்.

28. ஏதாவதொரு எழுத்துமூல ஆவணம் அல்லது வாய்மொழி மூலம் மாநகர சபையின் முதல்வர், நகர சபை ஆணையாளர் அல்லது அதிகாரம் உள்ள அலுவலரினால் முறையாக பரிசீலனை ஒன்றினை நடாத்தி அதற்கான தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.

29. இந்த துணை விதிகளில் ஒன்று அல்லது சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் மீறல் குற்றமாகும். துணை விதிகளை மீறல்.

30. இந்த துணை விதியில் ஏதாவதொன்றை மீறும் சந்தர்ப்பத்தில் மீறல் பற்றிய கவனம் செலுத்துமாறு அறிவித்தலுடன் வழங்கப்பட்ட ஏதாவதொரு உரிமப் பத்திரத்தினை இரத்து செய்வதற்கு நகர ஆணையாளருக்கு அல்லது அதிகாரம் உள்ள அலுவலருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

31. இந்த துணைவிதிகளில் உட்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு சட்டதிட்டங்களை மீறுதல் பற்றிய குற்றம் சம்பந்தமாக உரிய நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் உரிய குற்றம் சம்பந்தமாக 252 ஆம் அதிகார மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும். அது போன்று உரிய ஏதாவதொரு குற்றம் சம்பந்தமாக உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் மேற்கூறப்பட்ட துணைவிதியில் குறிப்பிடப்பட்ட வண்ணம் தண்டத்திற்குட்பட்ட எவர் ஒருவரினாலும் உரிய மீறலினை தொடர்ந்து செய்து கொண்டு மேற்கூறப்பட்ட 267 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும். தண்டமும் தண்டனையும்.

32. வாக்கியம் சம்பந்தமாக அர்த்தம் தேவைப்படின், அது பற்றி இந்த பகுதியில் இடைநிலைச் சட்டங்களில்,- பொருள் கோடலும் வரைவிலக்கணமும்.

''மாநகர முதல்வர்'' மற்றும் ''பிரதி மாநகர முதல்வர்'' என்பது, முறையாக உள்ளூராட்சி சபை வாக்கெடுப்பின் கட்டளைச் சட்டதின் படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகர சபையின் நகர முதல்வர் அல்லது பிரதி நகர முதல்வர் என்று பொருள்படும்.

''மாநகர ஆணையாளர்'' என்பது மாநகர சபையின் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்படுகின்றது என்று கருதுகின்ற மாநகர சபையின் மாநகர ஆணையாளர் என்று கருதப்படுவதுடன், பிரதி அல்லது உதவி ஆணையாளராக செயற்படுவதற்காக நியமிக்கப்பட்டவர் மாஆணையாளரின் அதிகாரம் செயற்பாடு நடைமுறைப்படுத்துவதற்காக இந்த கட்டளைச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலருக்கு அவ்வாறு அதிகாரம் வழங்கப்பட்ட அளவிற்கு அதற்குள்ளாகும்.

''மாநகர சபை'' என்பது, ஏதாவதொரு மாநகரத்திற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்ற அல்லது அமைக்கப்பட்டது என்று கருதுகின்ற மாநகர சபையாகும்.

''அதிகாரமுள்ள அலுவலர்'' என்பது, உரிய அலுவலுக்காக மாநகர ஆணையாளரினால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மாநகர சபையின் இடுகாடு அல்லது சுடுகாடு பொறுப்பாளர் என்று கருத்துப்படும்.

''போக்குவரத்து வாகன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி'' என்பது, உரிய அலுவலுக்காக தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரியினால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட குருநாகல் பொலிஸ் நிலைய அலுவலர் என்று கருதப்படும்.

''கடவுட்'' என்பது, பலகை அல்லது வேறு பொருட்களினை உபயோகித்து அமைக்கப்பட்ட சட்டத்தில் ஒட்டுகின்ற அல்லது பொருத்தப்பட்ட பிரசார அறிவித்தல்.

''அறிவித்தல் பலகை'' என்பது பொது மக்கள் தெரிந்துக் கொள்வதற்காக அல்லது கவனத்திற்காக காட்சிப்படுத்தப்படுகின்ற ஏதாவதொரு பிரசார அறிவித்தலினை பொருத்துதல் அல்லது ஒட்டுதலுக்காக அமைக்கப்பட்ட எந்த வகையிலானதோ ஒரு நிரந்தர பலகை.

''பிரசார அறிவித்தல்'' என்பது எவர் ஒருவரினால் ஏதாவதொரு காணியில் அல்லது கட்டிடத்தில் எங்கேனும் முழுமையாகவோ அல்லது அரைவாசியாகவோ காட்சிப்படுத்தப்படுகின்றதும் பொது மக்கள் தெரிந்துக்கொள்வதற்காக அல்லது கவனத்திற்காக காட்சிப்படுத்துகின்ற ஒட்டுகின்ற, பொருத்துகின்ற. கட்டமைக்கின்ற, தொங்கவிடப்படுகின்ற அல்லது வேறு வகையில் ஒரு நிலைப்படுத்துகின்ற பிரசாரத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற ஏதாவதொரு எழுத்து அல்லது வசனம் அல்லது உருவம் அடங்கிய பிரசார அறிவித்தல் அல்லது பதாகை அல்லது கடவுட் போன்ற எந்த வகையிலான அறிவித்தல், விளம்பரம் அல்லது வியாபார விளம்பரம் என்று கருதப்படும்.

**முதலாவது அட்டவணை**

**குருநாகல் மாநகர சபை**

**அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கு உரிமப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

குருநாகல் நகர ஆணையாளருக்கு,

1. விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் :----------------------------------.
   ---------------------------------------------------.
   தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :--------. தொலைபேசி இலக்கம் :--------.
2. விண்ணப்பதாரி வருகை தராதுவிடின் பிரதிநிதியின் பெயரும் முகவரியும் :-----------
   தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :--------. தொலைபேசி இலக்கம் :--------.
3. அறிவித்தல் சம்பந்தமான விபரம் :

| காட்சிப்படுத்தும் அளவு, இடம், (மொத்த) | நீளம் × அகலம் (அடி) | வர்க்க அடி அளவு | காட்சிப்படுத்தும் பக்கங்களின் எண்ணிக்கை | அறிவித்தல்களின் எண்ணிக்கை | வகை |
|---|---|---|---|---|---|
| i. | | | | | |
| ii. | | | | | |
| iii. | | | | | |
| iv. | | | | | |
| v. | | | | | |

4. காட்சிப்படுத்துவதற்கு இடப்படும் அறிவித்தல் விபரம் :--------.
   (அறிவித்தலின் பிரதி ஒன்றினை இணைத்து அனுப்புதல் வேண்டும்)

5. அறிவித்தல் காட்சிப்படுத்தும் காலம் ...................... தொடக்கம் ......................... வரை

குருநாகல் மாநகர சபையின் துணை விதிக்கு உடன்பட்டு அறிவித்தல் காட்சிப்படுத்துவதற்கும், உரிய திகதிக்கு அறிவித்தலினை அகற்றுவதற்கும் இதனுடன் தொடர்புடைய மாநகர சபையினால் வெளியிடப்படுகின்ற தீர்மானங்களையும் ஆலோசனைகளையும் பின்பற்றுவதற்கும், நான் இத்துடன் உடன்படுகின்றேன். அந்த நிபந்தனைகளை மீறினால் கட்டுப் பணம் நகர சபைக்கு உரித்தாகும் என்பது நான் அறிவேன்.

இன்னும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானதும், உண்மையானதும் என்று உறுதிப்படுத்துகின்றேன்.

ஏதாவதொரு வகையில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பிழையானது என்று தெரியவந்தால், என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எல்லா பதாகைகளையும் நகர சபைக்கு கையேற்பதற்கும், காட்சிப்படுத்திய பின் தெரியவந்தால், அவற்றை வெட்டி அப்புறப்படுத்தி, நகர சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கும் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

பிரதான நகர கணக்காளர்,

மேற்கூறப்பட்ட இடத்தினை சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை/திருத்தம் செய்து சிபாரிசு செய்கின்றேன்.

----,
நகர கணக்காளரின் கையொப்பம்.

ந.க./ஆர் 1

| காட்சிப்படுத்தும் அளவு, இடம், (மொத்த) | நீளம் × அகலம் (அடி) | வர்க்க அடி அளவு | காட்சிப்படுத்தும் பக்கங்களின் எண்ணிக்கை | அறிவித்தல்களின் எண்ணிக்கை | வகை |
|---|---|---|---|---|---|
| i. | | | | | |
| ii. | | | | | |
| iii. | | | | | |
| iv. | | | | | |
| v. | | | | | |

மொத்த பெறுமதி ரூபா --------.

ஒன்று சேர்க்கப்பட்ட வருமானத்தின் மீது வெட் வரி 12% ரூ. ............................

தேசத்தினை கட்டியெழுப்பும் வரி (N. B. T. 2%) ரூ. ............................

மொத்த தொகை ரூ. ............................

எதிர்பார்க்கப்பட்ட கட்டுப்பணம் ரூ. ............................

செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூ. ............................

------------,

அனுமதிக்கின்றேன்/அனுமதிக்கவில்லை

விடய எழுதுநர்,

-------------------,

நகர பிரதான கணக்காளர்/நகர

கணக்காளர் நகர ஆணையாளருக்காக

நகர பொறியியலாளர்,

உமது ........................ சிபாரிசின் படி கீழ்க் காணப்படும் விபரங்களடங்கிய அறிவித்தலை காட்சிப்படுத்துவதற்காக முத்திரை இடப்பட்டதுடன் அந்த அறிவித்தல்களின் காலம் முடிவடைந்த பின் காட்சிப்படுத்தினால் அந்த அறிவித்தல் நகர சபைக்கு உரித்தாக்கி அது பற்றி எம்மிடம் தயவுசெய்து அறிவிக்கவும்.

அறிவித்தல் நிருவகம் ................. இலக்கம் ................

| இடமும் திகதியும் | அறிவித்தல் எண்ணிக்கை | அறிவித்தல் அளவு | முதிர்வு காலம் |
|---|---|---|---|
| i. | | | |
| ii. | | | |
| iii. | | | |
| iv. | | | |
| v. | | | |

------------,

பிரதான நகர கணக்காளர்/நகர கணக்காளர்

பிரதான நகர கணக்காளர்

1. நிறுவனத்தின் பெயர் :-----.
2. அறிவித்தல் இலக்கம் :-----.

கீழ் காணப்படும் இடங்களில் அறிவித்தல்களை அகற்றாதவற்றை நகர சபைக்கு உரித்தாக்கப்பட்டது.

i. ..........................
ii. ..........................
iii. ..........................
iv. ..........................
v. ..........................

----,
நகர பொறியியலாளர்.

பிரதான வருமான பரிசோதகர்,

----- திகதி அனுமதிக்கப்பட்டு முத்திரை இடப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்ட அறிவித்தல்களின் காலம் முடிவடைந்த உடன் அவற்றை அகற்றப்படவில்லையாயின் என்னிடத்தில் தயவு செய்து அறிவிக்கவும்.

அறிவிக்கும் நிறுவகம் :------. இலக்கம் :------.

| இடமும் திகதியும் | அறிவித்தல் எண்ணிக்கை | அறிவித்தல் அளவு | முதிர்வு காலம் |
|---|---|---|---|
| i. | | | |
| ii. | | | |
| iii. | | | |
| iv. | | | |
| v. | | | |

------------,
பிரதான நகர கணக்காளர்/நகர கணக்காளர்.

1. நிறுவனத்தின் பெயர் :-----.
2. அறிவித்தல் இலக்கம் :-----.

கீழ்க் காணப்படும் இடங்களில் அறிவித்தல்களை உரியவாறு அகற்றப்படவில்லை.

i. ..........................
ii. ..........................
iii. ..........................
iv. ..........................
v. ..........................

----,
பிரதான வருமான பரிசோதகர்.

6-645/4

## குருநாகல் மாநகர சபை

குருநாகல் மாநகர சபை பிரதேசத்தினுள் தங்குமிடங்களை கொண்டு நடாத்தல், ஒழுங்கமைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய இடைநிலைச் சட்டம்

(252 ஆம் அத்தியாயமான) 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 267 ஆம் பிரிவில் முதலாவது உப பிரிவுடன்சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய உரிய கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் (22) ஆம் உப பிரிவில் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி குருநாகல் மாநகரசபையினால் அமைக்கப்பட்ட மற்றும் 2014.09.30 ஆந் திகதி நடந்த உரிய மாநகர சபையின் 4(1) ஆன பிரேரணையினால் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குருநாகல் மாநகர சபையின் குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் தங்குமிடங்களை கொண்டு நடாத்தல், ஒழுங்கமைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய இடைநிலைச் சட்டம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நிகழ்வு) கோட்பாட்டுச் சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய மேற்கூறப்பட்ட மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 268 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவுப் படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

சட்டத்தரணி ஜே. பி. தயாசிறி பத்மகுமார ஜயசேகர,
உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்,
வடமேல் மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
வடமேல் மாகாணம்,
குருநாகல்,
2015, யூன் 05.

### அட்டவணை

### குருநாகல் மாநகர சபை பிரதேசத்தினுள் தங்குமிடங்களை கொண்டு நடாத்தல், ஒழுங்கமைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகள்

1. இப்பகுதியின் துணை விதிகள் குருநாகல் மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் தங்குமிடங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும். துணைவிதியின் பெயர்.

2. குருநாகல் மாநகர பிரதேசத்தினுள் நடாத்தப்படுகின்ற தங்குமிடங்களை மக்கள் சுகாதார பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையிலும் சூழலுக்கு ஏற்ற வகையிலும் கொண்டு நடாத்தல் இந்த துணை விதியின் நோக்கமாகும். நோக்கம்.

3. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 (1) பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய 272(22) உப பிரிவின் கீழ் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இந்த துணை விதி அமைக்கப்பட்டுள்ளது. துணை விதியை அமைப்பதற்காக சட்டரீதியான ஏற்பாடுகள்.

4. உப பத்திரம் ஒன்றில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் முன் வைத்தலின் மூலம் உரிமப் பத்திரத்தினை பெற்றுக்கொள்ளல் உரிமப் பத்திரதாரியின் செயலும் பொறுப்புமாகும். செய்யவேண்டிய அலுவல்கள்.

5. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, நகர ஆணையாளரினால் எந்தவொரு ஹோட்டலுக்கும் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.

(1) இடம் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) இடத்தின் அனைத்து அறைகளின் சுவர்களும் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இரு பக்கங்களுக்கும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும் ; எனினும், சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப்பலகையினால் அல்லது ஏதேனும் உலோகத் தகடு வர்க்கத்தினால் அல்லது மரப்பலகையும் ஏதேனும் உலோக தகடு வர்க்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் இப்பிரமாணத்திற்கு அமைவானதெனக் கருதுதல் வேண்டும்.

(3) இடத்திலுள்ள அனைத்து அறைகளுக்கும் உட்கூரைகள் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய உட்கூரைகள் நிலத்திலிருந்து குறைந்தபட்சம் 2.5 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(4) அனைத்து அறைகளுக்கும் திறந்து வைக்கக்கூடிய யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு அறைகளினதும் யன்னல்களைத் திறக்கும்போது அத்தகைய யன்னல்களின் விஸ்தீரணம் அறையின் தரையின் பரப்பளவின் பதினைந்தில் ஒரு பங்குக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஆயினும் ஏதேனும் அறை எயர் கொண்டிஷன் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இப்பிரமாணம் ஏற்புடையதாகாது.

(5) கூரை ஏதேனும் நிலையான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) தாழ்வாரத்தின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 02 மீற்றர் உயரத்தில் இருப்பதுடன், தாழ்வாரம் ஆகக்குறைந்தது 1.5 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(7) அனைத்து அறைகளினதும் தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(8) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளைச் சேகரிப்பதற்காக கழிவுப் பாத்திரங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, சமையலறையினுள் வைக்கப்படும் கழிவுப் பாத்திரங்கள் இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள், விலங்குகள் உட்புகாதவாறு மூடிவைக்கக்கூடிய மூடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(9) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளை அப்புறப்படுத்தல் 15 ஆவது துணைவிதியின் பணிப்புகளுக்கமைய செயலாற்றும் விதத்தில் அவசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) இடத்தின் சமையலறையில் பாவிக்கப்படும் அனைத்து மேசைகளும்,-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(11) இடத்தில் வாடிக்கையாளரின் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து மேசைகளும்,-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(12) பாவனைக்கு எடுக்கின்ற நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் இத்தரச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரைப் பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(13) இடத்தின் கருமங்களுக்காக பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடைவதைத் தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(14) வாடிக்கையாளர்களால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவுவதற்கு தனிவேறான பகுதியொன்று இடத்தில் இருத்தல் வேண்டும்.

(15) வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் பாவனைக்காகக் குறைந்தது பத்துப் பேருக்கு ஒன்றென்ற வீதம் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(16) அனைத்து மலசலகூடங்களும் அவற்றின் சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் அல்லது ஏதேனும் துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் நிர்மாணிக்கப்பட்டு தரை சீமெந்தினால் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அதே போன்று மேலும் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்ட சுவராயின் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, துருப்பிடிக்காத உலோக தகடுகளால் நிர்மாணிக்கப்பட்ட சுவராயின் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(17) இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பாவனைக்காக குளியல் அறைகள் போதியளவு எண்ணிக்கையில் இருத்தல் வேண்டுமென்பதோடு, (16) வது பந்தியில் மலசலகூடங்களுக்கு ஏற்புடைய பணிப்புக்களை அத்தகைய குளியல் அறைகளின் தரைகளுக்கும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(18) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்கு துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது மாபிள் களியினால் நிர்மாணித்து மெருகூட்டப்பட்டோ அல்லது செங்கல்லினால் அல்லது சிமெந்துகல்லினால் கட்டப்பட்ட மாபிள் ஓடு பதிக்கப்பட்ட பேசின் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(19) இடத்தில் எந்தவொரு பகுதியிலும் பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் தடையின்றி பாய்ந்து செல்வதற்குப் பொருத்தமான வடிகான் முறைமையொன்று இருத்தல் வேண்டும்.

(20) மாநகர சபையினால் வடிகான் மேற்கொள்ளப்பட்டிருப்பின் இடத்தினுள் வெளியாகும் கழிவுநீர் மாநகர சபையின் பணிப்புக்கமைய அத்தகைய கழிவுநீர் முறைமையில் பாய்ந்து சேரும் ஏற்பாடுகளைச் செய்யமுடியுமென்பதோடு, அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் அத்தகைய கழிவுநீரை, உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்குகளுக்குப் பாய்ந்து செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(21) உள்ளே சாதாரண தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, பாதுகாப்பிற்கான வேலைத் திட்டம் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இடத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பின் மேலதிகமாக மின்சார தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(22) இடத்தில் தேநீர், கோப்பி அல்லது பால் தயாரிக்கும் பிரிவு இடைவெளியற்றதும் துருப்பிடிக்காததுமான உலோகத் தகடுகளினாலோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட அல்லது வேறு ஊடறுக்கமுடியாத பொருளால் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(23) இடத்தில் வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் நித்திரை செய்வதற்கு ஒதுக்கப்பட்ட படுக்கை அறைகளில் ஒருவர் நித்திரை செய்வதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் அளவு குறைந்த பட்சம் நான்கு மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டுமென்பதோடு, சகல படுக்கை அறைகளிலும் ஆடைகளை வைப்பதற்கு அலுமாரி அல்லது கெபிநெட், துவாய் இராக்கை, வாடிக்கையாளரின் அல்லது வாடிக்கையாளர்களின் பொருட்களை வைப்பதற்கு மேசை மற்றும் மலசலகூடத்துடன் அமைந்த குளியல் அறை இருத்தல் வேண்டும்.

6. இப்பிரிவின் துணை விதிகளுக்கமைய அனுமதிப்பத்திரத்தைக் கோரும் எவரேனும் ஆளொருவரால் இப்பிரிவின் அட்டவணையில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவமொன்றை நகர ஆணையாளரால் சமர்ப்பித்தல் வேண்டும்.

7. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென 10 மற்றும் 11 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

*8. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் குறைந்த பட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, கழிவு நீர் பாய்ந்தோடும் வடிகான்கள் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.*

*9. அனுமதிப்பபத்திரம் பெறப்பட்ட இடத்தில் இரவில் தங்கியிருப்பதற்கு வருகை தரும் ஒவ்வொரு ஆளினதும் பெயர், முகவரி மற்றும் அடையாளத்தை பதிவு செய்யும் பதிவேடொன்று அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்ற இடங்களிலும் பேணப்படல் வேண்டுமென்பதோடு, நகர ஆணையாளர், அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது எந்தவொரு பொலிஸ் அலுவலரினாலும் அத்தகைய பதிவேட்டினைப் பரிசீலனை செய்யக் கோரும் சந்தர்ப்பத்தில் அதற்கு இடமளித்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.*

*10. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அனைத்து படுக்கை அறையிலும் ஒரு வாடிக்கையாளர் பாவித்த பின்னர் இன்னொரு வாடிக்கையாளரின் பாவனைக்கு இடமளிக்கையில் முன்னர் அத்தகைய படுக்கை அறையில் படுக்கை விரிப்புகள், தலையணை உறை, போர்வைகள், துவாய் மற்றும் பாவிக்கப்பட்ட ஏனைய துணிகள் கழுவாமலன்றி பின்னர் வருகைதரும் வாடிக்கையாளருக்கு அத்தகைய அறையை பாவிப்பதற்கு முன்னர் யன்னல்கள் குறைந்த பட்சம் நான்கு மணித்தியாலங்கள் பூரணமாகத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வித்தல் வேண்டும்.*

*11. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் அனைத்து அறைகள், ஏறுபடிகள், முகப்புகள், வடிகான்கள் மற்றும் அத்தகைய இடத்திற்குச் சொந்தமான வளவுகள் தினந்தோறும் நண்பகலுக்கு முன்னர் கூட்டித் துப்புரவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.*

*12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள மலசலகூடங்களும் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினிகள் உபயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, துர்நாற்றம் வீசாது பார்த்துக்கொள்ளல் வேண்டும். ஆயினும் வாடிக்கையாளர் தங்கியிருக்கும் ஏதேனும் அறையின் மலசலகூடம் நாளொன்றுக்கு ஒரு தடவை சுத்தம் செய்தல் போதுமானதாகக் கருத முடியும்.*

*13. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பதற்கும், விற்பனைக்காகக் காட்சிக்கு வைப்பதற்கும் மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு உபயோகிக்கப்படும் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் அவற்றைப் பாவிப்பதற்கு முன்னர் சுத்தமான நீரினால் கழுவுதல் வேண்டுமென்பதோடு, பாவிக்கப்பட்ட பின்னரும் கழுவிச் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.*

*14. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அந்தந்த பகுதிகளில் சேரும் அனைத்து கழிவுகளும் 19 ஆவது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி ஊடறுக்கமுடியாத பொருளால் ஆக்கப்பட்ட பாத்திரங்களில் இடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவுகள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவை அல்லது அவசியமாயின் அதற்கு மேற்பட்ட தடவைகளிலும் அத்தகைய இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பாத்திரங்களில் கழிவுகளைப் போடும் சந்தர்ப்பமும் அவற்றை அப்புறப்படுத்தும் சந்தர்ப்பமும் தவிர்ந்த மற்றெல்லா நேரத்திலும் அத்தகைய பாத்திரங்கள் நன்றாக மூடிவைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*15. (அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள்*

(i) *உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;*
(ii) *கண்ணாடிப் பொருட்கள் ;*
(iii) *கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;*
(iv) *பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;*
(v) *இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;*
(vi) *உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின் போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;*
(vii) *ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்*

*என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களை இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.*

*(ஆ) (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், மாநகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி*

மாநகர ஆணையாளரின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேணடும்.

16. அனைத்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள் அணுகாத வண்ணமும், அத்தகைய இடத்தில் வைக்கப்படும் உணவுகள் அல்லது பானங்கள் தயாரிப்பதற்கு பாவிக்கப்படும் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் பானங்கள் அத்தகைய எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகளால் மாசடைவதைத் தடுப்பதற்கு அவசியமான சகல ஏற்பாடுகளையும் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

17. வாடிக்கையாளருக்கு உணவு வகைகளைக் கையினால் பரிமாறுதல் ஆகாதென்பதோடு, அத்தகைய உணவு பரிமாறுகையில் கரண்டி, முள்ளுக்கரண்டி அல்லது வேறு வகையான உபகரணத்தை உபயோகித்தல் வேண்டும்.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

18. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் மேலங்கிகள் வழங்கப்படுதலும், அத்தகைய ஊழியர் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் மேலங்கிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

19. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

20. நகர ஆணையாளரினால் உரிய செயலுக்காக வழங்கப்பட்ட செல்லுபடியாகும் உரிமப் பத்திரம் இருப்பின் மாத்திரம் எவர் ஒருவரினாலும் மாநகர பிரதேசத்தினுள் தங்குமிடங்களை கொண்டு நடாத்தலாகாது. செய்யலாகாத அலுவல்கள்.

21. உரிமப் பத்திரம் பெற்ற இடத்தில் நித்திரை செய்யும் அறைகளாக ஒதுக்கப்பட்டாலன்றி வேறு எந்த அறைகளையும் எவரொருவருக்கும் உறங்குவதற்கு இடமளிக்கலாகாது.

22. 5 ஆவது துணைவிதியில் (23) ஆம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த இடவசதியின் அளவிற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் உறங்கும் அறையில் உறங்குவதற்கு இடமளிக்கலாகாது.

23. ஏதேனுமொரு தங்குமிடத்தில் தனி அறையில் ஒருவருக்கு மேல் அல்லது இருவர் தங்கும் அறையில் இருவருக்கு மேல் அல்லது மூவர் தங்கும் அறையில் மூவருக்கு மேல் நித்திரை செய்வதற்கு அனுமதிப்பத்திரம் பெறுநர் இடமளித்தல் ஆகாது. எனினும் அத்தகைய ஏதேனும் அறையில் நித்திரை செய்யும் எவரேனும் ஆள் 12 வயதுக்குக் குறைவானவராயின் இத்துணைவிதியின் கருமங்களைப் பொறுத்தவரையில் அத்தகையவர் ஒரு ஆளாகக் கருதாதிருத்தல் வேண்டும்.

24. ஏதேனுமொரு தங்குமிடத்தில் இரவில் தங்கியிருக்கும் அனைவரும் தமது அடையாளத்தை அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு நிரூபித்தல் வேண்டுமென்பதோடு தங்குமிடத்தில் பேணப்படும் விருந்தினர் பதிவேட்டில் தமது தகவல்கள் உட்படுத்தும் பகுதியில் தமது பெயருடன் கையொப்பம் இடுதல் வேண்டும். அவ்வாறே தமது அடையாளத்தை உறுதிப்படுத்தாத அல்லது விருந்தினர் பதிவேட்டில் தமது அடையாளம் பற்றிய தகவல்களை உட்படுத்தும் பகுதியில் தமது பெயருடன் கையொப்பமிடாத எந்தவொரு ஆளுக்கும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் எந்தவொரு பகுதியிலும் இரவு நேரத்தில் தங்கியிருப்பதற்கு அனுமதிப்பத்திரம் பெறுநர் இடமளித்தல் ஆகாது.

25. ஏதேனும் தங்குமிடத்தில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட இடமளிக்காதிருத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டுமென்பதோடு, எவரேனும் ஆளொருவரால் தங்குமிடத்தில் வேறு தங்கியிருப்பவரின் அல்லது தங்குமிடத்திற்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு தொல்லையாக இருத்தல் பாட்டுக்களைப்பாடியோ அல்லது இசைத்தட்டுக்களை இசைத்தோ தேவையற்ற ஒலிகளை எழுப்புதல் ஆகாது.

26. அனைத்து அனுமதிப்பதிரம் பெறப்பட்ட இடத்திலுள்ள ஏதேனும் படுக்கை அறையில், உணவு சமைக்கும் இடத்தில் அல்லது உணவருந்துவதற்கு ஒதுக்கப்பட்ட ஏதேனும் பகுதியில் எந்தவொரு பிராணியையும் வைத்திருத்தல் ஆகாது.

27. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அப்புறப்படுத்தும் கழிவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தின் தரையிலோ அல்லது ஆங்காங்கோ இடுதல் ஆகாது.

28. ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள படுக்கை அறை உள்ளிட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும்,-

(அ) தனி அறையொன்றில் ஒரு கட்டிலுக்கு மேலாகவும்.

(ஆ) இருவர் தங்கும் அறையில் இரட்டைக் கட்டில் அல்லது தனிக் கட்டில்கள் இரண்டுக்கு அதிகமாகவும்.

(இ) மூவர் தங்கும் அறையில் இரட்டைக் கட்டிலுடன் தனி கட்டில் அல்லது இரட்டை கட்டில் ஒன்று அல்லது தனிக் கட்டில்கள் மூன்றுக்கு அதிகமாகவும்.

(ஈ) குடும்ப அறையில் இரட்டை கட்டில்கள் இரண்டு மற்றும் தனிக் கட்டில் ஒன்று அல்லது இரட்டை கட்டில்கள் இரண்டு மற்றும் தனிக் கட்டில் ஒன்று அல்லது இரட்டை கட்டில் ஒன்று மற்றும் தனிக் கட்டில் மூன்று அல்லது தனிக் கட்டில்கள் ஐந்துக்கு மேலாகவும்

போட்டிருத்தல் ஆகாது.

29. எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் தரக்குறைவு செய்யப்பட்ட எவ்வகையான பாலை வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகாது. இத்துணைவிதியின் கருமங்களுக்காக தரக் குறைவு செய்யப்பட்ட பால் என்பது நீர் அல்லது வேறு வெளிப் பொருள் அல்லது பொருட்கள் கலக்கப்பட்ட பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 85 வீதத்திற்குக் குறைவாக அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 35 வீதத்திற்கு குறைவான பசுப்பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 9 வீதத்திற்கோ அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 7 வீதத்திற்கு குறைவான எருமைப் பால் எனக் கருதப்படும்.

30. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

31. நகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலரால் ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனவு செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

உள்ளூராட்சி சபையின் செயற்பாடுகள்.

32. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் 4 வது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய விளங்குதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை மாநகர ஆணையாளரால் அந்த அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அறவிடலும் கட்டணமும்.

33. ஏதாவதொரு தங்குமிடத்தினை கொண்டு நடாத்துவதற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 247(அ) 2 உப பிரிவில் குறிப்பிடப்பட்ட வருடாந்த கட்டணம் அறவிடுவதற்கு சபைக்கு அதிகாரம் உண்டு.

அதிகாரத்தை வழங்கல்.

34. இந்த துணைவிதிகளுக்குரிய நடவடிக்கை கொண்டு நடாத்தல், மேற்பார்வை செய்தல், நிருவகித்தல் சம்பந்தமாக மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் அங்கு நகர முதல்வர் அல்லது நகர ஆணையாளரினால் சபையின் எந்தவொரு அலுவலருக்கு அளித்தல் சட்டமாகும்.

உரிமப்பத்திரத்தின் அல்லது அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம்.

35. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எவ்வருடததிற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாம் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

பரிசீலனை செயற்பாடும் அதிகார சபை.

36. இந்தப் பகுதியில் துணை விதிகளின் நிபந்தனைகளை பரிசீலிப்பதற்கு நகர ஆணையாளரிற்கு அல்லது அதிகாரம் உள்ள அலுவலர் ஒருவருக்கு பரிசீலிப்பதற்கு அதிகாரம் கிடைக்கும் உரிய காலம் என்பது இடத்தில் உற்பத்தி நடவடிக்கை செய்யப்படுகின்ற எந்தவொரு சந்தரப்பம் என்று கருதப்படும்

*37. 30 வது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்கப் பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் மாநகர ஆணையாளருக்கு இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.*

*38. 31 வது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப் பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை நகர சபை ஆணையாளரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.*

*39. நிபந்தனையின் கீழ் உரிமப் பத்திரம் பெற்ற இடத்தினை பரிசீலிப்பதற்கு நகர ஆணையாளருக்கு பரிசீலிப்பதற்காக உதவுதல் உரிமப் பத்திரதாரியின் செயலாதல் வேண்டும். அது போன்று ஏதாவதொரு பரிசீலனை செய்வதனை தடுப்பதற்கும் தடையாக இருத்தலாகாது.*

*40. ஏதாவதொரு முறைபாடு எழுத்து மூலம் அல்லது வாய்மொழி மூலம் மாநகர சபையின் நகர முதல்வர், நகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள அலுவலர் ஒருவருக்கு சமர்ப்பிக்க முடிந்ததுடன், அந்த அலுவலரினால் சட்டரீதியான பரிசீலனை ஒன்றினை நடாத்தி தீர்வு வழங்கப்படும்.* *முறைப்பாடும் அதற்கான தீர்வும்.*

*41. இந்த துணை விதிகளில் உள்ளடங்கிய சட்டதிட்டங்களில் ஒன்றை அல்லது சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் மீறுதல் குற்றமாகும்.* *துணை விதிகளை மீறல்.*

*42. இந்த துணை விதிகளில் உட்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு சட்டதிட்டங்களை மீறுதல் பற்றிய குற்றம் சம்பந்தமாக உரிய நீதிமன்ற அதகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் உரிய குற்றம் சம்பந்தமாக 252 ஆம் அதிகார மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும். அது போன்று உரிய ஏதாவதொரு குற்றம் சம்பந்தமாக உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் மேற்கூறப்பட்ட துணை விதியில் குறிப்பிடப்பட்ட வண்ணம் தண்டத்திற்குட்பட்ட எவர் ஒருவரினாலும் உரிய மீறலினை தொடர்ந்து செய்து கொண்டு மேற்கூறப்பட்ட 267 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக தண்டம் ஒன்றுக்கும் உட்படுதல் வேண்டும்.* *தண்டமும் தண்டனையும்.*

*43. வாக்கியம் சம்பந்தமாக அர்த்தம் தேவைப்படின், அது பற்றி இந்த பகுதியில் இடைநிலைச் சட்டங்களில்,-* *பொருள் கோடலும் வரைவிலக்கணமும்.*

*"நகர முதல்வர்" என்பது குருநாகல் மாநகர சபையின் நகர முதல்வர் அல்லது நகர முதல்வரின் அதிகாரம் செயற்பாடுகளை அளிக்கப்பட்டவர் என்று பொருள்படும்.*

*"பிரதி நகர முதல்வர்" என்பது, குருநாகல் மாநகர சபையின் பிரதி நகர முதல்வர் ஆவார்.*

*"மாநகர ஆணையாளர்" என்பது குருநாகல் மாநகர சபையின் ஆணையாளர் அல்லது உரிய ஆணையாளரின் அதிகார, செயற்பாடுகள் அளிக்கப்பட்டுள்ள ஒரு அலுவலர் என்று பொருள்படும்.*

*"மாநகர சபை" என்பது, குருநாகல் மாநகர சபை என்று பொருள்படும்.*

*"குடும்ப அறை" என்பது, ஒரு தடவையில் மூன்று பேர் தங்கக்கூடிய இடம் அத்துடன் இரட்டைக் கட்டில்கள் இரண்டும் தனி கட்டில் அல்லது இரட்டைக் கட்டில் ஒன்று மற்றும் தனி கட்டில் மூன்று அல்லது தனிக் கட்டில்கள் ஐந்தைக் கொண்ட அறை*

*"தனிக்கட்டில்" என்பது, குறைந்தபட்சம் நீளம் 200 சென்ரி மீற்றரும் அகலம் 95 சென்ரி மீற்றரும் மெத்தையையும் கொண்ட கட்டிலும்*

*"தனி அறை" என்பது ஒருவருக்கு மாத்திரம் தங்குவதற்கு போதிய இடவசதியும் ஒரு கட்டிலைக்கொண்ட அறையும்*

*"மூவர் தங்கும் அறை" என்பது, ஒரு தடவையில் மூவர் தங்குவதற்குப் போதிய இடவசதியும் இரட்டைக் கட்டில் மற்றும் தனிக்கட்டில் அல்லது தனிக் கட்டில் மூன்று அடங்கிய அறை,*

*"இரட்டை கட்டில்" என்பது, குறைந்தபட்சம் 200 சென்ரி மீற்றர் நீளமும் 125 சென்ரி மீற்றர் அகலமும் மெத்தையையும் கொண்ட கட்டில்,*

"இருவர் தங்கும் அறை" என்பது, ஒரு தடவையில் இருவர் தங்குவதற்குப் போதிய இடவசதியும் இரட்டைக் கட்டில் அல்லது தனிக் கட்டில்கள் இரண்டையும் கொண்ட அறை,

"ஹோட்டல்" என்பது, விற்பனைக்காக சோறு மற்றும் கறிகள் தயாரிக்கப்படும் அல்லது வைக்கப்படும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் இடம், உணவு வேளை ஒன்றுக்காக உணவுக்குகந்த வேறு ஏதேனும் சமைத்த உணவு வகை அல்லது ஏதேனும் சிற்றுண்டி வகை விற்பனைக்காக தயாரிக்கப்படுகின்ற அல்லது வைக்கப்படுகின்ற அல்லது காட்சிக்கு வைக்கப்படுகின்ற இடம் அல்லது அத்தகைய கருமங்களுடன் வாடிக்கையாளரைத் தங்கவைப்பதற்கு இடவசதி அளிக்கப்பட்ட இடம் எனக் கருதப்படும்.

"உரிமப் பத்திரதாரி" என்பது, இந்த துணைவிதிகளின் நிபந்தனையின் கீழ் உரிமப் பத்திரத்தினை பெற்றுக் கொண்டுள்ளவர் என்று பொருள்படுவதுடன், உரிய உரிமப் பத்தரத்தினை பெற்ற நிலையத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் உரிய காலத்தில் உரிய இடத்தில் அலுவல்களில் நிருவாக பொறுப்பாளராக இருக்கின்றனர்.

"உரிமப் பத்திரம் பெற்ற நிலையம்" என்பது, இங்கு எந்த ஒரு துணை விதியின் நிபந்தனையின் கீழ் வழங்கப்பட்ட ஏதாவதொரு இடத்தின் உபயோகத்திற்கு உரிய இடம்.

"அதிகாரமுடைய உத்தியோகத்தர்" என்பது, உரிய செயலுக்காக நகர முதல்வரினால் "எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட" குருநாகல் மாநகர சபையின் அலுவலர் என்று பொருள்படும்.

"பரிசீலிப்பதற்கு அதிகாரம் கிடைக்கும் உரிய காலம்" என்பது, உரிய இடத்தில் வியாபார நடவடிக்கை அல்லது உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்கின்ற எந்த நேரமும் என்று பொருள்படும்.

**அட்டவணை I**

**(4 ஆவது துணைவிதி)**

**தங்குமிடமொன்றை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

01. விண்ணப்பதாரரின் பெயர் :-----------.
முகவரி :-----------.
தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----------.

02. தங்குமிடத்தின் பெயர் :-----------.
முகவரி :-----------.
முகாமையாளரின்/பொறுப்பாளரின் பெயர் :-----------.
தொலைபேசி இலக்கம் :-----------.

03. அனுமதிப்பத்திரம் கோரப்படும் ஆண்டு :-----------.

04. தங்குமிடமொன்றில்,-
(i) தனி அறைகளின் எண்ணிக்கை :-----------.
(ii) இருவர் தங்கும் அறைகளின் எண்ணிக்கை :-----------.
(iii) மூவர் தங்கும் அறைகளின் எண்ணிக்கை :-----------.
(iv) குடும்ப அறைகளின் எண்ணிக்கை :-----------.
(v) ஒரே தடவையில் தங்கவைக்கக்கூடியவர்களின் முழு எண்ணிக்கை :-----------.

05. தங்குமிடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை (முகாமையாளர் உள்ளிட்ட) :-----------.

06. மலசலகூடங்கள்,-
(i) ஆண் ஊழியர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை :-----------.
(ii) பெண் ஊழியர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை :-----------.
(iii) ஆண் வாடிக்கையாளர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை :-----------.
(iv) பெண் வாடிக்கையாளர்களுக்கான மலசலகூடங்களின் எண்ணிக்கை :-----------.

07. குளியல் அறைகள்,-
(i) ஆண்களுக்கான குளியல் அறைகளின் எண்ணிக்கை :-----------.
(ii) பெண்களுக்கான குளியல் அறைகளின் எண்ணிக்கை :-----------.

08. சமயலறைகளின் எண்ணிக்கை :-----------.

09. நீர் வழங்கல் முறை :-----------.

10. திண்மக் கழிவுப் பொருட்களை இறுதியாக அப்புறப்படுத்துவதற்கான நடைமுறைகள் :-----------.

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். தங்குமிடங்களை ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணைவிதிகளின் பணிப்புரைகளை கடைப்பிடிப்பதற்கும் இணங்குகிறேன். அத்தகைய துணைவிதிகளுக்கமைய மேலே குறிப்பிடப்பட்டுள்ள தங்குமிடத்தை நடாத்துவதற்கு 20.......... ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

-------,
உரிமையாளர்/முகாமையாளர்/
பொறுப்பாளரின் கையொப்பம்.

திகதி :------.

6-645/5

---

**குருநாகல் மாநகர சபை**

குருநாகல் மாநகர அதிகாரப் பிரதேசத்தினுள் ஹோட்டல் நாடாத்திச் செல்வதினை ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை செய்தலும் நிருவகித்தலும் பற்றிய இடைநிலைச் சட்டம்

(252 ஆம் அத்தியாயமான) 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 267 ஆம் பிரிவில் முதலாவது உப பிரிவுடன்சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் (22) ஆம் உப பிரிவில் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி குருநாகல் மாநகர சபையினால் அமைக்கப்பட்ட மற்றும் 2014.09.30 ஆந் திகதி நடந்த உரிய மாநகர சபையின் 4(1) ஆன பிரேரணையினால் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குருநாகல் மாநகர சபையின் குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் ஹோட்டல் நாடாத்திச் செல்வதினை ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை செய்தலும் நிருவகித்தலும் பற்றிய இடைநிலைச் சட்டம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நிகழ்வு) கோட்பாட்டுச் சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய மேற்கூறப்பட்ட மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 268 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவுப் படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

சட்டத்தரணி ஜே. பி. தயாசிறி பத்மகுமார ஜயசேகர,
உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்,
வடமேல் மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
வடமேல் மாகாணம்,
குருநாகல்,
2015, யூன் 05.

**அட்டவணை**

**குருநாகல் மாநகர அதிகாரப் பிரதேசத்தினுள் ஹோட்டல் நாடாத்திச் செல்வதினை ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை செய்தலும் நிருவகித்தலும் பற்றிய துணைவிதி**

1. இப்பகுதியின் துணை விதிகள் மாநகர சபை நியாயாதிக்க பிரதேசத்தினுள் ஹோட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் பற்றிய துணை விதிகளென எடுத்துக்காட்டப்படும். துணைவிதியின் பெயர்.

நோக்கம்.

2. மாநகர கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் படி மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் மக்கள் சுகாதாரமும் உடல்நலத்தினை கொண்டு நடாத்தும் நோக்காக கொண்டு இந்த துணை விதி அமைக்கப்பட்டுள்ளது.

துணையினை விதி அமைப்பதற்காக சட்டரீதியான அதிகாரம்.

3. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 (1) பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 272 (22) உப பிரிவின் கீழ் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இந்த துணை விதி அமைக்கப்பட்டுள்ளது.

4. அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் சமரப்பிப்பதனால் வருடாந்த உரிமப் பத்திரத்தினை பெற்றுக்கொள்ளுதல் பத்திரதாரியின் அலுவலும் பொறுப்புமாகும்.

செய்யவேண்டிய அலுவல்கள்.

5. இந்த துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, நகர ஆணையாளரினால் எந்தவொரு ஹோட்டலுக்கும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படல் ஆகாது.-

(1) இடம் நன்றாகப் பழுதுபார்க்கப்பட்ட நிலையில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) இடத்தின் அனைத்து அறைகளின் சுவர்களும் 2.5 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இரு பக்கங்களுக்கும் சாந்து பூசப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தலும் வேண்டும் ; எனினும், சமையலறை தவிர்ந்த ஏனைய அறைகள் மரப்பலகையினால் அல்லது ஏதேனும் உலோகத் தகடு வர்க்கத்தினால் அல்லது மரப்பலகையும் ஏதேனும் உலோக தகடு வர்க்கத்தினால் நிர்மாணிக்கப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் இப்பிரமாணத்திற்கு அமைவானதெனக் கருதுதல் வேண்டும்.

(3) இடத்திலுள்ள அனைத்து அறைகளுக்கும் உட்கூரைகள் அமைந்திருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய உட்கூரைகள் நிலத்திலிருந்து குறைந்த பட்சம் 2.5 மீற்றர் உயரத்தில் இருத்தல் வேண்டும்.

(4) அனைத்து அறைகளுக்கும் திறந்து வைக்கக்கூடிய யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, ஒவ்வொரு அறைகளினதும் யன்னல்களைக் திறக்கும் போது அத்தகைய யன்னல்களின் பரப்பளவு அறையின் தரையின் பரப்பளவின் பதினைந்தில் ஒரு பங்குக்குக் குறையாதிருத்தல் வேண்டும். ஆயினும், ஏதேனும் அறை எயர் கொண்டிஷன் செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இப்பிரமாணம் ஏற்புடையதாகாது.

(5) கூரை ஏதேனும் நிலையான பொருட்களை உபயோகித்து வேயப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) தாழ்வாரத்தின் ஓரங்கள் நில மட்டத்திலிருந்து குறைந்த பட்சம் 02 மீற்றர் உயரத்தில் இருப்பதுடன், தாழ்வாரம் ஆகக்குறைந்தது 1.5 மீற்றராகவும் இருத்தல் வேண்டும்.

(7) அனைத்து அறைகளினதும் தரை சீமெந்திடப்பட்டு சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டோ இருத்தல் வேண்டும்.

(8) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளைச் சேகரிப்பதற்காக கழிவுப் பாத்திரங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, சமையலறையினுள் வைக்கப்படும் கழிவுப் பாத்திரங்கள் இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள், விலங்குகள் உட்புகாதவாறு மூடிவைக்கக்கூடிய மூடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(9) இடத்தினுள் பிறப்பிக்கப்படும் கழிவுகளை அப்புறப்படுதல் 17 வது துணைவிதியின் பணிப்புகளுக்கமைய செயலாற்றும் விதத்தில் அவசிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) இடத்தின் சமையலறையில் பாவிக்கப்படும் அனைத்து மேசைகளும்,-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(11) இடத்தில் வாடிக்கையாளரின் பாவனைக்கு வைக்கப்பட்டுள்ள அனைத்து மேசைகளும்,-

(அ) மரத்தினால் செய்யப்பட்டு அதன் கால்கள் மெருகூட்டப்பட்டு வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இரும்பு, உருக்கு அல்லது வேறு ஏதேனும் உலோகத்தினால் செய்யப்பட்டிருப்பின் அதன் கால்கள் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அவற்றின் மேற்பாகம் மெருகூட்டப்பட்டு ஊடறுக்க முடியாத பொருளால் அல்லது துருப்பிடிக்காததும் இடைவெளியற்றதுமான உலோகத் தகடுகளால் ஆக்கப்படுதல் வேண்டும்.

(12) பாவனைக்கு எடுக்கின்ற நீர் மனித நுகர்வுக்குப் பொருத்தமானதென தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட தரச் சான்றிதழ் பெறப்பட்டிருத்தல் மாத்திரமன்றி குறைந்த பட்சம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வீதம் இத்தரச் சான்றிதழ் பெறப்படல் வேண்டும். இடத்தின் பாவனைக்காக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற நீரைப் பயன்படுத்துவதாயின் அத்தகைய தரச் சான்றிதழ் கிடைத்துள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

(13) இடத்தின் கருமங்களுக்காக பாவிக்கப்படும் நீரைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பின் அவ்வாறு களஞ்சியப்படுத்தி வைக்கின்ற நீர் மாசடைவதைத் தடுக்கும் பொருட்டு போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(14) வாடிக்கையாளர்களால் பாவிக்கப்பட்ட பாத்திரங்களைக் கழுவுவதற்கு தனிவேறான பகுதியொன்று இடத்தில் இருத்தல் வேண்டும்.

(15) வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் பாவனைக்காகக் குறைந்தது பத்துப் பேருக்கு ஒன்றென்ற வீதம் மலசலகூடங்கள் இருத்தல் வேண்டுமென்பதோடு, பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனிவேறாக மலசலகூடங்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(16) அனைத்து மலசலகூடங்களும் அவற்றின் சுவர்கள் செங்கல், சீமெந்துக்கல் அல்லது கபூக் கல்லினால் அல்லது ஏதேனும் துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் நிர்மாணிக்கப்பட்டு தரை சீமெந்தினால் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அதே போன்று மேலும் செங்கல், சீமெந்துக்க ல் அல்லது கபூக் கல்லினால் கட்டப்பட்ட சுவராயின் சாந்து பூசப்பட்டோ, சீமெந்தினால் மெருகூட்டப்பட்டோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, துருப்பிடிக்காத உலோக தகடுகளால் நிர்மாணிக்கப்பட்ட சுவராயின் வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(17) இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பாவனைக்காக குளியல் அறைகள் போதியளவு எண்ணிக்கை இருத்தல் வேண்டுமென்பதோடு, (15) வது பந்தியில் மலசலகூடங்களுக்கு ஏற்புடைய பணிப்புக்களை அத்தகைய குளியல் அறைகளின் தரைகளுக்கும் சுவர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(18) இடத்தில் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில், வாடிக்கையாளர்களின் கைகளைக் கழுவுவதற்கு துருப்பிடிக்காத உலோகத் தகடுகளால் அல்லது மாபிள்களியினால் நிர்மாணித்து மெருகூட்டப்பட்டோ அல்லது செங்கல்லினால் அல்லது சீமெந்துகல்லினால் கட்டப்பட்ட மாபிள் ஓடு பதிக்கப்பட்ட பேசின் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(19) இடத்தில் எந்தவொரு பகுதியிலும் பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் தடையின்றி பாய்ந்து செல்வதற்குப் பொருத்தமான வடிகான் முறைமையொன்று இருத்தல் வேண்டும்.

(20) மாநகர சபையினால் கழிவுநீர் முறைமை மேற்கொள்ளப்பட்டிருப்பின் இடத்தினுள் வெளியாகும் கழிவுநீர் மாநகர சபையின் பணிப்புக்கமைய அத்தகைய கழிவுநீர் முறைமையில் பாய்ந்து சேரும் ஏற்பாடுகளைச் செய்யமுடியுமென்பதோடு, அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில் அத்தகைய கழிவு நீரை, உறிஞ்சியிழுக்கக்கூடிய கிடங்குகளுக்குப் பாய்ந்து செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருத்தல் வேண்டும்.

(21) உள்ளே சாதாரண தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, பாதுகாப்பிற்கான வேலைத் திட்டம் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இடத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பின் மேலதிகமாக மின்சார தீயணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(22) இடத்தில் தேநீர், கோப்பி அல்லது பால் தயாரிக்கும் பிரிவு இடைவெளியற்றதும் துருப்பிடிக்காததுமான உலோகத் தகடுகளினாலோ அல்லது மாபிள் ஓடுகள் பதிக்கப்பட்ட அல்லது வேறு ஊடறுக்கமுடியாத பொருளால் நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(23) இடத்தில் கொடுக்கல், வாங்கல் செய்வோருக்கும், பணியாளர்களுக்கும் உறங்குவதற்கு ஒதுக்கப்பட்ட உறங்கும் அறைகளில் ஒருவருக்கு நித்திரை செய்வதற்கு ஒதுக்கப்பட்ட இடவசதி குறைந்த பட்சம் நான்கு மீற்றருக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

6. வர்ணப்பூச்சு பூசப்பட்டிருத்தல் வேண்டுமென 4 வது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பாகங்களுக்கும் குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு தடவை வீதம் வர்ணப்பூச்சு பூசுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

7. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, கழிவு நீர் பாய்ந்தோடும் வடிகான்கள் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

8. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் இரவில் தங்கியிருப்பதற்கு வருகை தரும் ஒவ்வொரு ஆளினதும் பெயர், முகவரி மற்றும் அடையாளத்தை பதிவு செய்யும் பதிவேடொன்று அனுமதிப்பத்திரம் பெற்ற இடங்களிலும் பேணப்படல் வேண்டுமென்பதோடு, நகரஆணையாளரால், அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது எந்தவொரு பொலிஸ் அலுவலரினாலும் அத்தகைய பதிவேட்டினைப் பரிசீலனை செய்வதற்கு கோரும் சந்தர்ப்பத்தில் அத்தகைய பதிவேட்டினைப் பரிசீலிப்பதற்கு இடமளிப்பது அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

9. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அனைத்து படுக்கை அறையிலும் ஒரு வாடிக்கையாளர் பாவித்த பின்னர் இன்னொரு வாடிக்கையாளரின் பாவனைக்கு இடமளிக்கையில் முன்னர் அத்தகைய படுக்கை அறையில் படுக்கை விரிப்புகள், தலையணை உறை, போர்வைகள், துவாய் மற்றும் பாவிக்கப்பட்ட ஏனைய துணிகள் கழுவாமலன்றி அடுத்த வாடிக்கையாளருக்கு பாவிக்க இடமளித்தல் ஆகாதென்பதோடு, பின்னர் வருகைதரும் வாடிக்கையாளருக்கு அத்தகைய அறையை பாவிக்க இடமளிக்க முன்னர் ஜன்னல்களைக் குறைந்த பட்சம் நான்கு மணித்தியாலங்கள் பூரணமாகத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வித்தலும் வேண்டும்.

10. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தின் அனைத்து அறைகள், ஏறுபடிகள், முகப்புக்கூடம், வடிகான்கள் மற்றும் அத்தகைய இடத்திற்குச் சொந்தமான வளவுகள் தினந்தோறும் நண்பகலுக்கு முன்னர் பெருக்கி சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

11. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள மலசலகூடங்கள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு இரு தடவை வீதம் நீரினால் கழுவிச் சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினிகள் உபயோகிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, துர்நாற்றம் வீசாது பார்த்துக்கொள்ளலும் வேண்டும். ஆயினும் வாடிக்கையாளர் தங்கியிருக்கும் ஏதெனும் அறையின் மலசலகூடம் நாளொன்றுக்கு ஒரு தடவை சுத்தம் செய்யபடுதல் போதுமானதாகக் கருத முடியும்.

12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிப்பதற்கும், விற்பனைக்காகக் காட்சிக்கு வைப்பதற்கும் மற்றும் வாடிக்கையாளர்களின் பாவனைக்கு உபயோகிக்கப்படும் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் அவற்றைப் பாவிப்பதற்கு முன்னர் சுத்தமான நீரினால் கழுவுதல் வேண்டுமென்பதோடு, பாவிக்கப்பட்ட பின்னரும் கழுவிச் சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளை அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

13. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அந்தந்த பிரிவுகளில் சேரும் அனைத்து கழிவுகளும் 19 ஆவது துணைவிதியில் பணிக்கப்பட்டுள்ள விதத்தில் வகைப்படுத்தி ஊடறுக்கமுடியாத பொருளால் ஆக்கப்பட்ட பாத்திரங்களில் இடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கழிவுகள் குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஒரு தடவை அல்லது அவசியமாயின் அதற்கு மேற்பட்ட தடவைகளிலும் அத்தகைய இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய பாத்திரங்களில் கழிவுகளைப் போடும் சந்தர்ப்பமும் அவற்றை அப்புறப்படுத்தும் சந்தர்ப்பமும் தவிர்ந்த மற்றெல்லா நேரத்திலும் அத்தகைய பாத்திரங்கள் நன்றாக மூடிவைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

14. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அப்புறப்படுத்தும் கழிவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தின் தரையிலோ அல்லது அங்கும் இங்கும் இடுதல் ஆகாது.

(அ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பிறப்பிக்கப்படுகின்ற சகலவிதமான கழிவுப் பொருட்களும் மீண்டும் பாவனைக்கு எடுக்கப்படுமாயின் அன்றி, அக்கழிவுப் பொருட்கள்,-

(i) உயிர்ச் சிதைவுக் கழிவுப் பொருட்கள் ;
(ii) கண்ணாடிப் பொருட்கள் ;
(iii) கடதாசியும் கடதாசி சார்ந்த பொருட்களும் ;
(iv) பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த பொருட்கள் ;
(v) இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பொருட்கள் அல்லது இரும்பு மற்றும் ஏனைய உலோகப் பாகங்கள் ;
(vi) உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் ஏனைய மூலப் பொருட்களிலிருந்து எஞ்சும் பாகங்கள் அல்லது உற்பத்தியின்போது கிடைக்கின்ற துணை உற்பத்திப் பொருட்கள் அல்லது பாகங்கள் ;
(vii) ஊறுவிளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்

என்றவாறு வகைப்படுத்த முடியுமென்பதுடன், அத்தகைய ஒவ்வொரு வகையான கழிவுப் பொருட்களைச் இடுவதற்குள்ள தனித்தனியான பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் சேர்த்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

(ஆ) (அ) பிரிவில் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்ட பாத்திரங்களில் அல்லது தொட்டிகளில் போடப்பட்ட கழிவுப் பொருட்கள், மாநகர சபை கழிவுப் பொருட்கள் முகாமைத்துவ வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்துவதாயினன்றி மாநகர ஆணையாளரின் பணிப்பிற்கமைய இறுதியான அப்புறப்படுத்துகை இடம்பெறல் வேண்டும்.

15. அனைத்து அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகள் அணுகாத வண்ணமும், அத்தகைய இடத்தில் வைக்கப்படும் உணவுகள் அல்லது பானங்கள் தயாரிப்பதற்கு பாவிக்கப்படும் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் பானங்கள் அத்தகைய எலிகள், இலையான்கள் அல்லது வேறு பூச்சிகளால் மாசடைவதைத் தடுப்பதற்கு அவசியமான சகல ஏற்பாடுகளையும் செய்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

16. வாடிக்கையாளருக்கு உணவு வகைகளைக் வெறுங்கையினால் பரிமாறுதல் ஆகாதென்பதோடு, அத்தகைய உணவு பரிமாறுகையில் கரண்டி, முள்ளுக்கரண்டி அல்லது வேறு வகையான உபகரணத்தை உபயோகித்தல் வேண்டும்.

17. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் உணவு மற்றும் பானங்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபடும் சகல ஊழியருக்கும் மேலங்கிகள் வழங்கப்படுதலும், அத்தகைய ஊழியர் பணியில் ஈடுபட்டுள்ள எல்லாச் சந்தர்ப்பத்திலும் மேலங்கிகள் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளலும் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பொறுப்பாகும்.

18. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் சுத்தமான நீர், சுத்தமான துவாய், நகங்களைச் சுத்தப்படுத்தும் தூரிகைகள் மற்றும் சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவை வழக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

19. நகர ஆணையாளரினால் உரிய அலுவலுக்காக வழங்கப்பட்ட உரிமப் பத்திரம் இருப்பின் மாத்திரம் எந்தவொருவரினாலும் மாநகர சபை பிரதேசத்தினுள் ஹோட்டல் ஒன்றினை கொண்டு நடாத்தலாகாது. செய்யலாகாத அலுவல்கள்.

20. அனுமதிப்பபத்திரம் பெறப்பட்ட இடத்தில் படுக்கை அறைகளாக திட்டவட்டமாக ஒதுக்கப்பட்ட அறை தவிர்ந்த வேறு எந்தவோரு அறையிலும் எந்தவோர் ஆளுக்கும் நித்திரை செய்ய இடமளித்தல் ஆகாது.

21. 5 வது துணைவிதியின் (23) வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச இடத்தின் அளவுடன் பொருந்தாத எண்ணிக்கை கொண்ட ஆட்களை படுக்கை அறைகளில் நித்திரை செய்ய அனுமதிப்பத்திரம் பெறுநர் இடமளித்தல் ஆகாது.

22. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலுள்ள ஏதேனும் படுக்கை அறையில், உணவு சமைக்கும் இடத்தில் அல்லது உணவருந்துவதற்கு ஒதுக்கப்பட்ட ஏதேனும் பிரிவில் எந்தவொரு பிராணியையும் வைத்திருத்தல் ஆகாது.

23. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் அப்புறப்படுத்தும் கழிவுகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடத்தின் தரையிலோ அல்லது அங்கும் இங்கும் இடுதல் ஆகாது.

24. எந்தவொரு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்திலும் தரம் குறைக்கப்பட்ட எவ்வகையான பாலை வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகாது. இத்துணைவிதியின் கருமங்களுக்காக தரம் குறைக்கப்பட்ட பால் என்பது நீர் அல்லது வேறு வெளிப் பொருள் அல்லது பொருட்கள் கலக்கப்பட்ட பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 85 வீதத்திற்குக் குறைவாக அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 35 வீதத்திற்கு குறைவான பசுப்பால் அல்லது கொழுப்பற்ற பால் திண்மப் பொருள் நூற்றுக்கு 9 வீதத்திற்கோ அல்லது பாற் கொழுப்பு நூற்றுக்கு 7 வீதத்திற்கு குறைவான எருமைப் பால் எனக் கருதப்படும்.

25. (அ) ஏதேனும் நோய்த்தொற்று, தொடுகை அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அத்தகைய நோயினால் அண்மையில் பீடிக்கப்பட்டிருந்த எந்தவோர் ஆளும் அல்லது அத்தகைய நோயினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு அண்மையில் பணிவிடை செய்வதில் ஈடுபட்டிருந்த எவரேனும் ஆளும் அத்தகைய நோய்த்தொற்று அல்லது நோய்விருத்திக் காலம் நிறைவடைந்திருந்தாலேயொழிய எந்தவொரு பொதுச் சந்தையில் எவ்வகையான வியாபாரத்திலும் அல்லது அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒருவரின் உதவியாளராகவோ ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்தப்படல் அல்லது ஏதேனும் கருமத்தில் ஈடுபட இடமளித்தல் ஆகாது.

(ஆ) நன்றாகக் கழுவி சுத்தஞ் செய்யப்பட்ட உடைகளை அணிந்திருந்தாலன்றி எந்தவொரு ஆளினாலும் எந்தவொரு பொது சந்தையில் எவ்வகையிலும் பணியில் ஈடுபடுதல் அல்லது ஈடுபடுத்த இடமளித்தல் ஆகாது.

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களும் வருடத்திற்கு ஒரு தடவை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அனுமதிப்பத்திரம் பெறுநரின் பணியாதல் வேண்டும்.

26. நகர ஆணையாளர் அல்லது அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரால் ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிக்கப்படும் அல்லது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள ஏதேனும் மாதிரியொன்றை, அதற்கான விலை கொடுத்து பெற்றுக்கொள்ளல் சட்டரீதியானதாக அமையுமென்பதோடு, எந்தவோர் அனுமதிப்பத்திரம் பெறுநராலும் அத்தகைய கொள்வனவு செய்வதை நிராகரித்தல் அல்லது தடை செய்தல் ஆகாது.

*உள்ளூராட்சி சபையின் செயல்கள்.*

27. இந்தப் பகுதியில் துணை விதிகளின் நிபந்தனைகளைப் பரிசீலிப்பதற்கு நகர ஆணையாளருக்கு அல்லது அதிகாரம் உள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு பரிசீலிப்பதற்கு அதிகாரம் கிடைக்கும் உரிய காலம் என்பது இடத்தில் உற்பத்தி நடவடிக்கை செய்யப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பம் என்று கருதப்படும்.

28. இப்பிரிவின் துணை விதிகளின் கீழ் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடம் 4 ஆவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு பணிப்பிற்கும் அமைய விளங்குதல் முடிவுறுமாயின் அல்லது இப்பிரிவின் துணை விதிகளில் வேறு ஏதேனும் துணை விதியின் பணிப்புக்களுடன் முரண்பாடு எழும் சந்தர்ப்பத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அந்த இடத்தை அந்த பணிப்பிற்கு அமைவான நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான சகலவற்றையும் மேற்கொள்ளுமாறு அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு கட்டளையிடும் அறிவித்தலொன்றை நகர ஆணையாளரால் அந்த அனுமதிப்பத்திரம் பெறுநருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*அறவிடலும் கட்டணமும்.*

29. ஏதாவதொரு ஹோட்டல் ஒன்றினை கொண்டு நடாத்திச் செல்வதற்காக மாநகர சபைச் சட்டத்தின் 247 (அ) 2 உப பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த உரிமப் பத்திரக் கட்டணம் அறவிடுவதற்கு சபைக்கு அதிகாரம் உண்டு.

*அதிகாரத்தை வழங்கல்.*

30. இந்த துணை விதியின் நடவடிக்கைகளை கண்காணிப்பு மேற்பார்வை மற்றும் நிருவாகம் செய்தல் சம்பந்தமாக மாநகர சபையிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அங்கு நகர முதல்வர் அல்லது நகர ஆணையாளரினால் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் அளித்தல் சட்டரீதியானதாகும்.

*உரிமப் பத்திரத்தின் அல்லது அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம்.*

31. இப்பகுதியின் துணை விதிகளின் கீழ் விநியோகிக்கப்படும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் இப்பிரிவின் துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய முன்கூட்டியே இரத்துச் செய்யப்படாலன்றி, அது எவ்வருடத்திற்காக விநியோகிக்கப்பட்டதோ அவ்வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

32. இப்பிரிவின் துணை விதிகளின் பணிப்புக்களைப் பரிசீலனை செய்வதற்கு நகர ஆணையாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருக்கு பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான நேரமாக, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

33. 25 ஆவது துணை விதியில் குறிப்பிட்டவாறான அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு விடயங்களை எழுத்து மூலம் சமர்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தை நீடிப்பதற்கான தத்துவம் மாநகர ஆணையாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். எப்படியாயினும் அவ்வாறு நீடிக்கப்படும் காலம் பதின்நான்கு நாட்களை விஞ்சாததாக இருத்தல் வேண்டும்.

*பரிசீலனை செயற்பாடும் அதிகார சபை.*

34. ஏதாவதொரு முறைப்பாடு எழுத்துமூலம் அல்லது வாய்மொழி மூலம் மாநகர சபையின் நகர முதல்வர், நகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு சமர்ப்பிக்க முடிந்ததுடன், அந்த உத்தியோகத்தரினால் சட்டரீதியான பரிசீலனை ஒன்றினை நடாத்தி தீர்வு வழங்கப்படும்.

*துணை விதிகளை மீறல்.*

*முறைப்பாடும் அதற்கான தீர்வும்*

35. 34 ஆவது துணை விதியில் குறிப்பிட்டவாறு அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட எவரேனும் அனுமதிப்பத்திரம் பெறுநரால் அவ்வறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தினம் அல்லது நீடிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் அவ்வறிவித்தலில் பணிக்கப்பட்டுள்ளவாறு செயற்படுவதை தவறவிட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்விடத்திற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை நகர ஆணையாளரால் இரத்துச்செய்யப்படுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

36. இத்துணை விதிகளில் உட்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு சட்டதிட்டங்களை மீறுதல் பற்றிய குற்றம் சம்பந்தமாக உரிய நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் உரிய குற்றம் சம்பந்தமாக 252 ஆம் அதிகார மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும். அது போன்று உரிய ஏதாவதொரு குற்றம் சம்பந்தமாக உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் குற்றத்திற்கு குற்றவாளியாகிய பின் மேற்கூறப்பட்ட துணை விதியில் குறிப்பிடப்பட்ட வண்ணம் தண்டத்திற்குட்பட்ட எவர் ஒருவரினாலும்; உரிய மீறலினை தொடர்ந்து செய்து கொண்டு மேற்கூறப்பட்ட 267 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக தண்டத்தினை உட்படுதல் வேண்டும் தண்டமும் தண்டனையும்.

37. வாக்கியம் சம்பந்தமாக அர்த்தம் தேவைப்படின், அது பற்றி இந்த பகுதியில் இடைநிலைச் சட்டங்களில்,- பொருள்கோடலும் வரைவிலக்கணமும்.

"நகர முதல்வர்" என்பது குருநாகல் மாநகர சபையின் நகர முதல்வர் அல்லது நகர முதல்வரினால் அதிகாரம் அளிக்கப்பட்டவர் என்று பொருள்படும்.

"பிரதி நகர முதல்வர்" என்பது, குருநாகல் மாநகர சபையின் பிரதி நகர முதல்வர் ஆவார்.

"மாநகர ஆணையாளர்" என்பது குருநாகல் மாநகர சபையின் ஆணையாளர் அல்லது உரிய ஆணையாளரின் அதிகார, செயற்பாடுகளை அளிக்கப்பட்டுள்ள ஒரு அலுவலர் என்று பொருள்படும்.

"மாநகர சபை" என்பது, குருநாகல் மாநகர சபை என்று பொருள்படும்.

"ஹோட்டல்" என்பது, விற்பனைக்காக சோறு மற்றும் கறிகள் தயாரிக்கப்படும் அல்லது வைத்திருக்கும் அல்லது காட்சிக்கு வைக்கப்படும் இடம், உணவு வேளை ஒன்றுக்காக உண்பதற்குகந்த வேறு ஏதேனும் சமைத்த உணவு வகை அல்லது ஏதேனும் சிற்றுண்டி வகை விற்பனைக்காக தயாரிக்கப்படுகின்ற அல்லது வைக்கப்படுகின்ற அல்லது காட்சிக்கு வைக்கப்படுகின்ற இடம் அல்லது அத்தகைய கருமங்களுடன் வாடிக்கையாளரைத் தங்கவைக்கும் வசதிகளை வழங்கும் இடம் எனக் கருதப்படும்.

"உரிமப் பத்திரதாரி" என்பது, இந்த துணைவிதிகளின் நிபந்தனையின் கீழ் உரிமப் பத்திரத்தினை பெற்றுக் கொண்டுள்ளவர் என்று பொருள்படுவதுடன், உரிய உரிமப் பத்தரத்தினை பெற்ற நிலையத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் உரிய காலத்தில் உரிய இடத்தில் அலுவல்களில் நிருவாக பொருப்பாளராக இருக்கின்றனர்.

"உரிமப் பத்திரம் பெற்ற நிலையம்" என்பது, இங்கு எந்த ஒரு துணை விதியின் நிபந்தனையின் கீழ் வழங்கப்பட்ட ஏதாவதொரு இடத்தின் உபயோகத்திற்கு உரிய இடம்.

"அதிகாரமுடைய உத்தியோகத்தர்" என்பது, உரிய செயலுக்காக நகர முதல்வரினால் "எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட" குருநாகல் மாநகர சபையின் அலுவலர் என்று பொருள்படும்.

"பரிசீலிப்பதற்கு அதிகாரம் கிடைக்கும் உரிய காலம்" என்பது, உரிய இடத்தில் வியாபார நடவடிக்கை அல்லது உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்கின்ற எந்த நேரமும் என்று பொருள்படும்.

**குருநாகல் மாநகர சபை**

**வியாபார உரிமப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் - 20....... ஆண்டு**

1. கைத்தொழில்/வியாபாரம் உரித்துடையவரின் பெயர் :-----------.
2. சொந்த முகவரி :-----------.
3. தேசிய ஆளடையாள அட்டை :- [ | | | | | | | | | | ]
4. தொலைபேசி இலக்கம் :- கையடக்கம் :-----------. வீடு :-----------.
5. கைத்தொழில்/வியாபாரத்தின் பெயர் :-----------.
6. கைத்தொழில்/வியாபாரத்தின் தன்மை :-----------.

கைத்தொழில்/வியாபாரம் செய்யும் இடம்:-

(அ) முகவரி :---------.

(ஆ) வீதியின்/பாதையின் பெயர் :-----------.

(இ) வரிபண இலக்கம் :-----------.
(ஈ) தொலைபேசி இலக்கம் :-----------.

7. கைத்தொழில்/வியாபாரத்தினை கொண்டு நடாத்துகின்ற நிலையம் உரித்துடைய கிராம அலுவலர் பிரிவின் இலக்கம் :--------.
பிரிவின் பெயர் :-----------.

8. வியாபார பெயர் பதிவினை பெற்றிருப்பின் அதன் இலக்கம் :-----------.

9. கைத்தொழில்/வியாபாரத்தினை கொண்டு நடாத்திச் செல்கின்ற முகாமையாளரின்/பிரதிநிதியின் பெயர் :-----------.

10. தேசிய ஆளடையாளட்டை :- | | | | | | | | | | |

11. தொலைபேசி இலக்கம் :- கையடக்க ---------- வீடு ------------

நகர ஆணையாளர்,
குருநாகல்.

மேற்கூறப்பட்ட தகவல்கள் அடங்கிய கைத்தொழில்/வியாபாரத்தினை கொண்டு நடாத்துகின்ற நிலையத்திற்காக 20.... வருடத்திற்காக கைத்தொழில்/வியாபார உரிமப் பத்திரத்தினை எனக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இது பற்றி காணப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

---

**அலுவலக உபயோகத்திற்காக**

வருமான பரிசோதகர்,

பின்பக்கத்தில் குறிப்பிட்ட விண்ணப்பப் பத்திரத்திற்கு உரிய வியாபார உரிமப் பத்திரம் வழங்குவதற்காக உங்களது கண்காணிப்பும் சிபாரிசும் உடனடியாக என்னிடத்தில் பெற்று தருமாறு தயவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

----,
நகர கணக்காளர்.

திகதி :----.

---

நகர கணக்காளர்,

உரிமப்பத்திரத்தினை பெற்றுக்கொடுக்க சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

----,
வருமான பரிசோதகர்.

திகதி :----.

---

பிரதான சுகாதார வைத்திய உத்தியோகத்தர்/நகர பொறியியலாளர்

பின்பக்கத்தில் குறிப்பிட்ட விண்ணப்பப் பத்திரத்திற்கு உரிய வியாபார உரிமப் பத்திரம் வழங்குவதற்காக உங்களது கண்காணிப்பும் சிபாரிசும் உடனடியாக என்னிடத்தில் பெற்று தருமாறு தயவாய் கேட்டுக் கொள்கின்றேன்.

----,
நகர கணக்காளர்.

திகதி :----.

பிரதான சுகாதார வைத்திய உத்தியோகத்தர்

துணை விதியும் மற்றைய சட்டதிட்டங்களுக்கு அமைய தகைமைகளை அடைந்துள்ளார். உரிமப் பத்திரம் வழங்குவதற்கு சிபாரிசு செய்வதற்காக அறிவிக்கின்றேன்.

----,
மக்கள் சுகாதார பரிசோதகர்.

திகதி :----.

---

நகர பொறியியலாளர்,

உபயோகத்தினை வேறுபடுத்தப்பட்டுள்ளது/இல்லை. இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது/இல்லை. உரிமப் பத்திரம் வழங்குவதற்கு சிபாரிசு ெய்கின்றேன்/இல்லை.

----,
தொழில்நுட்ப உத்தியோகத்தர்.

திகதி :----.

---

நகர கணக்காளர்,

மேற்கூறப்பட்ட விண்ணப்பப்படிவத்திற்கமைய உரிய இடத்திற்காக உரிமப் பத்திரம் வழங்குவதனை சிபாரிசு செய்கின்றேன். சிபாரிசு செய்யவில்லை. (சிபாரிசு செய்யாதுவிடின் அதற்குரிய காரணத்தினை குறிப்பிடவும்)

----,
பிரதான சுகாதார வைத்திய
அலுவலர்/நகர பொறியியலாளர்.
(இறப்பர் முத்திரையினை இடவும்)

திகதி :----.

---

வியாபார உரிமப்பத்திர விடய பொறுப்பு உத்தியோகத்தர்

1. கைத்தொழில்/வியாபாரத்தினை கொண்டு நடாத்துகின்ற இடத்தின் வருடத்தின் பெறுமதி ரூபா ................. ஆகும்.

2. கைத்தொழில்/வியாபாரத்தினை கொண்டு நடாத்துகின்ற இடத்திற்காக மீதி வரிபணம் அறவிட்டு அறவிடப்பட்டுள்ளது/இல்லை.

3. கைத்தொழில்/வியாபாரத்தினை நடாத்தும் இடத்தின்,
   (அ) வீதியின்/பாதையின் பெயர் :----.
   (ஆ) வரிபண இலக்கம் :----.

----,
வரிபண விடய பொறுப்புடைய அலுவலர்.

திகதி :----.

நகர கணக்காளர்,

1. அறவிடப்பட வேண்டிய உரிமப் பத்திர கட்டணம் ரூபா ................. ஆகும்.
2. உரிமப் பத்திரம் வழங்குவதற்கு அனுமதிக்காக சிபாரிசு செய்கின்றேன்.

----,
வியாபார உரிமப்பத்திர விடய
பொறுப்புடைய அலுவலர்.

திகதி :----.

நகர ஆணையாளர்,

விண்ணப்பப் படிவம் பற்றி மேற்கூறப்பட்ட சிபாரிசுடன் இணங்குகின்றேன். உரிமப் பத்திரம் வழங்குவதற்கு அனுமதிக்காக சிபாரிசு செய்கின்றேன்.

----,
நகர கணக்காளர்.
(இறப்பர் முத்திரையினை இடவும்)

திகதி :----.

---

நகர கணக்காளர்,

அனுமதிக்கின்றேன்.

----,
நகர ஆணையாளர்.
(இறப்பர் முத்திரையினை இடவும்)

திகதி :----.

---

நகர கணக்காளர்,

அறவிடப்பட்ட உரிமப்பத்திரக் கட்டணம் ரூபா............
பற்றுச்சீட்டு இலக்கம் :----------. திகதி :---------.
ஒழுங்கமைக்கப்பட்ட உரிமப் பத்திரத்தின் இலக்கம் :---------. திகதி :---------.

உரிமப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிறுவனத்தினை பதிவுப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது/கணனிப்படுத்தப்பட்டுள்ளது.

உரிமப் பத்திரத்தினை நகர ஆணையாளரின் கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

----,
வியாபார உரிமப்பத்திர விடய
பொறுப்புடைய அலுவலர்.

திகதி :----.

நகர ஆணையாளர்,

இந்த உரிமப் பத்திரத்தில் விதிக்கப்பட்டுள்ள வியாபார உரிமப் பத்திரக் கட்டணம் அறவிடும் வர்த்தமானிக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது.

உரிமப்பத்திரத்தினை கையொப்பத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.

----,
நகர கணக்காளர்.

திகதி :----.

---

நகர கணக்காளர்,

உரிமப்பத்திரம் கையொப்பமிடப்பட்டது.

----,
நகர ஆணையாளர்/நகர ஆணையாளருக்காக.
(இறப்பர் முத்திரையினை இடவும்)

திகதி :----.

* உரியதல்லாதவற்றை வெட்டிவிடவும்.

*6-645/6*

**குருநாகல் மாநகர சபை**

**குருநாகல் மாநகர சபைக்கு உரிய வீதிகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தலை தடுத்தல் ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தலும் கொண்டு நடாத்தல் பற்றிய இடைநிலைச் சட்டம்**

*252 ஆம் அத்தியாயமான 1947 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 267 ஆம் பிரிவில் முதலாவது உப பிரிவுடன்சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய உரிய கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் (06) ஆம் உப பிரிவில் (எ) பந்தியில் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி குருநாகல் மாநகர சபையினால் அமைக்கப்பட்ட மற்றும் 2014.09.30 ஆந் திகதி நடந்த உரிய மாநகர சபையின் 4(1) ஆன பிரேரணையினால் சபை ஏற்றுக்கொள்ளப்பட்ட இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குருநாகல் மாநகர சபையின் குருநாகல் மாநகர சபை அதிகாரப் பிரிவினுள் வீதிகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தலை தடுத்தல் ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தலும் கொண்டு நடாத்தல் பற்றிய இடைநிலைச் சட்டம் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நிகழ்வு) கோட்பாட்டுச் சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் வாசிக்கப்படவேண்டிய மேற்கூறப்பட்ட மாநகர சபை கட்டளைச்சட்டத்தின் 268 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவுப் படி வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

*சட்டத்தரணி ஜே. பி. தயாசிறி பத்மகுமார ஜயசேகர,*
*உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்,*
*வடமேல் மாகாண மாகாண சபை.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*வடமேல் மாகாணம்,*
*குருநாகல்,*
*2015, யுன் 05.*

**அட்டவணை**

**குருநாகல் மாநகர சபைக்கு உரிய வீதிகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் போக்குவரத்துக்கு தடை ஏற்படுத்தலை தடுத்தல் ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தலும் கொண்டு நடாத்தல் பற்றிய துணைவிதி**

*துணை விதியின் பெயர்.*

1. துணை விதி மாநகர சபைக்கு உரித்துடைய வீதிகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் போக்குவரத்து தடை ஏற்படுத்தலை தடுத்தல் பற்றிய துணை விதி என்று அறிமுகப்படுத்தப்படும்.

*நோக்கம்.*

2. குருநாகல் மாநகர சபைக்கு உரித்துடைய வீதிகளுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் போக்குவரத்து தடை ஏற்படுத்தலை தடுத்தலுக்காக முறையான செயற்பாட்டினை கொண்டு நடாத்தலும் நிருவகித்தலும்.

*துணையினை விதி அமைப்பதற்காக சட்டரீதியான*

3. மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 267 (1) பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 272 (6) (இ) உப பிரிவின் கீழ் மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இந்த துணை விதி அமைக்கப்பட்டுள்ளது.

*செய்யவேண்டிய அலுவல்கள்.*

4. ஏதாவது பாதைகளூடாக உள்ள கான்வாயில்களை தரைப்படுத்துதல் அல்லது அதற்கு இடையூறு விளைவித்தல் அல்லது உரிய கான்வாயில் ஊடாக ஓடிச் செல்கின்ற நீரை வசதியாக வடிந்தோடுவதற்கு தடை செய்தல் எவர் ஒருவரினாலும் செய்யலாகாது, அதுமட்டுமன்றி உரிய கான்வாயினூடாக ஏதாவதொரு காணிக்கு உட்பிரவேசிக்க வேண்டுமாயின் நீளத்தில் ஒரு மீற்றருக்கு குறையாத பாலம், நடைபாதை, ஒன்றினை அமைத்தல் காணி உரித்தாளரின் அல்லது குடியிருப்பாளரின் செயலாகும்.

*செய்யலாகாதவை.*

5. எவரேனும் ஆளொருவரால் மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதிக்கு சேதம் விளைவித்தல் ஆகாதென்பதோடு, வீதியில் பயணம் செய்யும் வாகனங்களுக்கோ அல்லது பாதசாரிகளுக்கோ தடையேற்படுத்தும் வகையில் வீதியில்.-

(அ) வியாபாரம் செய்தல்.

(ஆ) அகற்றிச் செல்வதற்காக இயங்க செய்விக்க அல்லது வேறு அனர்த்தம் காரணமாக டிப்பால் ஓட்டிச் செல்லமுடியாத ஏதேனும் காரணம் இருந்தாலேயன்றி, பாகம் XXVI ஆவது துணைவிதிகளின் கீழ் மாநகர சபையினால் வாகனத்தை நிறுத்துவதற்கு இடமளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பகுதி அல்லாத இடத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்தல்.

(இ) வாகனங்களைப் பழுதுபார்த்தல் அல்லது வாகனங்களைக் கழுவுதல்.

(ஈ) ஏதேனும் வீதியில் இடம்பெறும் பழுதுபார்த்தலுக்காக மாநகர சபையின் அல்லது நகர ஆணையாளர் தீர்மானத்தின் மீது இடம்பெறும் கருமம் தவிர, கல், மணல், கூழாங்கல், மண், செங்கல் அல்லது மரக்குற்றி போன்றவற்றை இறக்குதல் அல்லது சேர்த்து வைத்தல்.

(உ) ஒதுக்கப்பட்ட வாகனங்களின் உதிரிப்பாகங்களைக் குவித்து வைத்தல்

ஆகாது.

6. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் 19 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஐம்பது அடிகளுக்கு மேல் (மீற்றர் 16.7) அகலமுடைய வீதிகளில் வீதிக் கோடுகள் இடப்பட்டிராத ஏதேனும் வீதியின் நடுக்கொட்டில் இருந்து 25 அடிகளுக்குள் (மீற்றர் 3.18) எந்தவோர் விதத்திலுமான நிர்மாணத்தை எந்தவோர் ஆளினாலும் அமைத்தல் ஆகாதென்பதோடு, வேறு ஏதேனும் நிர்மாணத்திற்காக கொண்டுவரப்பட்ட எந்தவொரு நிர்மாணப் பொருளையும் ஏதேனும் வீதியில் அல்லது அதன் ஏதேனும் பகுதியில் வைத்திருத்தல் ஆகாது.

7. 11 ஆவது துணைவிதியின் கீழ் நகர ஆணையாளரினால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கட்டளைக்கு முரணாக செயற்படுதல் அல்லது அத்தகைய ஏதேனும் கட்டளைக்கமைய செயற்படும் எவரேனும் ஆளுக்கு தடை ஏற்படுத்தல் அல்லது அவ்வாறு செய்ய இடமளித்தல் எந்தவோர் ஆளினாலும் மேற்கொள்ளப்படல் ஆகாது.

8. நகர ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்ட எழுத்திலான அனுமதி இருந்தாலன்றி எவரேனும் ஆளினால் நகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதியில் வைக்கப்பட்டுள்ள கல், கூழாங்கல், மணல், மண் அல்லது வேறு ஏதேனும் பொருளை சேகரித்தல் அல்லது குவித்து வைத்தல் அல்லது அகற்றுதல் போன்றவற்றைப் புரியலாகாது.

9. ஏதேனும் காணிக்கு அல்லது காணியில் அமைந்துள்ள கட்டிடத்தின் கூரையில் விழும் மழை நீர் தவிர்ந்த வேறு ஏதேனும் விதத்தில் அத்தகைய இடத்தில் அல்லது இடத்தில் அமைந்துள்ள கட்டிடத்திலுள்ள நீரை அல்லது பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவு நீர் போன்றவற்றை, உறிஞ்சியிழுக்கும் கிடங்கிற்கு பாய்ந்து செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பதோடு, மாநகர சபைக்குச் சொந்தமான வீதிக்கு அல்லது வீதியிலுள்ள வடிகானுக்கு அப்புறப்படுத்தல் ஆகாது.

10. போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொருட்கள் அல்லது தூசி அல்லது மணல் அல்லது சிறிய துண்களாக பரவிச் செல்வதைத் தடுக்கின்ற மூடியொன்றினால் மூடப்பட்டிருந்தாலேயொழிய, எவரேனும் ஆளினால் அவ்வாறான ஏதேனும் பொருட்களை மாநகர சபைக்குச் சொந்தமான வீதியில் ஏதேனும் வாகனத்தில் போக்குவரத்துக்காக எடுத்துச் செல்லல் ஆகாது.

உள்ளூராட்சி சபையின் பணிகள்.

11. மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதியை பராமரித்தல் அல்லது பழுதுபார்ப்பதற்கு அவசியமாகின்ற கருமத்திற்காக,-

(அ) அத்தகைய வீதியை முற்றாக அல்லது வீதியின் ஒரு பகுதியை அல்லது வீதியின் ஏதேனும் திசையை நோக்கிச் செல்லும் ஏதேனும் ஓட்டப்பாதை நிரலை ஏதேனும் காலத்திற்கு வாகனப் போக்குவரத்திற்கு மூடி வைப்பதற்கும்.

(ஆ) ஏதேனுமொரு நிர்மாணப் பொருளை அல்லது நிர்மாணப் பொருட்களை அத்தகைய வீதியின் பாகத்தில் குவித்து வைப்பதற்கும்.

(இ) அத்தகைய வீதியின் அருகாமையிலுள்ள காணிக்குள் உட்பிரவேசிப்பதற்கும் நிர்மாணப் பொருட்கள் எதையும் அத்தகைய காணியில் வைத்திருக்கவும்.

(ஈ) அத்தகைய வீதியின் அருகாமையிலுள்ள காணியின் ஏதேனும் ஆதனத்திற்கு சேதம் விளைவிக்காத விதத்தில் அத்தகைய காணியில் வாகனங்கள் ஓட்ட இடமளிப்பதற்கும்.

கட்டளையிடுவதற்கு நகர ஆணையாளருக்கு அதிகாரமிருத்தல் வேண்டும்.

அதிகாரத்தை அளித்தல்.

12. இந்த துணை விதியின் நடவடிக்கைகளை கண்காணிப்பு மேற்பார்வை மற்றும் நிருவாகம் செய்தல் சம்பந்தமாக மாநகர சபையிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அங்கு நகர முதல்வர் அல்லது நகர ஆணையாளரினால் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் அளித்தல் சட்டரீதியானதாகும்.

பரிசீலனை செயற்பாடும் அதிகார சபை.

13. நிபந்தனையின் கீழ் உரிமப் பத்திரம் பெற்ற இடத்தினை பரிசீலிப்பதற்கு நகர ஆணையாளருக்கு அதற்காக உதவி புரிவது உரிமப் பத்திரதாரியின் செயற்பாடாகும். அது போன்ற அவ்வாறான பரிசீலனை நிறுத்துவதற்கு எவ்வித தடையும் செய்யலாகாது.

*14.* ஏதாவதொரு முறைப்பாடு எழுத்து மூலம் அல்லது வாய்மொழி மூலம் மாநகர சபையின் நகர முதல்வர், நகர ஆணையாளர் அல்லது அதிகாரமுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு சமர்ப்பிக்க முடிந்ததுடன், அந்த உத்தியோகத்தரினால் சட்டரீதியான பரிசீலனை ஒன்றினை நடாத்தி தீர்வு வழங்கப்படும் முறைப்பாடும் அதற்கான தீர்வும்.

*15.* 6 ஆவது துணைவிதியில் குறிப்பிட்ட பணிகளை மீறியதாக எந்தவோர் ஆளினாலும் மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி அல்லது அதன் ஏதேனும் பகுதியில் ஏதேனும் நிர்மாணப் பொருளொன்றை வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் அத்தகை நிர்மாணப் பொருட்களை அத்தகைய இடத்திலிருந்து அகற்றுவதற்கோ அல்லது மாநகர சபைக்கு உரித்தாக்குவதற்கோ நடவடிக்கை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும். நகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் மேலே குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுப்பதன் மூலம் அத்தகைய நிர்மாணப் பொருட்கள் வீதியில் வைக்கப்பட்ட அல்லது வைப்பதற்கு ஏற்பாடு செய்த ஆளுக்கு ஏற்படும் ஏதேனும் இழப்பு, நட்டம் அல்லது சேதம் சம்பந்தமாக அத்தகைய பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட ஆள் அல்லது மாநகர சபை வகைப் பொறுப்புக் கூற கட்டுப்படல் ஆகாது. அவ்வாறே தொடர்ந்தும் அப்படியாக அகற்றப்பட்ட பொருட்களுக்காக எந்தவொரு அளவிலான நட்டஈடு செலுத்துவதற்கு மாநகர சபை அல்லது நகர ஆணையாளர் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் கடப்பாடு உடையவர்களாதல் ஆகாது. துணை விதிகளை மீறல்.

*16.* இந்த துணைவிதியில் உட்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்டங்களில் ஒன்றை அல்லது சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் மீறுதல் குற்றமாகும். தண்டமும் தண்டனையும்.

*17.* பதங்கள் சம்பந்தமாக வேறு பொருள்கோடல் அவசியப்பட்டாலேயொழிய இப்பகுதிக்கான துணைவிதிகளில்,- பொருள்கோடலும் வரைவிலக்கணமும்.

"நகர முதல்வர்" என்பது குருநாகல் மாநகர சபையின் நகர முதல்வர் அல்லது நகர முதல்வரின் அதிகாரத்தை மற்றும் செயற்பாடுகளை அளிக்கப்பட்ட ஒருவர் என்று பொருள்படும்.

"பிரதி நகர முதல்வர்" என்பது, குருநாகல் மாநகர சபையின் பிரதி நகர முதல்வர் என்பதாகும்.

"மாநகர ஆணையாளர்" என்பது குருநாகல் மாநகர சபையின் ஆணையாளர் அல்லது உரிய ஆணையாளரின் அதிகாரத்தை மற்றும் செயற்பாடுகளை அளிக்கப்பட்ட ஒருவர் என்று கருதப்படும்.

"மாநகர சபை" என்பது, குருநாகல் மாநகர சபை என்று கருதப்படும்.

'வீதி'' என்பது, மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி, வழி, பெருந்தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, கடவை அல்லது பயணிகள் பாலம் எனக் கருதப்படுவதோடு, மாநகர சபைக்குச் சொந்தமான ஏதேனும் வீதி, வழி, பெருந்தெரு, ஒழுங்கை, தெரு, ஒற்றையடிப்பாதை, படிக்கட்டு, கடவை, அல்லது பயணிகள் பாலத்திற்கு இணைத்துப் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிறுவப்பட்டுள்ள ஏதேனும் தூரத்தை காட்டும் குறியீடு, எல்லைக் கல், எல்லைத் தூண், மின்சாரக் கம்பம், பாலம், ஏதேனும் வகையிலான மதகு, நீர்க்கடவை, மதில், வில்வளைவமைப்பு, அணைக்கட்டு, வடிகான், சுளுசு, துணைமதில், கைப்பிடி, சங்கிலி, வேலி, சமிக்ஞைப் பலகை, வீதிப் பெயர்ப் பலகை அல்லது வீதி அருகிலுள்ள நடைபாதை மேடை என்பன அதனை உள்ளடக்க வேண்டும்.

"வாகனம்" என்பது, மோட்டார் வாகனங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் வாகனத்திற்காக வழங்கப்பட்ட பொருள்கோடல் கருதப்படல் வேண்டுமென்பதோடு வண்டி, துவிச்சக்கர வண்டி, அல்லது சில்லுகள் பொருத்தப்பட்டு இயந்திர மூலமாகவோ வேறு வகையிலோ இயக்கப்படுகின்ற உபகரணமும் கருதப்படும்.

''சேதம் ஏற்படுத்தல்'' என்பது, அழிவு ஏற்படுத்தல், கழற்றுதல், உருக்குலைத்தல், புரட்டிப்போடுதல், அப்புறப்படுத்தல், வேறு ஏதேனும் விதத்தில் சேதமேற்படுத்தல், ஏதேனும் பாகத்தின் மீது சுவரொட்டி அல்லது துண்டுப் பிரசுரம் ஒட்டுதல் அல்லது வர்ணப்பூச்சு அல்லது வேறு ஏதேனும் பிசின் வகை அல்லது தார் பூசுதல் என்பன கருதப்படுவதோடு, ஏதேனும் பெயர்ப் பலகையில் எழுத்துகளை மாற்றுதல், அழித்தல், சுரண்டுதல்

அல்லது கழற்றுதல் உள்ளடக்க வேண்டுமென்பதோடு, மாநகர சபையால் அல்லது நகர ஆணையாளரினால் அல்லது நகர ஆணையாளரின் அதிகாரம் பெற்ற எவரேனும் உத்தியோகத்தரால் ஏதேனும் வீதியைத் திருத்துவதற்காக செய்விக்கப்படும் ஏதேனும் கருமம் இதில் உள்ளடக்கப்படல் ஆகாது.

"உரிமப் பத்திரதாரி" என்பது, இந்த துணைவிதிகளின் நிபந்தனையின் கீழ் உரிமப் பத்திரத்தினை பெற்றுக் கொண்டுள்ளவர் என்று பொருள்படுவதுடன், உரிய உரிமப் பத்தரத்தினை பெற்ற நிலையத்தின் பொறுப்பாளர் அல்லது முகாமையாளர் உரிய காலத்தில் உரிய இடத்தில் அலுவல்களில் நிருவாக பொறுப்பாளராக இருக்கின்றவர்.

"உரிமப் பத்திரம் பெற்ற நிலையம்" என்பது, இங்கு எந்த ஒரு துணை விதியின் நிபந்தனையின் கீழ் வழங்கப்பட்ட ஏதாவதொரு இடத்தின் உபயோகத்திற்கு உரிய இடம்.

"அதிகாரமுடைய உத்தியோகத்தர்" என்பது, உரிய செயலுக்காக நகர முதல்வரினால் "எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட" குருநாகல் மாநகர சபையின் அலுவலர் என்று பொருள்படும்.

"பரிசீலிப்பதற்கு அதிகாரம் கிடைக்கும் உரிய காலம்" என்பது, உரிய இடத்தில் வியாபார நடவடிக்கை அல்லது உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்கின்ற எந்த நேரமும் என்று பொருள்படும்.

6-645/7

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.